January 2020

தமிழ்

10-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

பொங்கல் மலர்

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

iதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

January 2020

சுவடி— 9
ஓலை— 11

உள்ளே...

வணக்கம் பல

ஒவ்வொரு நாடும் புகலிடம் தேடி வரும் அகதிகள் உரிய கவுரவத்துடன் வாழ்வதற்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பது அந்த தேசத்தின் தார்மீகக் கடமையாகும்! அவ்விதம் தவறுமானால் அந்த நாடு மனிதநேயத்தை மதிக்காத நாடாகும். ஆனால், இந்தியாவில் தற்போது செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டமானது, சிறுபான்மை மக்களிடையே பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கிறது.

உலகிலேயே மதச்சார்பற்ற மிகப்பெரிய ஜனநாயக நாடு என உலகளாவிய சிறப்பினைப் பெற்றிருக்கும் இந்தியாவில், அரசின் இந்தச் சட்டத்துக்கு எதிராக மக்கள் புரட்சி நடப்பதை உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

'ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!' என்ற கோட்பாடு உலக நாடுகளுக்கு எல்லாம் பொது என்றாலும், ஏனைய மேற்கத்திய நாடுகள் அதனை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை! எனவே, ஒவ்வொரு மதம் சார்ந்த மக்கள் பெருவாரியாக வாழும் நாடும், அந்தந்த மதத்தை தூக்கிப்பிடித்து முன்னிலைப்படுத்த முன்வருகின்றன. இந்தியா என்ற மிகப்பெரிய ஜனநாயக நாட்டில், மதச்சார்பற்ற கோட்பாடு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எட்டப்பட்டு விட்டது. 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்ற தமிழ்ச் சங்கப் புலவர் பூங்குன்றனாரின் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய வரிகள்! இன்று உலக நாடுகள் முழுதும் 'உலகமயமாக்கல்' என்ற சித்தாந்தத்தைத் தாங்கிப் பிடிக்கும் வேளையில், எல்லா நாடுகளும் அந்த ஒற்றை வரியைத் தங்களுடைய அடையாளமாக காட்டுவார்களேயானால் உலகம் முழுதும் மனித நேயம் மலரும்!

புத்தரிசிப் பொங்கலிட்டு, புத்தாடை இடையுடுத்தி, அயலாரை எல்லாரையும் அன்போடு அழைத்து இன்சுவை அடிசிலிடும் பழந்தமிழரின் மாண்பு... இன்றளவும் தமிழகத்திலும் தமிழர் சார்ந்த நிலத்திலும் குன்றாமல் குறையாமல் பொலிந்து வருவதை தமிழர்கள் பெருமையோடு சொல்லிக் கொள்வோம்! பொங்கல் திருநாள்... தமிழர்தம் பெருநாள்... உலக நாடுகளுக்கெல்லாம் மனிதநேயத்தை பறைசாற்றட்டும்! புவியெங்கும் புரட்சிப் பாடல் புத்தெழுச்சியுடன் ஒலிக்கட்டும்! —இந்த முழக்கத்துடன் மலர்கிற நமது 'அய் தமிழ்' பொங்கல் மலரை வரவேற்று மகிழுங்கள்! உலகத் தமிழர் அனைவருக்கும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

IThamil Monthly Magazine

Chief Editor & Publisher
Sivanesan

Editor
Khottravan

Editorial Team
Ganesan
Navani
Shanthakumar

Art Editor
Sriram

Art & Marketing Director
Jaya

Printers
Kanagam Pathippagam

Contact us:
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

எழும் கலகக் குரல்

இலங்கயில் மதம்
பிடிக்கும் பௌத்தம்

விடியலுக்கு ஏங்கும் ..

கண்டேன் ! ஹண்டே...

தமிழே தமிழே

உள்ளே

தாயுமானவர்

சிறுகதைகள்

சிவகாமியின் சபதம்

அறிவோம் தமிழர் பெருமை

எளிமயில் இனிமை

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

எழும் ! கலகக்

இந்தியாவில் நீதிதேவதை கண்கள் கட்டப்பட்டு காட்டாற்று வெள்ளத்தில் தள்ளப்படுகிறாளோ என்ற பெரும் கேள்வி உலக நாடுகளில் எழுப்படுவது போன்ற ஒரு தோற்றம் காட்டப்படுகிறது. இதன் காரண காரியங்களை அலசுகிறது இக்கட்டுரை.

நாடாளுமன்றத்தால் இயற்றப்படுகிற எந்தவொரு சட்டம் அல்லது சட்டத்திருத்தமும் அரசமைப்புச் சட்டக் கொள்கைகளின்படியே அமைய வேண்டும். அரசமைப்புச் சட்டத்துக்கு முரணாக அமையும் சட்டங்கள் செல்லாததாகக் கருதப்படும். நாடாளுமன்றத்தால் தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் மசோதா, முஸ்லிம்களைத் தவிர்த்துவிட்டு மற்ற மதங்களைச் சேர்ந்த சிறுபான்மையினருக்கு மட்டுமே சலுகை காட்டுகிறது. சமய வேற்றுமைகளை சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் இந்தத் திருத்தம், மதச்சார்பற்ற இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராக அமைந்துள்ளது என்று விமர்சிக்கப்படுகிறது. அரசமைப்புச் சட்டக் கூறு 14—ன்படி அனைவரும் சாதி, சமய, பாலின வேறுபாடுகள் இன்றி சமமாக நடத்தப்பட வேண்டும். ஆனால், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாவோ இச்சட்டக் கூறுக்கு எதிராக அமைந்துள்ளது என விமர்சிக்கப்படுகிறது.

இந்தச் சட்டத்தால் இந்திய முஸ்லிம்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கும்

உள்துறை அமைச்சர் அமித் ஷா, 'இந்தியா மதச்சார்பற்ற நாடாக இருந்தாலும் பாகிஸ்தான் மத அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டது, ஒருவேளை தேசப் பிரிவினை செய்யப்படாதிருந்தால், இன்று இப்படியொரு சட்டத்திருத்தத்துக்கே தேவை எழுந்திருக்காது' என்று பதில் அளித்திருக்கிறார். ஆனால் பாகிஸ்தான், வங்கதேசம் மட்டுமின்றி ஆப்கானிஸ்தானில் உள்ள சிறுபான்மையினருக்கும் இத்திருத்த மசோதா சலுகையளிக்கிறது.

அரசமைப்புச் சட்டக் கூறு 244 மற்றும் ஆறாவது அட்டவணையின்படி பழங்குடியினர் நிர்வாகப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள மிசோரம்,

மேகாலயா மாநிலங்களிலும் அஸ்ஸாம், திரிபுரா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளிலும் அங்கே செல்வதற்கு முன்பு அனுமதிச்சீட்டு பெறும் 'இன்னர் லைன் பர்மிட்' முறை பின்பற்றப்பட்டுவருகிறது. இதன்படி, இந்தியாவின் மற்ற பகுதிகளில் வசிப்பவர்கள் இந்த மாநிலப் பகுதிகளுக்குச் செல்ல முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும். அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து மாநிலங்களுக்குள் நுழைவதற்கு முன்கூட்டியே அனுமதி பெறும் முறையானது பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்துவருகிறது. குடியுரிமைச் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்ட டிசம்பர் 10 அன்று, மணிப்பூர் மாநிலத்துக்கும் இன்னர் லைன் பர்மிட் முறையை மத்திய அரசு நீட்டித்துள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் அந்நியர்களாக அறிவிக்கப்பட்டவர்கள், இந்திய குடியுரிமைத் திருத்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு மதப்பிரிவுகளில் எந்தவொன்றைச் சார்ந்தவராக இருந்தாலும் அவருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட மாட்டாது என்றும் திருத்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்ஸாமில் மேற்கொள்ளப்பட்ட தேசியக் குடியுரிமைப் பதிவேட்டுப் பணிகள், அருகமை நாடுகளிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தவர்களில் 19 லட்சம் பேர்களை அந்நியர்கள் என்று அடையாளப்படுத்தியுள்ளது. தலைமுறை தலைமுறையாக இந்தியாவில் வசிப்பவர்களும் கூட உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கவில்லை என்ற காரணம்காட்டி அந்நியர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பது

விமர்சிக்கப்பட்டுவருகிறது. எனினும், இதுவரையிலான பணிகள் ஏட்டளவில் மட்டுமே இருக்கின்றன. இந்நிலையில், அந்நியர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களில் இந்து, சீக்கிய, பார்ஸி, சமண, பௌத்த, கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்கள் இயல்பாகவே

விடுவிக்கப்படுவார்கள். அந்நியர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களில் முஸ்லிம்கள் மட்டுமே எசியிருப்பார்கள்.

குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரானவர்களை 'அவர்களின் ஆடைகளே அடையாளம் காட்டிவிடும்' என்று தேர்தல் பிரச்சாரம் ஒன்றில் பேசினார் பிரதமர் நரேந்திர மோடி. அதற்கு அடுத்த நாளே, 'இந்தியர்கள் யாரும் இந்தச் சட்டத்துக்காக வருத்தப்படுவதற்கு எதுவுமில்லை' என்று ட்விட்டரில் கருத்து தெரிவித்திருக்கிறார். இந்தியர்கள், குடியுரிமைச் சட்டத் திருத்தத்தைப் பற்றி பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று அரசாங்கம் கூறுவதைக் கவனமாகப் பரிசீலிக்காமல் அப்படியே புறந்தள்ளுவது சரியானது அல்ல. இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றிய விமர்சனங்களும்கூட அது குடியுரிமைக்கான அனுகூலங்களை அளிக்கிறது என்பதை மறுக்க முடியாது. இச்சட்டத் திருத்தம்

யாரிடமிருந்தும் எந்த உரிமையையும் பறிக்கவில்லை; ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசத்தில் தொடர்ந்து தொந்தரவுகளுக்கு ஆளாகிவரும் மதச் சிறுபான்மையினர் குடியுரிமையைப் பெறுவதற்கான சலுகைகளையே அளிக்கிறது.

ஆனால், நிச்சயமாக இந்தச் சட்டத் திருத்தம் அவ்வாறான சலுகையை மேற்கண்ட நாடுகளில் தொந்தரவுக்கு ஆளாகிவரும் அஹமதியாக்கள் அல்லது ஷியாக்களுக்கு அளிக்கவில்லை. தொந்தரவுகளை அனுபவிக்கும் இந்தியர் அல்லாதவர்களில் முஸ்லிம்கள் மீது மட்டுமே பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் இந்தியர்கள் அல்லது இந்திய முஸ்லிம்களுக்கு என்ன தொடர்பு இருக்கிறது? உள் துறை அமைச்சர் அமித் ஷா பல தடவை சுட்டிக்காட்டியிருப்பதுபோல, குடியுரிமைச் சட்டத் திருத்தத்தில் முஸ்லிம்களைப் பற்றி குறிப்பிடப்படவே இல்லை. அப்படியிருக்கும்போது இந்தச் சட்டத் திருத்தம் இந்திய முஸ்லிம்களைக் குறிவைத்து இயற்றப்பட்டதாக ஏன் சொல்ல வேண்டும்?

இதற்கான பதிலுக்கு, உள் துறை அமைச்சரின் பதில்களைத் தாண்டி நாம் வேறு எதையும் பார்க்க வேண்டியதில்லை. அமித் ஷா தொடர்ந்து இரண்டு விஷயங்களை அழுத்தம் கொடுத்துப் பேசிவருகிறார். ஒன்று, அஸ்ஸாமில் மேற்கொள்ளப்

பட்டுவரும் தேசிய குடிமக்கள் பதிவேட்டு நடைமுறையை இந்தியக் குடிமக்களுக்கான தேசியப் பதிவேடு என்ற பெயரில் நாடு முழுவதற்கும் அவர் விரிவுபடுத்தப்போகிறார். இரண்டாவதாக, அது எந்த வரிசையில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது என்பது முக்கியமானது. அவர் முதலில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்தையும், அதன் பிறகு இந்தியக் குடிமக்களுக்கான தேசியப் பதிவேட்டையும் நடைமுறைப்படுத்தப்போகிறார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் இந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்ஸிக்கள் அனைவருடைய குடியுரிமையையும் பாதுகாத்து அதை உறுதிப்படுத்தும் பாதுகாப்பு வலையாக இந்தக் குடியுரிமைச் சட்டத் திருத்தம் இருக்கும். அஸ்ஸாமின் தேசிய குடியுரிமைப் பதிவேட்டில் சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள் என்று வகைப்படுத்தப்பட்ட லட்சக்கணக்கான இந்துக்கள் மட்டுமின்றி, இந்தியக் குடிமக்களுக்கான தேசியப் பதிவேடு நடைமுறைக்கு வந்தால், நாடு முழுவதும் அந்நியர்கள் என வகைப்படுத்த வாய்ப்புள்ளவர்களுக்கும் அது பாதுகாப்பை அளிக்கும்.

அவர்கள் அனைவரது குடியுரிமையும் முதலில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்தின் வாயிலாகப் பாதுகாக்கப்படும். முஸ்லிம் அல்லாதவர்கள் அனைவருக்கும் குடியுரிமை தொடர்பாகத் தேவைப்படும் ஆவணங்கள் அளிக்கப்படும். அதன் பிறகே, இந்தியக் குடிமக்களுக்கான தேசியப் பதிவேடு நடைமுறைப்படுத்தப்படும். குடிமக்கள் பதிவேடு தேவையில்லை என்றால், குடியுரிமைச் சட்டத் திருத்தத்துக்கு எந்தத் தேவையும் இருக்காது. குடிமக்கள் பதிவேட்டின் நோக்கமே இந்தியாவில் வசிப்பவர்களைக் குடிமக்கள் என்றும், சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்றும் இரண்டு வகையினராகப் பிரிப்பதுதான். குடியுரிமைச் சட்டத் திருத்தத்தின் நோக்கமோ, குடிமக்கள் பதிவேடு நடைமுறைக்கு வருவதற்கு முன்பே குடியுரிமைச் சட்டத் திருத்தத்தில் குறிப்பிடப்படாத முஸ்லிம்களைத் தவிர்த்து மற்ற இந்தியர்கள் அனைவரின் குடியுரிமையையும் முன்கூட்டியே பாதுகாப்பதாகும்.

குடியுரிமைச் சட்டத் திருத்தத்துக்கு எதிரான தீவிரப் பேராட்டங்களால் புரியாமல் தவிக்கும் ஒவ்வொரு இந்தியருக்கும் அவர்களது சில எளிய கேள்விகளுக்கு இந்த நாடு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது: எப்போது என்ன நிகழும்; இந்தியாவில் வசிக்கும் இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்ஸிக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் குடியுரிமைப் பதிவேட்டிலிருந்து விடுபட்டாலும் அவர்களுக்குக் குடியுரிமைச் சட்டத் திருத்தம் குடியுரிமையைப் பெற்றுத்தந்துவிடும் என்றால் அதற்கு நன்றி சொல்வோம். முஸ்லிம்கள் மட்டுமே குடியுரிமையற்றவர்களாக எசுவார்களா? நாடற்ற இந்த மக்கள், தடுப்பு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்களா அல்லது, முஸ்லிம் அல்லாதவர்கள் முக்கியப் பதவிகளில் அங்கம் வகிக்கும் நாட்டில் அவர்கள் கீழான நிலைக்குத் தள்ளப்படுவார்களா?

குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அரசு அறிவித்தாலும்கூட, இந்தச் சட்டத்தின் மிக முக்கியமான அம்சமே இந்த நாட்டின் சமூக நல்லிணக்கத்துக்கு ஓர் அச்சுறுத்தல்தான். வெறுப்பைக் கக்கும் பேச்சுகளுக்கு அது மிகப் பெரும் காரணமாக இருக்கிறது. இனப்படுகொலைத் தடுப்பு நடவடிக்கைகளில் உலகின் முன்னணி வல்லுநர்களாக விளங்குபவர்கள், வெறுப்பான பேச்சுகளையே இனப்படுகொலைகளுக்கான முதன்மையான அறிகுறியாகக் கருதுகிறார்கள்.

ஒரு அரசியல் கருவியாக, குடியுரிமைச் சட்டத் திருத்தம் — குடிமக்கள் பதிவேடு இரண்டும் வெறுப்பான பேச்சை, குறிப்பாகத் தேர்தல் நேரத்திலாவது உருவாக்கப் போதுமானவை. ஒரு நிர்வாகக் கருவியாக, இனப்படுகொலைகளுக்கான சூழ்ச்சிகளுக்கு எதிரான அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புகளை அவை பலவீனப்படுத்தவும் செய்யும்.

இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேசியக் குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று நடைமுறைக்கு வந்ததற்கு முன்னும், பின்னுமாக நாடெங்கும் எதிர்ப்புப் போராட்டங்களும், கலவரங்களும் மூண்டெழுந்துள்ளன. இந்தச் சட்டத்தை செயல்படுத்த மாட்டோம் என மேற்கு வங்கம், கேரளம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், பசாப் மாநில அரசுகள் அறிவித்துள்ளன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை நோக்கங்களுக்கு முற்றிலும் முரணான வகையில் இந்தச் சட்டம் அமைந்துள்ளது. மனித உரிமைகளை முற்றிலும் மறுக்கும் வகையிலும் இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஹிந்து, தேசியம் என்ற தனது கோட்பாட்டினை அனைவரின் மீதும், ஆட்சி அமைப்பின் மீதும் திணிக்கும் வகையில் இந்தச் சட்டம் உள்ளது.

அரசியல் சட்டம் 14—ஆவது பிரிவில், 'இந்தியாவுக்குள் வாழும் எந்தவொரு மனிதருக்கும் சம உரிமையையும், உரிய பாதுகாப்பையும் அளிப்பதற்கு அரசு மறுக்கக் கூடாது" என்பது அழுத்தத் திருத்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு எதிராக இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

மக்களிடையே மதரீதியான பிளவுகளை இது உருவாக்கும். இந்தியாவைச் சுற்றி பல நாடுகள் உள்ளபோதும் பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய மூன்று முஸ்லிம் நாடுகளை மட்டுமே தேர்ந்தெடுத்து அங்கு வாழ முடியாத நிலைமையில் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து வந்துள்ள ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சிக்கள் ஆகியோர் மட்டுமே இந்தியக் குடியுரிமை பெறுவதற்குத் தகுந்தவர்கள் என இந்தச் சட்டம் வரையறுத்ததோடு, முஸ்லிம்களை இந்தப் பட்டியலிலிருந்து புறக்கணித்துள்ளது, மதச்சார்பற்ற தன்மைக்கு எதிரானதாகும்.

அண்டை நாடுகளிலிருந்து குடியேறிய முஸ்லிம்களை வெளியேற்றுவதும், இனி யாரும் வரவிடாமல் தடுப்பதும்தான் இந்தச் சட்டத்தின் நோக்கமாகும். இது இந்தியாவில் வாழும் 20கோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தத்துக்கு எதிராக ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் கொந்தளித்துப் போராடுகிறார்கள். வடகிழக்குப் பகுதியில் சிறு சிறு இனக் குழுக்களாக உள்ள மக்கள் 200—க்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுபவர்கள். காஷ்மீர் மக்களுக்குச் சிறப்புச் சலுகைகளை அளித்த 370—ஆவது பிரிவு நீக்கப்பட்டு, மத்திய அரசின் நேரடி ஆளுகைக்குட்பட்ட இரண்டு சிறு மாநிலங்களாக அது பிரிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டதைப் போல,

தங்கள் நிலை ஆகிவிடும் என வடகிழக்குப் பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள நியாயமான அச்ச உணர்வுதான் இந்த கொந்தளிப்புக்கு காரணமாகும்.

உலக நாடுகள் பலவற்றிலுமிருந்தும் பல்வேறு காரணங்களினால் வெளியேறி பிற நாடுகளில் அடைக்கலம் புகுந்திருப்பவர்கள் அகதிகள் என அழைக்கப்படுகிறார்கள். அகதிகளைப் பேணவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கும் ஐ.நா. அகதிகள் ஆணையகம் உருவாக்கப்பட்டுள்ளது. உலகில் இவ்வாறு தாய் நாட்டை விட்டு வெளியேறி பிற நாடுகளில் அடைக்கலம் புகுந்தவர்களுக்குத் தேவையான குடியிருப்பு, வாழ்க்கைச் செலவு, பள்ளிகள், மருத்துவமனைகள் போன்ற எல்லாவற்றையும் அகதிகள் ஆணையம் பொறுப்பேற்றுக் கொள்கிறது.

ஆனால், ஐ.நா. அகதிகள் ஆணைய உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திடவில்லை.இதன் காரணமாக, இந்தியாவில் தசம் புகுந்திருக்கக் கூடிய பல்வேறு நாட்டு அகதிகளைப் பராமரிக்கவேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு ஏற்பட்டு, பெயரளவுக்கு ஏதோ உதவியைச் செய்கிறது. இந்த அமைப்பிடம் இவர்களை ஒப்படைத்தால் இந்திய அரசு செய்வதைவிட பல மடங்கு அதிகமான உதவியைச் செய்வதற்கு ஐ.நா. ஆணையம் தயாராக உள்ளது. ஆனால், இந்திய அரசு பிடிவாதமாக இதை ஏற்க மறுக்கிறது.

இந்திய குடிமக்களில் பலர் வேலைவாய்ப்புக்காகப் பல்வேறு நாடுகளில் குடியேறி குடியுரிமை பெற்றுள்ளனர். வெளிநாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்கள் ஒருபோதும் தங்களின் தாயகத்தை மறப்பதில்லை. உணர்ச்சிபூர்வமாக தாயகத்துடன் அவர்கள் கொண்டுள்ள உறவு என்றும் அறுக்க முடியாததாகும். தங்களின் அறிவாற்றல், திறமை ஆகியவற்றின் மூலம் புகுந்த நாட்டில் பாராட்டப்படுகிறார்கள்.

பிறந்த நாட்டுக்கும் பெருமை தேடித் தருகிறார்கள். இவர்கள் குறித்து பெருமிதம் கொள்வதற்குப் பதில், அவர்களைப் புறக்கணித்து ஒதுக்கும் மனப்போக்கு இந்திய அரசுக்கு உள்ளது. இவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக உள்ளது.

இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருக்கும் அகதிகளில் இரு வகையினர் உண்டு. பாகிஸ்தான், வங்கதேசம், திபெத் போன்ற அண்டை நாடுகளிலிருந்து மதவெறி, இனவெறித் தாக்குதல்களுக்கு அசி உயிர் தப்பி இந்தியாவுக்கு ஓடி வந்திருப்பவர்கள். இனி ஒருபோதும் அந்த நாடுகளுக்குத் திரும்பிப் போக முடியாது, அத்தகையவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கலாம்.

மற்றொரு பிரிவினர், தங்கள் தாயகத்தில் நிலவும் இனவெறி, படுகொலை, போர்ச் சூழல் நிலைமையில் இந்தியாவுக்குத் தப்பி வந்தவர்கள். குறிப்பாக, ஈழத் தமிழர்கள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள். மொழியாலும், பண்பாட்டாலும் தமிழகத்தோடு அவர்கள் உறவு கொண்டிருந்தாலும் அவர்களின் வேர்கள் இலங்கையில்தான் உள்ளன.

இலங்கையின் வடகிழக்குப் பகுதியின் பூர்வகுடிகளாக அவர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தவர்கள்; அந்த மண்ணில்தான் அவர்களின் சொத்துகள் உள்ளன. எனவே, இவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கவேண்டும். மாறாக, இவர்களுக்கு இந்தியக் குடியுரிமை மட்டும் வழங்கப்படுமானால், சிங்கள அரசு இவர்களை ஒருபோதும் தனது நாட்டுக்குத் திரும்ப அனுமதிக்காது.

இந்தியாவில் அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர்கள், சிறை முகாம்களில் இருப்பது போன்ற அவல வாழ்வுதான் வாழ்கிறார்கள். அவர்கள் முகாம்களுக்கு வெளியில் சென்று வேலை செய்யவோ அல்லது சிறு சிறு வணிகங்களை மேற்கொள்ளவோ அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களின் பிள்ளைகள் கல்வி கற்கவோ, வேலைவாய்ப்புகளைப் பெறவோ, தொழில் புரியவோ அனுமதிக்கப்படுவதில்லை.

முகாம் அதிகாரிகளின் முழுமையான கண்காணிப்பில் அவர்கள் இருக்க வேண்டும். அவர்கள் அனுமதியில்லாமல் எங்கும் செல்ல முடியாது. இந்திய அரசு அளிக்கும் உதவி அவர்களுக்குப் போதுமானதல்ல. எனவே, ஐ.நா. அகதிகள் ஆணையத்தின் பராமரிப்பில் அவர்களை ஒப்படைக்கவேண்டும் அல்லது அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கி நமது குடிமக்களுக்கு உரிய உரிமைகளையும், சலுகைகளையும் அளிக்க வேண்டும்.

பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

இலங்கை அரசும் இரட்டைக் குடியுரிமை அளிக்கிறது. இப்போது இலங்கை குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கோத்தபய ராஜபட்ச அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்; இரட்டைக் குடியுரிமை இருந்ததால், அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்து இலங்கைக் குடிமகன் என்ற முறையில் தேர்தலில் போட்டியிட்டு அவர் அதிபராகியுள்ளார். அவர் பெற்ற இந்த உரிமையை ஈழத் தமிழர்களுக்கு மறுக்க முடியாது. எனவே, ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமையை இந்திய அரசு வழங்க முன்வர வேண்டும்.

மேலே சொல்லப்பட்டதுபோல, அரசமைப்புரீதியான எந்தத் தர்க்கத்துக்குள்ளும் குடியுரிமைச் சட்டத்திருத்த மசோதா வரவில்லை. ஆனால், குதர்க்கமான அரசியல் தர்க்கம் அதில் இருக்கவே செய்கிறது. சட்டத்தின்படி இந்தியாவை இந்து ராஷ்டிரமாக்குவதற்கான முதல் முயற்சி இது. இது அரசமைப்புக்கு ஒவ்வாத சட்டம் என்று நீதித் துறை வலியுறுத்திக் கூற வேண்டும். அப்படிச் செய்யாமல்போனால், இது முடிவாக அல்ல; இதுபோன்ற சட்டரீதியான நகர்வுகளுக்கு இது தொடக்கமாகவே அமையும். காலப்போக்கில் நாம் அறிந்த அரசமைப்பையும் முடிவுக்குக் கொண்டுவந்துவிடும்.

எப்படியிருப்பினும், ஒரு சட்டம் இயற்றப்படும்போது, அதன் சாதக பாதகங்கள் குறித்த அலசல் பார்வையும், மக்களின் கருத்துக்களும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அதுவே உண்மையான மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பாகும். ஆனால் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்டமானது, எதிர்க்குரல் எழுப்புவோரின் குரல்வளையை அறுக்கும் வேலையைச் செய்கிறது என்பதிலேயே தெரிகிறது இதில் இருக்கும் சூக்குமம்!

எந்த நாடானாலும் மக்களாட்சி என்ற பெரில் சர்வாதிகாரத்தைக் கையில் எடுக்கும் போக்கு, உடனடியாகக் களையப்பட வேண்டும் என்பதில் மானுட தர்மம் மிகுந்தவர்களுக்கு எவ்வித சந்தேகமும் இருக்க வாய்ப்பில்லைதானே!!

கருத்துப் ப(ர)டம்



சொல்றாங்க...

கேடுகெட்ட அ.தி.மு.க அரசுக்கு ஜாமீன் அளிக்கிறது பா.ஜ.க."

–ஸ்டாலின்

(ஆனாலும் உங்களுக்கு இம்புட்டு கோவம் ஆகாது! அதெல்லாம் சரி, 'கேடுகெட்ட' என்ற வார்த்தையை 'நீங்க' பயன்படுத்தலாமா?)

"ஒடுக்கப்பட்ட மக்களை அடிமையாக்குவார்கள். பெண்களின் உரிமைகள் பறிபோகும்! இந்தியாவைக் காப்பாற்ற ஓடி வாருங்கள்"

–நடிகர் சித்தார்த்

(தம்பி,இப்படி திடுதிப்புன்னு கூப்பிட்டீங்கன்னா...நடிக்கத்தான் கூப்பிட்டீங்கன்னு நினைச்சு பொண்ணுங்க ஓடி வந்துடப் போவுது! அக்கம்பக்கம் கொஞ்சம் பார்த்து பேசுங்க!)

"சினிமா எனது தொழில்! அரசியல் நான் மக்களுக்கு செய்யும் சேவை! கட்சி நடத்தத்தான் நான் மீண்டும் சினிமாவில் நடிச்சு சம்பாதிக்க வேண்டி உள்ளது!"

–சரத்குமார்

(இப்போத்தான் அவர் தூக்கம் கலைஞ்சு சில நாட்களாகுது! இனிமே நிம்மதியா தூங்கவே கூடாது! நீ விடாம கத்து கைப்புள்ளே!)

"நான் சவால் விடுகிறேன்! குடியுரிமை திருத்தச் சட்டத்தில் 'குடியுரிமை பறிக்கப்படும்' என்ற வார்த்தை இடம்பெற்றிருப்பதை ராகுல் காந்தி நிரூபிக்க முடியுமா?"

–அமித் ஷா

(என்ன வார்த்தை சொல்லிப்புட்டீங்க உள்துறையாரே! ஒரு பச்சை மண்ணைப் பார்த்து இப்படி கேட்க உங்களுக்கு எப்படியா மனசு வந்தது?)

இலங்கையில் மதம்

இலங்கையில்...இனி என்ன?

இலங்கையின் 8—ஆவது அதிபராக கோத்தபய ராஜபட்ச பதவியேற்ற பின் இந்தியாவுக்கு வந்து திரும்பியுள்ளார். இலங்கையின் இரண்டு கோடிக்கு மேல் உள்ள மக்கள்தொகையில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டு, 69,24,255 வாக்குகள் பெற்று சஜித் பிரேமதாசவை தோற்கடித்து கோத்தபய வெற்றி பெற்றுள்ளார்.

தென் இலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை சிங்களர்கள் இவரை ஆதரித்தனர். இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களில் 16 மாவட்டங்களில் முழுமையான ஆதரவு கோத்தபயவுக்கு இருந்தது. தமிழர்களின் பகுதியான யாழ்ப்பாணம், வவுனியா, திரிகோணமலை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, நுரேலியா முதலான பகுதிகளில் 4,52,842 வாக்குகள்தான் சஜித்துக்குக் கிடைத்தன. தமிழர்களுடைய ஆதரவு இருந்தும் அவர் தோல்வியைத் தழுவினார்.

இதற்கு முந்தைய தேர்தல்களில் தமிழர்கள், விடுதலைப் புலிகளின் ஆதரவோடுதான் பிரேமதாச, சந்திரிகா, ரணில், ராஜபட்ச, மைத்ரிபால சிறீசேனா போன்றோர் வெற்றி பெற்றனர். கடந்த காலங்களில் தமிழர்களுடைய வாக்குகள்தான் அதிபர் தேர்தல் வெற்றியை நிர்ணயித்தன. ஆனால், அண்மைக்கால தேர்தல் எதிர்மறை மாற்றங்களாகி விட்டன.

இந்தத் தேர்தலில் வாக்குப்பதிவின்மூலம் தமிழர்களுடைய நலன் எப்படியிருக்கும் என்று சில அச்சங்களும், ஐயங்களும் நமக்கு ஏற்படுகின்றன. தமிழர்கள், முஸ்லிம்கள் தனக்கு வாக்களிக்கவில்லை என்ற தனது அதிருப்தியை அதிபர் கோத்தபய ராஜபட்ச வெளிப்படுத்தினார். கொழும்பு நகருக்கு வெளியில் அனுராதபுரத்தில் நடந்த தனது பதவியேற்பை ஓர் எச்சரிக்கை



கே.எஸ்.இராதாகிருஷ்ணன்

சமிக்ஞையாக கோத்தபய வெளிப்படுத்தினார். எப்படியெனில், ராஜராஜனின் வழிவந்த தமிழ் மன்னன் எல்லாளனை சிங்கள மன்னன் துட்டகம்மன் தோற்கடித்த நிகழ்வை மனதில் கொண்டுதான் வேண்டுமென்று அங்கே தன்னுடைய முதல் அரசு நிகழ்வாக நடத்தினார்.

மேலும், வெற்றி பெற்றவுடன் தமிழர் பகுதியில் பீதியைக் கிளப்பக்கூடிய வகையில் ராணுவம்,



காவல் துறையின் நடமாட்டம் அதிகரித்த வண்ணம் உள்ளது. இனி, தமிழர்களின் பாதுகாப்புக்கும், நலனுக்கும் செய்ய வேண்டிய நடவடிக்கை என்ன என்பதைக் கவனிக்க வேண்டியது அவசரமும், அவசியமும் ஆகும். இந்தியா மட்டுமல்லாமல், உலக சமுதாயமும் இந்த விஷயங்களில் தங்களுடைய ஆதரவையும், குரலையும் எழுப்ப வேண்டும்.

ஈழத் தமிழர்கள் தொடர்ந்து 10

ஆண்டுகளாக வலியுறுத்தி வரும் பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியுமா? 1. இன அழிப்பைச் செய்த மகிந்த ராஜபட்ச மீது உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து பன்னாட்டு நீதிமன்ற பொறிமுறையில் சுதந்திரமான, நம்பகமான விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும். அந்த விசாரணையில் ஈழத்தில் இன அழிப்பு நடந்தது என்று நிரூபிக்கப்படும். அந்தச் சூழலில்தான் தனி வாழ்வு என்ற தந்தை செல்வாவின் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு மேலும் சர்வதேச அளவில் வலு சேரும்.

2. சர்வதேச கண்காணிப்பில் ஈழத்தமிழர் விரும்பும் தீர்வான தனி வாழ்வா, சக வாழ்வா, தனி நாடா, சுயநிர்ணய உரிமை, ஒரு நாடு இரு தேசங்கள் என்ற

பிரச்னைகள் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இது நடைமுறைக்கு வரவேண்டுமெனில் சர்வதேச அளவில் ஆதரவு தேவை. ராஜபட்ச மீது விசாரணை நடத்தி இனஅழிப்பு ஈழத்தில் நடந்தது என்று நிரூபிக்கப்பட்டால், பொது வாக்கெடுப்பு நடத்துவது மிகவும் எளிதாகிவிடும். இதுதான் அடிப்படையாகச் செய்ய வேண்டிய பணிகள்.

3. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களை பீதியில் ஆழ்த்தும் சிங்கள ராணுவத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

4. இறுதிப் போர் 2009—இல் நடந்தபோது கைது செய்யப்பட்டவர்கள், காணாமல் போனவர்களை உடனடியாக விடுவித்து அவருடைய உறவினர்களிடம் சேர்க்க வேண்டும்.

5. தமிழர்களுடைய விவசாய நிலங்களையும், வீடுகளையும் சிங்களர்கள் கபளீகரம் செய்துவிட்டனர். அதை முறையாகத் தமிழர்களிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

7. ஒப்புக்காக ஏமாற்றும் அதிகாரமற்ற மாகாண கவுன்சில்களுக்கு நில நிர்வாகம், நில வருவாய், காவல் துறை, மீன்பிடி நிர்வாகம் என முக்கிய அதிகாரங்களை வழங்காமல் இருப்பது தமிழர்களை வசிக்கின்ற நடவடிக்கையாகும். மாகாண கவுன்சில் என்பது ஏற்புடைய வாதமில்லை என்றாலும், நிர்வாகம் என்று ஒப்புக்கு ஏற்றுக்கொண்ட வகையில் இதன் உரிமைகளைப் பெற வேண்டிய கட்டாயத்தில் ஈழத்தமிழர்கள் உள்ளனர். ஆக்கப்பூர்வமான எண்ணங்களும் நடவடிக்கைகளும் தான் இன்றைக்கு ஈழப் பிரச்னைகளுக்கான தீர்வை வழங்கும்.

இந்த நிலையில், இந்தியாவுக்கு வந்த கோத்தபய ராஜபட்ச பிரதமர் மோடியைச் சந்தித்த பிறகு, இலங்கைக்குக் கடனாக 45 கோடி டாலர் (சுமார் ரூ.3,200 கோடி) இந்தியா வழங்கியுள்ளது. இதில் 40 கோடி டாலர்(சுமார் ரூ.2,800 கோடி) இலங்கையின் உள்கட்டமைப்பு — மேம்பாட்டுக்கும், 5 கோடி டாலர் (சுமார் ரூ.400 கோடி) இலங்கையின் பாதுகாப்பு என்ற பெயரில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தவும் வழங்கப்பட்டது. இலங்கையில் எங்கே பயங்கரவாதம் இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், வடக்கு — கிழக்கு மாநிலங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும், 2009 இறுதிப் போர் முடிந்தவுடன் 46,000 வீடுகள் தமிழர்களுக்குக் கட்டப்படும் என அப்போது அறிவிக்கப்பட்டாலும் 14,000 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன; கடந்த 10 ஆண்டுகளாக நடந்துவரும் வீடு கட்டும் பணி ஆமை வேகத்தில் நடைபெறுகிறது. இதுவரை இருந்த சிங்கள அரசுகளுக்கு இந்தத் திட்டத்தில் பெரிய ஆர்வம் இருந்ததில்லை.

இந்து மகா சமுத்திரம் அமைதி மண்டலமாக அமைய வேண்டும். இலங்கையின் தான்தோன்றித்தனத்தால் இந்து மகா சமுத்திரத்தில் சீனா, டீகோகார்சியா தீவில் அமெரிக்கா, திரிகோணமலை அருகே ஜப்பான், இந்தியப் பெருங்கடலின் மேற்குப்புறத்தில் பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளின் ஆதிக்கம் உள்ளது. இது இந்தியாவுக்கு நல்லதல்ல. புவியரசியலில் சீனா தனது வர்த்தகத்தை ஆப்பிரிக்க, கென்யா, தென்னாப்பிரிக்காவில் உள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளில் பெருக்கிக் கொள்ள பட்டுவழிச் சாலையை இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் உதவியால் அத்துமீறி பயன்படுத்திக் கொண்டது.

அதேபோன்று அம்பன்தோட்டா துறைமுகத்தைப்

தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

indian express foods

இட்லி / தோசை மா

இலண்டனில் மட்டுமே கிடைக்கும்

indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

பயன்படுத்திக்கொள்ள சீனாவுக்கு ராஜபட்ச அனுமதி கொடுத்தார். ரணில் விக்கிரமசிங்க கடன் பெற்று 99 ஆண்டுகள் சீனாவிற்கு குத்தகைக்கு விட்டுவிட்டார். இத்தகைய நிலை இந்தியாவின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல. அம்பன்தோட்டா துறைமுகத்தின் 99 ஆண்டுகால குத்தகையை மறுபரிசீலனை செய்வோம் என்று தில்லிக்கு அண்மையில் கோத்தபய வந்தபோது அறிவித்துள்ளார்; இந்த நிலைப்பாட்டில் முக்கியத்துவம் இருக்குமா என்பது கேள்விக்குறி.

'ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் மாற்றம் செய்வோம்' என்று அவர் கூறியதாகத் தெரிகிறது. அதேபோல, திரிகோணமலை கேந்திரப் பகுதி தொடர்பாக முக்கியமான சிக்கலான விஷயங்களும் உள்ளன. அதிலும் குறிப்பாக, சீனா, ஜப்பான், அமெரிக்கா முதலான நாடுகள் ஆதிக்கம் செலுத்த காய்களை நகர்த்துகின்றன.

இந்தியாவும் திரிகோணமலை பகுதியை சில வர்த்தகத் தொழில் முனைப்புக்காக கவனத்தைச் செலுத்துகிறது. நீண்ட நாள்களுக்குப் பிறகு யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் செயல்பட இந்தியாவுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியது. சம்பூர் மின் உற்பத்தி ஒப்பந்தத்தையும் கிடப்பில் போட்டு இந்தியாவுக்குப் பதில் சொல்லாமலேயே மௌனம் காக்கிறது இலங்கை. கொழும்பு — யாழ்ப்பாணம் இடையே ரயில் பாதையை இந்தியா சீரமைத்துத் தந்துள்ளது; இதற்கு வேறு வழியில்லாமல் கடந்த காலத்தில் மைத்ரிபால சிறீசேனா அனுமதி வழங்கினார்.

இலங்கை இறுதிப் போருக்குப் பிறகு, இந்தியா வழங்கிய நிதி சரியாக தமிழர்களுக்குச் சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தியா வழங்கிய நிதியில் ராஜபட்ச காலத்தில் அவருடைய தொகுதியின் அருகே காலியில் சிங்களப் பகுதியில் பெரிய ரயில் நிலையம் கட்டப்பட்டு, அன்றைக்கு மத்திய வெளிவிவகாரத் துறை அமைச்சராக இருந்த எஸ்.எம். கிருஷ்ணா திறந்து வைத்தார் என்றால் எங்கே போய் முட்டிக் கொள்வது? தமிழர்களின் நலனுக்காக இந்தியா வழங்கிய நிதியை சிங்களர்களுக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்ற கேள்வியைக்கூட இலங்கையிடம் இந்திய அரசு எழுப்பவில்லை.

தமிழக மீனவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று இரு நாட்டு தலைவர்கள் சந்திப்பின்போது முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். அதற்கு இலங்கை கட்டுப்பட்டு இந்திய மீனவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரும் செயல்திட்டங்கள் உள்ளனவா என்பதும் தெரியவில்லை.

இத்தகைய நிலையில் இலங்கையில் முள்ளிவாய்க்கால் போரில் தமிழர்களின் அழிவுக்குக் காரணமான கோத்தபயே ராஜபட்ச அதிபர்; மகிந்த ராஜபட்ச பிரதமர்; பொறுத்திருந்து பார்ப்போம். இலங்கையில் தமிழர்களுக்குப் பாதுகாப்பான நிலையைக் கண்காணிப்பது தொப்புள் கொடி உறவு மட்டுமல்லாமல், புவியரசியல் நிலையிலும், பன்னாட்டு அரசியல் ராஜதந்திர நிலையிலும் இதய சுத்தியோடு தனது கடமை என்பதை இந்திய அரசு உணர வேண்டும்.

விடுகதை

வாய்திறந்து பேசுமொழி
உவப்புடனே கேட்கையில்
வாய்மூடி பேசுமொழி
உளத்துள்ளே கேட்காதோ?

கண்டதெல்லாம்
மறைந்திடும் நாள் வாய்த்திடுகையில்
மறைந்ததெல்லாம்
கண்டிடும் நாள் வாய்க்காதோ?

வந்தது போவதும்
போனது வருவதும்தான்
வாடிக்கையாவதையே
வேடிக்கைப் பார்க்கின்றோம்!

கால் நனைத்தே திரும்புகின்ற
அலையென்ன கடலின் நிலையா?
எரிமலையும் அதனுள்ளே
உறங்குதுவே ஒரு சிலையாய்!

முட்டிமுளைக்குமுன்னே விதையும் குப்பை!
வெடித்து சிதறுமுன்னே எரிமலை
மணல்முகடு!
பறக்குமுன்புவரை வண்ணத்தியும் புழு!
மெய்ப்பிக்கும் வரை எல்லாமும் கற்பனை!

இருக்கிறதென்று நினைக்கையில்
எதுவுமில்லை என்றாகிறது!
எல்லாம் முடிந்தபின்னும்
எதுவோ ஒன்று இருக்கிறது!

விடுகதைக்கு விடையுண்டு!
வாழ்க்கைக்கு அதுவுமில்லை!
விடை என்று கண்டதெல்லாம் கதை!
கதை என்று சொன்னதெல்லாம் விடை!

கொற்றவன்

விடியலுக்குக் காத்திருக்கும் திபெத்தியர்கள் !

திபெத் தனி நாடா அல்லது சீனாவின் ஒரு பகுதியா? இப்படிக் கேள்வி எழுப்பும் மனநிலைக்கு திபெத்திய மக்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் எழுப்பிய கேள்விக்கு இன்று வரை பதிலே இல்லை.

பௌத்த மதம் தழைத்தோங்கி இருக்கும் திபெத்தில், கடந்த 70 ஆண்டுகளாக சீனாவுக்கு எதிராக தங்களது போராட்டத்தை திபெத்தியர்கள் முன்னெடுத்து வருகிறார்கள். இந்த நீண்ட நெடிய போராட்டம் எதற்காக? சற்றேறக் குறைய 1950—ஆம் ஆண்டு காலகட்டத்திலிருந்து இந்தப் போராட்டம் இன்று வரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

சீனாவின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், திபெத் ஒரு தனி சுதந்திர நாடு என்றும் கூறி திபெத்தியர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதன் விளைவாக, 17 அம்சங்கள் கொண்ட உடன்படிக்கை ஒன்றை 1951—இல் திபெத் அரசுடன் சீனப் படை மேற்கொண்டது. அதன்படி திபெத்தில் கட்டுப்பாடுகளற்ற அதிகாரத்தை சீனப் படை பெற்றது.

திபெத்தின் பிரபுக்களும், பாட்டாளிகளும் சீனப் படைக்கு ஒத்துழைத்தாலும், நிலச் சீர்திருத்தங்களாலும், புத்த மதம் தொடர்பான சண்டைகளாலும் பல வன்முறைகள் வெடித்தன. 1959—ஆம் ஆண்டு வரை பல போராட்டங்களை மேற்கொண்டும், அவை எந்தவிதப் பலனையும் அளிக்காத சூழல் அந்தப் பகுதி மக்களை விரக்தியின் உச்சகட்டத்துக்கே கொண்டு சென்றது. இத்தகைய பெரும் இடர்ப்பாடுகளும், அசாதாரணமான சூழ்நிலையும் அங்கு நிலவி வந்தது. இத்தகைய நிலையை ஒரு மீள் பார்வையோடு வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், பல சம்பவங்கள் நம் கண் முன்னாலே விரிகின்றன.

வைகைச்செல்வன்

7—ஆம் நூற்றாண்டில் தனி சாம்ராஜ்யமாக இருந்த திபெத், பின்னாளில் கிழக்கு ஆசியாவை ஆண்ட குயிங் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக மாறியது. இந்தப் பேரரசின் ஆளுகையில் இருந்தபோதுதான் திபெத்தின் ஆட்சிக்கு துணை புரிய தலாய்லாமாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்படி காலம் காலமாக தலாய்லாமாக்கள் ஆண்டுவந்த திபெத் பகுதி, குயிங் வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு 1913—ஆம் ஆண்டு சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது.

முறையான அரசு அமைப்புடன், தலாய்லாமா நிர்வாகத்தின் கீழ் இருந்த திபெத்தை, 1950—ஆம் ஆண்டு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது சீனப் படை. அந்த நேரத்தில் பதின்பருவத்திலிருந்த தற்போதைய தலாய்லாமா இந்தச் சூழலை சரியாகக் கையாள முடியாத நிலையில் தவித்தார்.

இந்த நிலையில் திபெத்தைக் கைப்பற்றிய சீனப் படை அங்கு மோசமான அடக்குமுறைகளைக் கையாண்டதாக திபெத் மக்கள் இன்று வரை சீனா மீது குற்றசாட்டி வருகின்றனர். இப்படிப்பட்ட சூழலில்தான் தலாய்லாமா உயிருக்கு ஆபத்து நிலவுவதாக திபெத்தில் தகவல் பரவியது. இதனால் தூண்டப்பட்ட மக்கள் 1959, மார்ச் 10—ஆம் தேதியன்று தலாய்லாமா வசிக்கும் லாஸ் வீட்டின் அருகே ஒன்று கூடினர். நாட்டை விட்டு தலாய்லாமா தப்பிக்க வழி செய்து சீனப் படைகளை எதிர்த்து கடுமையான சண்டையில் ஈடுபட்டனர்.

இந்தச் சண்டையை சீன ராணுவம் தனது அசாத்திய படைபலத்தால் அடக்கினாலும், தலாய்லாமா தப்பித்து இந்தியா வருவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. அதற்கான மிக முக்கிய காரணம், திபெத் மக்கள்

தங்கள் தலைவரைத் தப்பிக்க வைக்க மேற்கொண்ட முயற்சிகளே.

1959—ஆம் ஆண்டு மார்ச் 30—இல் இந்தியாவுக்கு தலாய்லாமா வந்தார். அதன் பிறகு இந்தியாவிலிருந்தபடியே அவர் திபெத் அரசை நிர்வகித்து வருகிறார். ஆனால், திபெத் தனிநாடு இல்லை எனவும், தங்களுடைய நாட்டின் ஒரு பகுதிதான் எனவும் இன்றுவரை சீனா கூறி வருகிறது. ஆனால், திபெத்தியர்களோ சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்க முடியாது எனவும், திபெத் தனி நாடுதான் எனவும் கூறி சீனாவை எதிர்த்து வருகின்றனர். இதற்கான போராட்டம் இன்றளவும் திபெத்தில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

சீனாவை சுதந்திர நாடாக அங்கீகரிக்க வேண்டுமெனவும், சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டுமெனவும் திபெத் மக்கள் போராடி வருகின்றனர். மிக மோசமான படிப்பறிவு விகிதம், சுகாதாரமற்ற சூழல், ராணுவ அடக்குமுறைகள் எனப் பல இன்னல்களைச் சந்தித்துவரும் திபெத் பகுதிக்கு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்கூட சீன அரசின் அனுமதியில்லாமல் செல்ல முடியாது என்பதே அதன் இன்றைய நிலையாக உள்ளது.

பத்திரிகையாளர்கள், வெளிநாட்டினர் என யாரும் எளிதில் செல்ல முடியாத அளவுக்கு தனது அதிகார அரணால் அந்தப் பகுதியை தனிமைப்படுத்தப்பட்ட ரகசியமாகவே பாதுகாத்து வருகிறது சீனா. இதை எதிர்த்து லட்சக்கணக்கான மக்கள் பல ஆண்டுகளாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த 8 ஆண்டுகளில் சீனாவுக்கு எதிரான போராட்டத்தில் 130 திபெத்தியர்கள் தங்களின் இன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர் என்பது, போராட்டத்தின் வீரியத்தை நமக்கு உணர்த்துகிறது.

திபெத்தியர்களின் நீண்ட நெடிய 70 ஆண்டுக்கால போராட்டத்தின் தாக்கமே சீனாவுக்கு எதிராக தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது. தனி நாடாக திபெத் அறிவிக்கப்படுவது, தலாய்லாமா நாடு திரும்புவது, அடக்குமுறைகளில் இருந்து மீள்வது என திபெத்தியர்கள் தொடர்பான அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்கவும், முடிவுகளை அறிவிக்கவும் கூடிய அதிகாரத்தில் இருக்கக் கூடியவர் தற்போதைய சீன அதிபர் ஷி ஜின்பிங்தான். இந்த ஒற்றைக் காரணமே இந்தப் போராட்டத்துக்குப் போதுமானதாக திபெத்தியர்கள் பார்வையில் பார்க்கப்படுகிறது.

திபெத்தில் ஒரு தேசிய இனம் தன்னுடைய சொந்த மண்ணிலிருந்து மற்றொரு அண்டை நாட்டால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது, தீராத மன வேதனையைத் தொடர்ந்து அவர்களுக்கு அளித்துக் கொண்டே இருக்கிறது. சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள திபெத்திலிருந்து, கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் வெளியேறிக் கொண்டேயிருக்கிறார்கள்.

திபெத்தை தன் பகுதிக்கு உட்பட்டது என்று சீனா அறிவித்துக் கொண்டுவிட்ட நிலையில்,

திபெத்தியர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் நிற்கிறார்கள். அதன் அருகில் இருக்கும் இந்தியாவும், சீனாவின் உள்நாட்டுப் பிரச்னை திபெத் என்று கூறி விட்டது. தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரமாகவும், பண்பாட்டு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒரு தேசிய இனமாக வாழ்ந்ததற்கான அடையாளங்களை வல்லரசான சீனாவுடன் திபெத்தியர்கள் மீட்டுப் பெற முடியுமா என்ற கேள்வி தொடர்கிறது.

இந்தியாவைப் பொருத்தவரை திபெத்துக்கான எல்லா உறவுகளையும் சீனா வழியாகவே செய்து வருகிறது. திபெத்திய மக்களுக்கும் இந்தியாவின் அருணாசலப் பிரதேசம், வடமேற்கு காஷ்மீர், லடாக் பகுதி மக்களுக்கும் வரலாற்றுபூர்வமாக, ஒரு பண்பாட்டு ரீதியாக ஓர் இணக்கமான உறவு இருந்து வருகிறது.

இன்று சுமார் ஒன்றரை லட்சம் திபெத்திய மக்கள் இந்தியாவில் இருக்கின்றனர். அவர்களுடைய மதம் பௌத்தம். அவர்களுடைய கல்வி அமைப்பு, பண்பாடு முதலானவை பௌத்தத்தைத் தழுவியே அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய இந்தப் பண்பாட்டு நிலைக்கு எதிரான ஒரு நிலை திபெத்தில் உருவானபோது, அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். சொந்த அடையாளங்களை, முகவரியை இழந்து விட்ட அவர்களின் பெருந்துயரம் சொல்லொண்ணா வேதனையை ஒத்தது.

1914—ஆம் ஆண்டுக்குப் பின் "'ஸ்வீதர் கீ சைனீஸ் வீதர்கி'" என்ற அமைப்புக்கு திபெத் கொண்டுவரப்பட்டது. அதாவது, சீனாவின் ஆளுகைக்குள் அந்த நிலப்பரப்பு கொண்டுவரப்பட்டது. அதற்குக் காரணம், திபெத்திய மக்கள் சீனாவின் இறையாண்மையை ஏற்றுக் கொண்டதால் அல்ல. அதற்கான உண்மையான காரணம், அப்போது இந்தியாவில் நிலவி வந்த பிரிட்டன் ஆட்சி, தெற்காசிய பிராந்திய ரஷியாவின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காக சீனாவுடன் ஓர் ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டது.

தெற்காசியப் பகுதிக்குள் நுழைய விடாமல் ரஷியாவைத் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் சீனாவின் ஆளுகைக்கு திபெத்தை உட்படுத்தி விட்டார்கள். இதுதான் சீனாவின் ஆளுகைக்கு திபெத் வந்ததற்கான உண்மையான காரணம்.

திபெத்தில் மத ரீதியிலான தலைமை அமைப்புகள் இருந்ததே தவிர, அரசியல் ரீதியான தலைமை அமைப்புகள் இல்லை. குழப்பங்கள் நிரம்பிய காலகட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது திபெத். வட அமெரிக்கப் பகுதிகளில் அங்கு பூர்வகுடிகளாக இருந்தவர்கள் எப்படி துரத்தப்பட்டார்களோ, அதே நிலைதான் திபெத்திலும் நிலவி வருகிறது.

பூர்வகுடிகளின் பண்பாட்டு அடையாளங்கள் அழிக்கப்படுவதன்மூலம், அந்த நாகரிகங்களும் அழிந்து விடுகின்றன. இதே போன்றுதான் பூர்வகுடிகளான தமிழீழ மக்களின் பண்பாட்டு அடையாளங்களை இலங்கை அரசும் சிதைத்து வருகிறது. இது ஒரு வகையான பண்பாட்டுச் சீரழிவு ஒடுக்குமுறை.

இதை மீட்டெடுக்க முடியாத துன்பங்களிலிருந்து தங்களது அடையாளத்தை இழந்து வரும் மக்கள், தங்கள் வாழ்வாதாரத்துக்காக வேறு வழியின்றி வெவ்வேறு இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டேயிருக் கிறார்கள். இந்த நாடுகளில் மீதம் உள்ளோர் தங்கள் வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டும், சுதந்திரக் காற்று நம் பக்கம் வீசாதா என்று ஒரு விடியலுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

ஜனநாயகத்தை சந்தர்ப்பவாதம் அழிக்கும்

உலகின் மிகப் பெரும் ஜனநாயக நாடாக நமது நாடு உள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு நமது அரசமைப்புச் சட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளது. 'அரசமைப்புச் சட்டத்தின் உயர் நெறிமுறைகளை வழுவாது நாம் பின்பற்ற வேண்டும். ஒருபோதும் அதிலிருந்து



விலகிச் செல்லக் கூடாது' என நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றும்போது குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

அதே கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி,"இந்திய அரசமைப்புச் சட்டம் நாட்டின் புனித நூல்; அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள் ஆகிய இரண்டுக்கும் சம அளவு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது"எனக் கூறியுள்ளார். இந்திய அரசியல் நிர்ணய அவையில் கடந்த 1949—ஆம் ஆண்டு நவம்பர் 26—ஆம் தேதி இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது; அதற்கான கொண்டாட்டத்தில் அண்மையில் பங்கேற்ற குடியரசுத் தலைவரும், பிரதமரும் அரசியல் சட்டத்தின் மாண்புகளை விளக்கிக் கூறியதுடன், அதிலிருந்து ஒருபோதும் நாம் விலகிச் செல்லக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால், இதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பு நவம்பர் 22—ஆம் தேதியன்று நள்ளிரவில் மகாராஷ்டிர மாநிலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் மேற்கண்ட இருவரின் (குடியரசுத் தலைவர், பிரதமர்) பேச்சுக்களுக்கு நேரெதிராக அமைந்துவிட்டன. அந்த மாநிலத்தில் 23—ஆம் தேதியன்று விடிவதற்கு முன் காலை 5.30 மணியளவில் குடியரசுத் தலைவர் ஆட்சி விலக்கிக் கொள்ளப்பட்டதாக ஆளுநர் மாளிகையிலிருந்து அறிவிப்பு வெளியிடப்பட்டது; அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு மிக ரகசியமான முறையில் பா.ஜ.க. தலைவர் ஃபட்னவீஸ் முதலமைச்சராகவும், தேசியவாத காங்கிரஸை சேர்ந்த அஜித் பவாரை துணை முதல்வராகவும் பதவியேற்கும் நிகழ்ச்சியை ஆளுநர் பகத்சிங் கோஷியாரி நடத்தி வைக்கிறார்.

துணை முதல்வராகப் பதவியேற்ற அஜித் பவார், கடந்த காலத்தில் காங்கிரஸ் — தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சியின் போதும் துணை முதல்வராக இருந்தார். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஃபட்னவீஸ், அவர் மீது

அடுக்கடுக்கான ஊழல் புகார்களை எழுப்பி பதவி விலக வைத்தார்.

கடந்த காலத்தில் மகாராஷ்டிர மாநிலத்தில் காங்கிரஸ் — தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் அஜித் பவார் துணை முதல்வராகவும், நீர்ப்பாசனத் துறை அமைச்சராகவும் இருந்தபோது, நீர்ப்பாசனத் துறையில் ரூ.30,000 கோடிக்கு மேல் ஊழல் செய்திருப்பதாக அவர் மீது கடுமையான

குற்றச்சாட்டுகள் பா.ஜ.க.வினால் எழுப்பப்பட்டன. அதன் விளைவாக அவர் பதவி விலக நேர்ந்தது.

அஜித் பவார் மீது இரண்டு குற்ற வழக்குகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. பசாப்—மகாராஷ்டிர மாநிலக் கூட்டுறவு வங்கியில் (பிளம்சி) ரூ.25,000 கோடிக்கு மேல் மோசடி செய்யப்பட்டிருப்பதாக அஜித் பவார் மீதும், அந்த வங்கியின் 70—க்கும் மேற்பட்ட பொறுப்பாளர்கள் மீதும் மும்பை பொருளாதார குற்றங்களுக்காக காவல் பிரிவு வழக்குப் பதிவு செய்தது. மும்பை

பழ. நெடுமாறன்

உயர்நீதிமன்றத்தின் ஆணையின் பேரிலேயே இவ்வாறு செய்யப்பட்டது. தேசியவாத காங்கிரஸின் 54 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவும், சட்டப்பேரவையில் பெரும்பான்மை ஆதரவு

உள்ளதாகவும் முதல்வர் ஃபட்னவீஸ் அறிவிக்கிறார். உடனடியாக அஜித் பவார் மீதுள்ள வழக்குகளும் கைவிடப்படுகின்றன.

நவம்பர் 22—ஆம் தேதி இரவு முதல் நவம்பர் 23—ஆம் தேதி அதிகாலையில் முதல்வர், துணை முதல்வர் பதவியேற்பு வரை ஆளுநரின் நடவடிக்கைகள், அரசியல் சட்ட விதிமுறைகளை பின்பற்றிச் செய்யப்படவில்லை. ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அகற்றப்படவேண்டுமானால், மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் மூலம் மாநில ஆளுநர் அதைத் தெரிவிக்க வேண்டும்.

அதன் பிறகு, மத்திய அமைச்சரவை கூடி குடியரசுத் தலைவர் ஆட்சியை விலக்கிக்



கொள்வதற்குரிய தீர்மானத்தை நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்து, அதற்கு அவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அதற்குப் பின் அரசிதழில் அது அறிவிக்கப்பட வேண்டும். இத்தனை நடைமுறைகளுக்குப் பிறகே குடியரசுத் தலைவர் ஆட்சி அந்த மாநிலத்தில் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட வேண்டும். மேற்கண்ட அரசியல் சட்டப்பூர்வமான ஜனநாயகக் கடமைகளில் எதுவும் பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரச்சினையைத் தனது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட உச்சநீதிமன்றம் இவ்வாறு செய்தது அரசியல் சட்டத்தை மீறியதாகும் எனக் கண்டனம் செய்திருக்குமானால், மிகப் பெரிய அரசியல் சட்டரீதியான நெருக்கடி உருவாகியிருக்கும். மத்திய அரசின் மீதான நம்பகத்தன்மையே கேள்விக்குறியாகிவிடும். இவையெல்லாம் குறித்து ஆளுநரோ, உள்துறை அமைச்சரோ, பிரதமரோ சிந்தித்ததாகத் தெரியவில்லை. அமைச்சரவையைக் கூட்டி முடிவு செய்வதற்குப் பதில் அரசு நிர்வாக விதிமுறைகள் 12—இன் கீழ் இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தில் அரசியல் சட்ட விதிமுறைகளையும், சட்டப்பேரவை மரபுகளையும் புறக்கணித்துவிட்டு பா.ஜ.க. செயல்பட்டுள்ளது; இவ்வாறு செயல்படுவது இது முதன்முறையல்ல. பிகார், கர்நாடகம், கோவா, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்கெனவே இத்தகைய அரசியல் சட்டத்துக்குப் புறம்பான முறைகளை பா.ஜ.க. பின்பற்றி அதிரடியாக ஆட்சியைக் கைப்பற்றியது.

அரசியல் சட்டம் வகுத்துள்ள நெறிமுறைகளும், ஜனநாயக மரபுகளும், அரசியல் கட்சிகளால் மதிக்கப்படாமல் துச்சமாகக் கருதப்பட்டு தூக்கியெறியப் படுமானால், ஜனநாயகம் நிலைக்காது. மேலும் கொள்கை, கோட்பாடு ஆகியவற்றையும் கட்சிகள் மதித்துப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. மகாராஷ்டிர மாநிலத் தேர்தலில் பா.ஜ.க.வும், சிவசேனையும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. காங்கிரஸும், தேசியவாத காங்கிரஸும் கூட்டணி அமைத்து எதிர்த்துப் போட்டியிட்டன.

ஆனால், முதல்வர் பதவி காரணமாக பா.ஜ.க.—வுக்கும், சிவசேனைக்கும் இடையே எழுந்த முரண்பாட்டின் விளைவாக அந்தக் கட்சி கூட்டணியிலிருந்து விலகி, கொள்கை ரீதியாக எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகியவற்றுடன் பேரம் பேசி புதிய கூட்டணி அமைந்தது. சட்டப்பேரவை தேசியவாத காங்கிரஸின் தலைவர் அஜித் பவாரைத் தன் பக்கம் இழுத்து ஆட்சி அமைக்க பா.ஜ.க. முயற்சி செய்து அதற்கு ஆளுநரும், மத்திய அரசும் துணை நின்று ஆட்சி அமைக்க உதவினர். மேலும், பல சட்டப்பேரவை உறுப்பினர்களைத் தங்கள் பக்கம் இழுத்து ஆட்சியை நிலைநிறுத்த பா.ஜ.க. செய்த முயற்சிகள் உச்சநீதிமன்றத் தலையீட்டின் விளைவாக வெற்றி பெறவில்லை; பதவியேற்ற முதல்வரும், துணை முதல்வரும் இரண்டே நாள்களில் பதவி விலக நேர்ந்தது.

சிவசேனை கட்சி தலைவரான உத்தவ் தாக்கரே தலைமையில் காங்கிரஸும், தேசியவாத



காங்கிரஸும் இணைந்து ஆட்சி அமைத்துள்ளன. சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன் ஒருவரையொருவர் கடுமையாக எதிர்த்துப் போராடிய கட்சிகள் ஒருங்கிணைந்து ஆட்சி அமைப்பது என்பது கொள்கை கோட்பாடு குறித்து இவர்களுக்குக் கவலை இல்லை என்பதையும், எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்றபதவிவெறியையும் எடுத்துக்காட்டுகின்றன. பா.ஜ.க.வுடன் கொள்கை ரீதியாக கூட்டு சேர்ந்த சிவசேனை, முதல்வர் பதவி கிடைக்கவில்லை என்பதற்காக கூட்டணியை முறித்துவிட்டு முற்றிலும் எதிரான கோட்பாடு கொண்ட கட்சிகளின் கருணையில் முதலமைச்சராகியிருப்பது ஜனநாயக வெட்கக்கேடாகும்.

மகாராஷ்டிர மாநிலத்தில் இரு தரப்பினருமே சந்தர்ப்பவாத அரசியலை நடத்துகிறார்கள் என்பது அம்பலமாகியிருக்கிறது. ஜனநாயகத்தின் ஆணிவேரையே சந்தர்ப்பவாதம் அழித்துவிடும். அங்கு மட்டுமல்ல, இந்தியா முழுவதும் அனைத்துக் கட்சிகளிலும் சந்தர்ப்பவாதம் தலைதூக்கி நிற்கிறது. பதவி பங்கீட்டுக் கூட்டணிகள் அமைக்கப்படுகின்றனவே தவிர, கொள்கை வழிக் கூட்டணிகள் ஒருபோதும் அமைக்கப்படுவதில்லை. தேர்தலுக்கு முன் ஒரு கூட்டணி, தேர்தலுக்குப் பின் மற்றொரு கூட்டணி என்ற தத்துவத்தையே கட்சிகள் கடைப்பிடிக்கின்றன. பதவி வெறி கட்சிகளை ஆட்டிப்படைக்கிறது. ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கவும், நிலை நிறுத்தவுமே அரசியல் சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டன. ஆனால், கடந்த 70ஆண்டுகளில் எத்தனை கட்சிகள் இந்த உன்னதமான நோக்கத்தை நிலைநிறுத்துவதற்கு ஒத்துழைத்திருக்கின்றன என்பதை ஆராய்வோமானால் ஏமாற்றம்தான் மிசும்.

காங்கிரஸ் கட்சியும், ஜனதா தளமும் மத்திய ஆட்சியில் அமர்ந்திருந்த போதும் தங்கள் கட்சிகளின் நலனுக்காக ஜனநாயகத்தின் கழுத்தை நெறிக்க அவர்கள் தயங்கவில்லை. மாற்றுக் கட்சிகள் ஆண்ட மாநிலங்களில் அரசுகளை நீக்குவதற்கும், குடியரசுத் தலைவர் ஆட்சியை நிறுவுவதற்கும் அவர்கள் ஒருபோதும் தயங்கவில்லை. அந்தக் கட்சிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கட்சியாகத் தன்னை கூறிக்கொள்ளும் பா.ஜ.க.—வும் அதே பாதையைத்தான் பின்பற்றுகிறது.

மாநிலக் கட்சிகளும் தங்களது ஆட்சிகளைக் காப்பாற்றுவதற்கு அகில இந்திய கட்சிகளுடன் மாறிமாறிக் கூட்டு சேர்கின்றன. கொள்கை, கோட்பாடுகள் காற்றில் பறக்க விடப்படுகின்றன. ஜனநாயகப் பாதையிலிருந்து நாடு சிறிது சிறிதாகத் தடம் புரண்டு சென்று கொண்டிருப்பது வேதனை அளிக்கிறது.

கண்டேன்! வெண்டே...

டாக்டர்.எச்.வி.ஹண்டே !...

தமிழக அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு பெயர் !...

கடந்த கால வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களை எழுதவேண்டுமென்றால் தவிர்த்துவிட முடியாத உண்மையின் உரைகல்லான ஒரு பெயர் !...

அரசியலில் புதிய திடீர் திருப்பங்களை ஏற்படுத்திய ஒரு பெயர் !...

ஆழ்கடலின் அடியில் ஓடும் அலைபோல அமுத்தமான தாக்கங்களை ஏற்படுத்திய ஒரு பெயர் !...

தூய்மையான அரசியல் வாழ்வுக்கு எடுத்துக்காட்டான மென்மையான பெயர் !...

அனைத்துக்கும் மேலாய், முப்பிறவி கண்ட புரட்சித்தலைவரின் மூன்றாவது பிறவிக்கு உற்ற துணையாய் இருந்தவர்களில் தலையாயத் தூணாக நின்ற பெயர் !..

என்றென்றும் பொன்மனச்செம்மலின் கோடானுகோடி ரசிகர்களின் உள்ளத்தில் நீங்க

இடம்பெற்ற உன்னதப் பெயர்தான் டாக்டர் எச்.வி.ஹண்டே!...

மருத்துவ உலகிலும் அரசியல் உலகிலும் அழுத்தமான தடம் பதித்திருக்கும் திரு எச்.வி.ஹண்டே அவர்களை மார்கழிக்கு முதல் நாள், மழைத் தூறல் காலைப் பொழுதொன்றில் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்களை அவரது மருத்துவமனையில் சந்தித்தோம். எதிர்பாராத இன்பச் சந்திப்பாக இதனை அமைத்துக் கொடுத்தவர், எத்தனையோ மனிதர்களை 'யோக' நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் ஆச்சாரியா யோகா ஆனந்த் அவர்கள்.

திரு.ஹண்டே அவர்கள், தான் எழுதிய 'புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மறுபிறவி எடுத்த வரலாறு' என்ற நூலினை நமக்கு வழங்க, நாமும் மக்கள் திலகத்தின் படவுலக அனுபவங்களைச் சொல்லும் 'உங்கள் ரசிகன்' என்ற நூலினை அவருக்கு வழங்கினோம்.

டாக்டர்.திரு.எச்.வி.ஹண்டே அவர்கள், தனது நீண்ட பொதுவாழ்வின் சில அத்தியாயங்களையும், அரசியல் துவக்கத்தையும், அதன் பிறகு அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களையும், தன் அனுபவங்கள் வாயிலாக நம்மோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்.

"1964—ல் நடந்த சென்னை மாநகர பட்டதாரி தொகுதிக்கான தேர்தலில் நான் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றேன்.

பேரறிஞர் அண்ணா தலைமையிலான திமுக, கர்மவீரர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ், மூதறிஞர் ராஜாஜி தலைமையிலான சுதந்திரா போன்ற கட்சிகள் எல்லாம் அன்றைய தேர்தல் களத்தில் இருந்தன. இவை மக்களிடையே மிகுந்த செல்வாக்கையும் ஆதரவையும் பெற்றிருந்த கட்சிகள்.

அப்படிப்பட்ட காலத்தில்தான் நான் சுயேச்சையாகப் போட்டியிட்டு, யாரும் எதிர்பாராத வகையில் பெரும் வெற்றியை எட்டிப் பிடித்தேன். எனது வெற்றி அறிஞர் அண்ணா, காமராஜர், ராஜாஜி போன்ற பெருந்தலைவர்களை மலைக்க வைத்தது. 'யார் இந்த ஹண்டே?' என்ற கேள்வியை எழுப்பி வைத்தது.

அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று எம்.எல்.சி.யாக நான் சட்டமன்றத்துக்குள் நுழைந்தேன்

1965 —ஆம் ஆண்டு ராஜாஜி அவர்களின் அழைப்பை ஏற்று அவருடைய 'சுதந்திரா' கட்சியில் இணைந்து சட்டமன்றத்தில் செயல்படத் தொடங்கினேன். சட்டமன்றத்தில் என்னுடைய கேள்வி—பதில்கள் அன்றைய நாளேடுகளுக்கு விவாதப் பொருளாகும் அளவுக்கு அனல் பறக்கும். எப்போது நான் என் குரல் ஒலித்தாலும், என் மக்களுக்கான நியாயமான குரலாகவே இருக்கும்.

இந்தச் சமயத்தில்தான், 1967 ஆம் ஆண்டு, தி.மு.க.வுடன் இணைந்து ராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சி கூட்டணி வைத்து சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தது.

சென்னையில் உள்ள 12 சட்டமன்றத்

1973-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிறுவிய அறுவர் குழுவில் புரட்சித்தலைவருடன் இருப்பவர்கள் எச்.வி. ஹண்டே, கே.ஏ.மதியழகன், நாஞ்சில். இ. மனோகரன், எஸ்.டி. சோமசுந்தரம்

3.2.1978 அன்று, புரட்சித்தலைவர் ஊர்வலமாக அண்ணா நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்தச் சென்றபொழுது

"மரத்திலே ஒரு கனி பழுத்து தொங்கியது. பலரும் அந்த கனி தங்கள் மடியில் விழாதா என காத்திருந்தனர். என் மடியில், அந்த கனி விழுந்தது. அதை எடுத்து என் இதயத்தில் பத்திரமாக வைத்துக் கொண்டேன். அந்த கனிதான் எம்.ஜி.ஆர்." 1958இல் 'நாடோடி மன்னன்' விழாவில் அமரர் அண்ணாவின் பேச்சு.

1972இல் டாக்டர் ஹண்டேவின் பூங்கா நகர் தொகுதியில், புரட்சித்தலைவருடன் திரு. ச.வி.கே. சம்பத்.

தொகுதிகளில் இக்கூட்டணி போட்டியிட்டது.

எனக்கு எம்.எல்.சி பதவி முடிவடைவதற்கு மூன்றாண்டுகள் இருந்தது. ஆனாலும், அந்தத் தேர்தலில் நான் நின்றால் வெற்றி கிடைக்கும் என்று நினைத்த அறிஞர் அண்ணா அவர்கள் என்னை பூங்கா நகர் தொகுதியில் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டார்.

அப்போது பூங்கா நகர் தொகுதி காங்கிரஸ் கட்சியின் மாபெரும் கோட்டையாக இருந்தது. நான் எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளர்களில் மிகவும் பிரபலமானவர் திருமதி அனந்தநாயகி அம்மையார். எனவே எல்லா வகையிலும் எனக்கு கடும் சவால் நிறைந்த களம் அது.

இந்தத் தேர்தலுக்கு முன்பு நடந்த ஒரு சுவையான சம்பவத்தைக் குறிப்பிட வேண்டும். அப்போது சென்னையில் கடும் மழையும் வெள்ளமுமாய் இருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வேண்டுமெனச் சட்டமன்றத்தில் கேட்டுக் கொண்டேன். அது பிரபல நாளிதழில் முக்கியச் செய்தியாக வெளிவந்தது. முதல்வர் பக்தவச்சலம் சற்று காலதாமதமாகவே பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

அதற்கு மறுநாள் அறிஞர் அண்ணா அவர்களைப் பாதிக்கப்பட்ட ராயபுரம் பகுதிகளுக்கு வந்து பார்வையிடும்படி கேட்டுக் கொண்டேன். அண்ணா அவர்கள் வேடிக்கையாக, "நேற்றுதான் முதல்வர் சென்று பார்வையிட்டார். பிறகு இப்போது நான் எதற்கு?" என்றார்.

அதற்கு நானும் வேடிக்கையாக "Yesterday visit-today's Chief Minister! But today's visit tommorrow's Chief Minister!" எனப் பதிலளித்தேன்.

நான் சொன்ன பதில் அண்ணாவின் மனதை நெகிழச் செய்துவிட்டது. என்னுடன் வந்து

அண்ணா அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் சொன்னார். அந்த பகுதியில் அதிகமாகத் தெலுங்கு பேசும் மக்கள் இருந்தார்கள். அவர்களிடத்தில் நான் தெலுங்கில் இயல்பாக உரையாடினேன். "நேற்று வந்தது இன்றைய முதல்வர்! இன்று வந்திருப்பவர் நாளைய முதல்வர்!" என அவர்களிடமும் அதை அழுத்தமாகச் சொன்னேன்.

அதன் பிறகு நடந்த 1967 தேர்தலில் நான் சுதந்திரக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு பூங்கா நகர் தொகுதியில் வெற்றி பெற்றேன். இரவு 12 மணி அளவில் முடிவு அறிவிக்கப்பட்டது. அப்போது தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருந்ததால் தி.மு.க கூட்டணிக்கு முதல் வெற்றியாக எனது வெற்றி அமைந்தது. உடனடியாக அந்தத் தகவலை அண்ணா அவர்களுக்குச் சொல்லி வாழ்த்து பெறுவதற்காக ஒரு மாலை வாங்கிக் கொண்டு நுங்கம்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணாவின் இல்லத்திற்குச் சென்றேன்.

அப்போது அங்கே நாவலர், பேராசிரியர் அன்பழகன், கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் அமர்ந்திருந்தார்கள். நான் மாலையைக் கொண்டு போய் அண்ணா அவர்களுக்கு அணிவித்தேன். அவரோ உடனே அந்த மாலையை எனக்கே திருப்பி அணிவித்து "முதல் முறையாக தி.மு.க கூட்டணிக்கு வெற்றி தேடித் தந்த வெற்றி வேட்பாளர் நமது ஹண்டே!" என்று மிகவும் புகழ்ந்து மகிழ்ச்சியோடு பாராட்டினார்.

அண்ணா அவர்களின் தலைமையிலான ஆட்சி குறுகிய காலம்தான் என்றாலும், மிகச் சிறந்த ஆட்சியை வழங்கினார். அந்த ஆட்சியில்தான் நமது மாநிலத்துக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது அனைவரும் அறிந்த ஒன்று!

அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்பு 1971 —ல் நடந்த பொதுத் தேர்தலில் ராஜாஜி அவர்கள், பெருந்தலைவர் காமராஜருடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தார். அந்தத் தேர்தலில் மீண்டும் பூங்கா நகர் தொகுதியில் தி.மு.க வேட்பாளர் ஆசைத்தம்பியை அதிக வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து மீண்டும் சட்டமன்றத்திற்குள் நுழைந்தேன். அப்போது ராஜாஜி அவர்கள் சுதந்திராக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களின் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்தார்.

'மக்கள் திலகம்'

ராஜாஜியின் மறைவுக்குப் பிறகு, நான் சிறிது காலம் அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்த நேரம்! அப்போது புரட்சித்தலைவர் கட்சி ஆரம்பித்திருந்த நேரம்! அப்போது ஒருநாள், தொலைப்பேசியில் புரட்சித்தலைவர் என்னைத் தொடர்பு கொண்டார். "உங்களைப் போன்ற அறிவார்ந்த பெருமக்கள், பொதுவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடிக்கும் கண்ணியவான்கள் எனக்குத் தேவைப்படுகிறார்கள். நீங்கள் அரசியலை விட்டு ஒதுங்கக் கூடாது! ராஜாஜி அவர்களுக்கு பணியாற்றியது போல நமது கட்சிக்கும் உங்களுடைய பங்களிப்பு வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார்.

அதன்படி நான் அ.தி.மு.க.வுக்கு சென்று புரட்சித் தலைவர் தலைமையை ஏற்றுக்கொண்டேன்.

அதன்பிறகு தேர்தல் களத்தில் அசைக்கமுடியாத சக்தியாக உருவாகிய புரட்சித்தலைவர், 1980 மற்றும் 1984 ஆண்டுகளில் அமைத்த தனது அமைச்சரவையில், என்னை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக்கி அழகு பார்த்தார் புரட்சித்தலைவர்.

அவரிடத்தில் எத்தனையோ மூத்த அரசியல்வாதிகள் இருந்தபோதும், எனக்கு அமைச்சர் பதவி வழங்கி பெருமைப்படுத்தியது, என்னுடைய தூய்மையான அரசியல் வாழ்வுக்கு அவர் அளித்த அங்கீகாரமாகவே நான் நினைக்கிறேன்.

கிருபானந்தவாரியார் அளித்த 'பொன்மனச் செம்மல்' என்ற பட்டத்துக்கு எல்லாவகையிலும் பொருந்தக் கூடிய மாபெரும் பண்பாளரான புரட்சித் தலைவரிடத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய குணமாக நான் பார்த்தது, அவரது 'இல்லை' என்று சொல்லாது கொடுக்கும் வள்ளல் தன்மையைத்தான்!

அவருக்கு 'இல்லை' என்ற வார்த்தையைச் சொல்லவே வராது! அதாவது 'இல்லை' என்று அவரால் சொல்ல முடியாது, அல்லது சொல்லத் தெரியாது, அல்லது சொல்லப் பிடிக்காது! இப்படி எதை வேண்டுமானாலும் நீங்கள் எழுதிக் கொள்ளலாம்! காரணம், அவருடைய சுபாவமே 'கொடுப்பது!', 'கொடுத்துக் கொண்டே இருப்பது!' இதனை ஏதோ மேம்போக்காக நானறிந்த காரணங்களால் சொல்லவில்லை! அவருடைய ரத்தத்திலேயே கொடுக்கும் குணம் இருந்ததை என்னைப் போன்று அவருக்கருகில் இருந்த அத்தனை பேரும் அறிந்த ஒன்று!

அவருடைய கொடை வள்ளல் தன்மைக்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்! சொன்னால் காலம் போதாது!அத்தனையையும் சொல்லி முடியாது!" என்கிற திரு.எச்.வி.ஹண்டே அவர்களின் ஆழ்ந்த நினைவாற்றல், கடந்த கால வரலாற்றின் நிகழ்வுகளை, தேதிவாரியாக, மாத வாரியாக, துல்லியமாகச் சொல்லும் பாங்கு, 93 வயதிலும் அவருடைய தெளிந்த சிந்தனை, உண்மையிலேயே மலைக்க வைக்கிறது!

அவரிடத்தில் உரையாடிக் கொண்டிருக்கும்போது மருத்துவம் பார்த்துக்கொள்ள வந்தவர்களை அன்போடு வரவேற்று அனுசரணையோடு கவனிக்கிறார். அந்நேரத்தில், அவருடைய சேவை மனப்பான்மையை, அன்புள்ளத்தை நாம் உணர முடிகிறது.

ஒரு தேர்ந்த அரசியல்வாதிக்கான எந்த பகட்டும் இல்லாமல் அற்புதமான சேவை மனப்பான்மையுடன் இருக்கும் அவர், இன்றைய அரசியல்வாதிகள் படிக்கவேண்டிய அரிச்சுவடி!

மீண்டும் நம்மிடையே தனது உரையாடலைத் தொடர்கிறார் திரு. ஹண்டே அவர்கள். இப்போது அவருடைய பேச்சு பொன்மனச்செம்மல் முப்பிறவி நாயகனாக மீண்டு வந்த அந்த நாட்களுக்குச் செல்கிறது.

"அப்போது புரட்சித்தலைவர் மீண்டும் பிறப்பெடுத்து வந்தது மருத்துவ உலகில் ஆச்சரியமாகவே பார்க்கப்பட்டது! காரணம், அவருக்கு உடலில் அவ்வளவு சிக்கல்கள் இருந்தன. அப்பல்லோ மருத்துவமனையில் இருந்து அவர் அமெரிக்கா சென்றது, அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள், அவருக்கு உடல் ரீதியாக இருந்த சிக்கல்கள், அவர் எப்படிக் குணமாகி மீண்டு வந்தார் என்ற வரலாற்றினை அனைத்தும் இந்த புத்தகத்தில் தெள்ளத்தெளிவாக எழுதி இருக்கிறேன்" என நம் கையில் இருக்கும் அவர் எழுதிய புத்தகத்தைச் சுட்டிக் காட்டிக் கூறுகிறார்.

"என்மீது புரட்சித் தலைவருக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்றால், 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற ஆலமரம் போன்ற கட்சியின் பொதுச்செயலாளராகப் புரட்சித்தலைவர் இருக்கும் பொழுது என்னைத் துணை பொதுச் செயலாளராக அமர்த்தி, கட்சியில் மாபெரும் அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.

1973—ல் 45 நாட்கள் அமெரிக்கா மற்றும் ரஷ்ய நாடுகளுக்குக் கலாச்சார பயணத்தை முதல்வர் எம்ஜிஆர் அவர்கள் மேற்கொண்ட பொழுது, இங்கே ஆறு நபர்களைக் கொண்ட 'அறுவர் குழு' ஒன்றை அமைத்தார். அவர் சென்றிருந்த அந்த 45 நாட்களும் அந்த 'அறுவர் குழு' தான் கட்சி ரீதியாகவும், ஆட்சி ரீதியாகவும் தமிழகத்தைக் காத்து நின்றது.

அந்த 'அறுவர் குழு'வில் புரட்சித் தலைவருடன், நாசில் மனோகரன், மதியழகன், கிருஷ்ணசாமி, எஸ்.டி.சுந்தரம் போன்றோருடன் நானும் இருந்தேன். இதுவெல்லாம் புரட்சித்தலைவர் என் மீதுள்ள அன்பின் காரணமாக எனக்குத் தந்த உயரிய அங்கீகாரங்கள்!

1984 அக்டோபர் 5—ம் நாள் புரட்சித் தலைவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு இரவு அப்பல்லோவில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் செய்தி கிடைத்த பிறகு காலை 6 மணிக்கு அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்று அவரைச் சந்தித்தேன்.

VARSHA™

Wish you a very Happy New Year 2020

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

தன் பக்கத்தில் கூடியுள்ளவர்களைப் பார்த்து அறிஞர் அண்ணா "ஹண்டே நம்முடைய கூட்டணிக்கு ஒரு கடினமான தொகுதியை வெற்றி பெற்றுத் தந்திருக்கிறார்" என கூறித் தனக்குத் தந்த மாலையை அப்படியே எடுத்து டாக்டர் ஹண்டேயின் கழுத்தில் போட்டு உட்காரச் சொல்லுகிறார்.

அப்போதுதான் அவருக்கு உடலில் சிறுநீரகப் பாதிப்பு உட்பட இன்னும் சில உடல்நலக் குறைபாடுகள் இருப்பது தெரியவந்தது.

உடனடியாக அவருக்குச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற நிலையில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அக்டோபர் 16— நாள், புரட்சித் தலைவரை வந்து பார்த்துவிட்டு, அவருக்கு உயர்ந்த சிகிச்சை அளிப்பதாக உறுதி கூறி அமெரிக்கா அழைத்துச் செல்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

அன்று இரவு ஏழு மணிக்கு, சென்னையிலிருந்து இந்திரா காந்தி அம்மையாரின் தனி விமானத்தில் அவருடன் நானும், அவரின் தனிச் செயலாளர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் அவர்களும் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜி.பார்த்தசாரதி அவர்களும் டெல்லி சென்றோம்.

அன்றுதான் நான் இந்திராகாந்தி அம்மையார் அவர்களைக் கடைசியாகப் பார்த்தது. அதன்பிறகு இரண்டு வாரங்களில் அவர் சுடப்பட்டு இறந்தார் என்ற துயரச் செய்தி வந்தது. அப்போது நான் அப்பல்லோ மருத்துவமனையில் புரட்சித் தலைவர் அருகில் இருந்தேன்.

நவம்பர் 5 —ம் நாள் இரவு, 11.45 இங்கிருந்து புரட்சித்தலைவருடன் அமெரிக்கா பரந்த விமானத்தில் நானும் இருந்தேன். அங்கு அவருக்கு மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை நடப்பதற்கு முன்பு இங்கே இந்திய நாடாளுமன்றத் தேர்தலும், தமிழகச் சட்டமன்றத் தேர்தலும் ஒன்றாக நடத்துவதற்கு ஏற்பாடானது. அப்போது புரட்சித்தலைவரிடத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆவணங்களில் கையொப்பம் பெற்று நான் தமிழகம் வந்தேன்.

புரட்சித்தலைவர் மருத்துவமனையில் இருந்தபடியே இங்கே தேர்தலைச் சந்தித்து வெற்றி பெறுவதற்கு அந்த ஆவணம் மிக முக்கிய காரணமாக அமைந்தது. இடைப்பட்ட நாட்களில் அமெரிக்காவில் தலைவருடைய உடல்நிலை குறித்த தகவல்களை இங்கே தெரிவித்துக் கொண்டு இருந்தேன். ஆனால் இதுவெல்லாம் எதிர்க்கட்சியின் சார்பில் திரித்துச் சொல்லப்பட்டது.

"தமிழ்நாட்டில் ஹண்டே குழப்பத்தை ஏற்படுத்துகிறார்! எம்.ஜி.ஆர் அவர்களுடைய உடல்நிலை பற்றிய தகவல்களைப் பொய்யாகக் கூறுகிறார். இன்னும் சொல்லப்போனால், புரட்சித்தலைவர் உயிருடனே இல்லை என்ற பொய்ப் பிரச்சாரங்களை எதிர்க்கட்சியினர் செய்யத் தொடங்கினர்.

ஆனால், தமிழகத்து மக்கள் புரட்சித்தலைவரை ஒருபோதும் மறந்ததில்லை! அவருக்கு மரணம் என்பதே இல்லை என்பதை உணர்த்தும்விதமாக, மருத்துவமனையில் இருந்தவரை, பெருவாரியான வாக்குகளை அளித்து ஆண்டிப்பட்டித் தொகுதியில் அவரை வெற்றி பெறச் செய்தார்கள்.

என்கிற டாக்டர் திரு.ஹண்டே அவர்கள், அந்தக் கடந்தகால நாட்களைப் படம் பிடித்தாற்போல தெளிவாக நம் கண்முன் நிறுத்துகிறார்.

"புரட்சித்தலைவரிடத்தில் எனக்கு மறக்க முடியாத சம்பவங்களாக எத்தனையோ நிகழ்வுகள் பதிந்திருக்கின்றன என்றாலும், ஒரு சம்பவம் இன்னமும் என்னால் மறக்க முடியாது. 1978 —ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அளவுக்கு அதிகமான மழை பெய்து சென்னை மாநகரத்தின் பல பகுதிகளில் குடிசைகளில் வெள்ளம் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தியது.

அப்போது முதலமைச்சராக இருந்த புரட்சித்தலைவர், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் சென்றார். அப்பொழுது நான் கழக அமைப்புச் செயலாளராக இருந்தேன். சென்னை மாநகரத்தின் எல்லாப் பகுதிகளும் எனக்கு நன்றாகத் தெரியும் என்பதாலோ என்னவோ, என்னையும் தன்னுடன் வருமாறு அழைத்துச் சென்றார்.

இரவு 7 மணி அளவில் தன் இல்லத்திற்கு திரும்புகிறபோது "நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?" என்று கேட்டார் புரட்சித்தலைவர்.

"வால்டாக்ஸ் சாலையில் இப்போது நுழைந்திருக்கிறோம்!" என்றேன்.

உடனே தன்னுடைய காரை என்.எஸ்.சி போஸ் சாலையில் உள்ள சாலையில் திருப்பச் சொல்லி, ஒரு வீட்டுக்கு முன்பு காரை நிறுத்தச் சொன்னார். மிகப்பழமையான வீடாகச் சாலையை ஒட்டி கம்பிகள் பொருத்தி இருந்தது அந்த வீடு!

காரிலிருந்து இறங்கி என்னையும் மாடிக்கு அழைத்துச் சென்றார் தலைவர். அங்கு 70 வயதைத் தாண்டிய ஒரு அம்மையார் இருந்தார். அவரைப் பார்த்ததும், அவரை வணங்கினார் தலைவர்.

ஒரு முதல்வர் என்ற எண்ணமெல்லாம் இல்லாமல் அந்த அம்மையார், "என்னப்பா, உனக்கு இப்போது தான் வழி தெரிந்ததா?" என்று ஒருமையில் அழைத்தார். அதன்பின் மிகுந்த அன்போடு இருவரும் உரையாடினார்கள்.

நாங்கள் புறப்பட்டு வரும் பொழுது காரில் புரட்சித்தலைவர், அந்த அம்மையார் பற்றி என்னிடம் கூறினார்.

தன்னுடைய இளமைக் கால வாழ்க்கை நினைவுகளை என்னுடன் பகிர்ந்து கொண்டார். தனது 21வது வயதில் அந்த வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு வீட்டில்தான் இருந்ததாகவும், தானும் அண்ணனும் நாடகத்தில் நடிப்பதற்காக கல்கத்தா சென்றிருந்த சமயம், தனது குடும்பத்தாரை வீட்டுக்காரர் வெளியே அனுப்பி விட்டதாகவும், அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது, இவரது கணவரும்தான்! இந்த அம்மையாரும்தான்! அதன்பிறகு இந்த அம்மையாரின் இல்லத்தில்தான் குடியிருந்ததாகவும், திரைப்படத் துறையில் ஓரளவுக்கு முன்னுக்கு வரும்வரை அங்கேதான் இருந்ததாகவும், அதாவது 1938 முதல் 1950 வரை அந்த வீட்டில்தான் தாங்கள் இருந்ததாகவும் புரட்சித்தலைவர் கூறி முடித்தார்.

அன்று நாங்கள் சந்தித்தது, திரு.மகாலிங்கம் அவர்களின் மனைவியான திருமதி. கிருஷ்ணவேணி அம்மையாரைத்தான்! இந்த வீடுதான் புரட்சித்தலைவரால் மறக்க முடியாத நினைவுகளுக்குச் சொந்தமான 147 —ம் எண் கொண்ட வீடு என்பது குறிப்பிடத்தக்கது!

நான் புரட்சித்தலைவருடன் அந்த அம்மையாரைச் சந்தித்தபோது, அவர்களது மகன் திரு.தங்கவேல் என்பவர் உடன் இருந்தார். திரு.தங்கவேலு இன்றும் என்னுடைய பிறந்த நாளில் வந்து வாழ்த்துச் சொல்லும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார் என்பது, புரட்சித்தலைவர்பால் கொண்ட அன்பில் திளைத்த நெசங்கள், என்னிடத்திலும் அன்பு கொண்டு நெகிழ்வதற்குச் சான்று!

புரட்சித்தலைவர் எத்தனையோ அற்புதங்களைச் செய்து விட்டுச் சென்றிருக்கும் மகோன்னதமானவர்! அவரது அற்புதங்களை அருகிருந்து பார்க்கக் கூடிய வாய்ப்பினை என்னைப் போன்றவர்களுக்குத் தந்து சென்றிருக்கிறார்! அதனை உங்களைப் போன்றவர்களுக்கு நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம்! இதுவெல்லாம் என் வாழ்க்கையில் கிடைத்த அற்புத நினைவுகள்!" எனப் புன்னகை தவழப் பேசும் டாக்டர். திரு.எச்.வி.ஹண்டே அவர்கள்.

கடந்த கால மகத்தான வரலாற்றுக்கும், எதிர்கால இணைய யுகத்துக்கும் இடையில் இருக்கும் 'பொக்கிஷ நினைவுச் சுரங்கம்' திரு.ஹண்டே அவர்கள்.

இந்தப் பேட்டியில் பளிச்சிட்டது அந்த வைரச் சுரங்கத்தின் ஒரு சில ஒளிக்கற்றைகள் மட்டுமே!

காலம் அந்தச் சுரங்கத்தின் பெருமைகளை என்றென்றும் பறைசாற்றவும், பளிச்சிடவும் செய்தபடியேதான் இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

(உரையாடல் – கொற்றவன்)

வெற்றுக் கோப்பை

புதிய ராஜா

சிலரது கோப்பையில்
பால்
நிறைந்த வண்ணமாய்...

சிலரது கோப்பையில்
தேன்
வழிந்த வாறாய்...

சிலரது கோப்பையில்
கசாயம்
குறைந்தபாடில்லை

இன்னும்
சிலரது கோப்பையில்
எந்நேரமும்
மது ததும்பல்

எது
நிறைந்தென்ன

ஒரு நாள்
வெறுமையடைந்து விடுகிறது
எல்லோருடைய கோப்பையும்

அன்பு பெருக...
மகிழ்ச்சி என்றும் தங்க...
செல்வம் நிலைக்க...
நோய் நீங்க...
முயற்சி பெருக...
வெற்றி என்றும்
உங்கள் வசமாக...
இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

யுகம்

விமலா ரமணி

நந்திவர்மனின் அந்தரங்க மந்திர ஆலோசனைக்கூடத்தில், அரசின் முக்கியப் பதவியிலிருக்கும் அனைத்து அமைச்சர்களும் ஒன்று சேர்ந்து அமர்ந்திருந்தனர்.

நடுவில் இருந்த ரத்தின சிம்மாசனத்தில், அரசன் நந்திவர்மன் அமர்ந்திருந்தான். அப்போது வாயில் காப்போன் வந்து, திருமுனைப்பாடி சிற்றரசர் நரசிங்கமுனையார் வந்திருப்பதாகக்கூற, வரச்சொல்லி ஆணையிட்டபின் திருமுனைப்பாடியார் வந்தார்.

"வாருங்கள் திருமுனைப்பாடியாரே என்ன சேதி?"

"மன்னா கடம்பர் குல மகளின் குலக்கொழுந்து நீங்கள். தங்கள் வீரத்தில் எமக்கு ஐயமில்லை. ஆனால், தங்களைச் சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களை அலட்சியப்படுத்தாதீர்கள் மன்னா"

முக்கிய அமைச்சர் எழுந்து மெல்லப் பேசினார்.

"அறிவோம் முனைப்பாடியாரே. அதற்காகத்தான் இந்த அவசரக் கூட்டம். வடக்கே ராக்ஷ்டிரகூடஅரசன் அமோகவர்ஷன், பல்லவ நாட்டின் மீது பாய நேரம் பார்த்திருக்கிறான். அரசர்க்குத் திறைச்செலுத்தும் சோனாட்டின் சில பகுதிகளைப் பிடிக்க ரகசியத் திட்டம் தீட்டி வருகிறான். அதுமட்டுமில்லை, அவனுக்குத் தூண்டுதலாக அரசரின் தாயாதி தம்பியான விக்கிரமன் முதலானோர் பகைவனுக்கு உதவக் காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் முனைப்பாடியார் என்ன புதுச்செய்திகொண்டு வந்திருக்கிறீர்கள்? அறியலாமா?"

"செய்தி அல்ல.. அரசரைக் காக்கும் ரக்ஷயை ஜீவரக்ஷயை கொண்டு வந்துள்ளேன் அமைச்சரே"

நந்திவர்மன் திகைத்தான்.

"ஜீவரக்ஷயா! என்ன அது? மன்னன் அனுமதி வழங்க, அந்த அவைக்கு ஒரு பளிங்குச் சிலை மெல்லிய துணியால் மூடப்பட்டு எடுத்து வரப்பட்டது.

காவலர்கள் அந்த மெல்லிய துணியை விலக்க, ஒரு அழகான பெண்ணின் முழு உருவம். சலவைக்கல்லில் செய்தது. அபயஹஸ்த முத்திரையுடன் நின்றது. அது சிலையா? இல்லை மெய்யாகவே ஒருபெண்ணா என்று மயங்கும் அளவிற்குச் சிலையின் அமைப்பு இருந்தது. நந்திவர்மன் திகைத்தான்.

"நய பரதனே இது சாதாரணச் சிலை அல்ல.. ஜீவராக சிலை. சில மூலிகைகளின் ரசாயனச்சேர்க்கை கொண்டு தயாரித்தது. இதனருகில் விஷமுள்ள எந்தப் பதார்த்தத்தைக் கொண்டுசென்றாலும் சிலை நீலநிறமாக மாறிவிடும். மன்னரை ஆபத்து சூழ்ந்திருக்கும் வேளையில், இந்தச்சிலை பாதுகாப்பாக ஜீவரக்ஷயாக இருக்கும் மன்னா"

நந்திவர்மன் வியந்தான். இப்படி ஒரு அற்புதமா?

அரசன் கட்டளைப்படி பொற்கிண்ணத்தில்

பால் கொண்டு வரப்பட்டு அதில் கொடிய நாகத்தின்விஷம் சேர்க்கப்பட்டது. அந்தப் பொற்கிண்ணம் சிலையின் மிக அருகில் கொண்டுசெல்லப்பட்டவுடன்

ஆச்சரியம் அற்புதம்! சிலை உடல் முழுவதும் நீலநிறமாக மாறியது.

தான் வடக்கே போயிருந்தபோது ஓர் அற்புதமான சிற்பியைச் சந்தித்ததாகவும், அவன் மூலம் இந்தச்சிலையை வடித்து எடுத்து வந்ததாகவும் அதை நந்திவர்மனுக்குக் கொடுக்க வந்ததாகவும் திருமுனைப்பாடியார் கூறினார்.

நந்திவர்மன் திறை செலுத்தவேண்டும் என்று அமோகவர்ஷனிடமிருந்து வந்த அந்த ஓலையை, நந்திவர்மன் திருப்பி அனுப்பினான். அத்துடன் போர்க்களத்தில் சந்திக்கவும் என்றும் தகவல் கொடுக்க

போரால் நடுநடுங்கிப் போன அமோகவர்ஷன், சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு, தன் மகள் சங்கையையும் நந்திவர்மனுக்கு மணமுடித்துக் கொடுத்தான்.

அது முதலிரவு அறை திருமணம் கோலாகலமாக



நடந்து முடிந்து மங்கல வாழ்த்துப் பாடல்களுடன் பொன்னும், பொருளும் சீதனமாகத் தரப்பட்டு புஷ்பப் பல்லாக்கில் சங்கை அற்புதமாக அலங்கரிக்கப்பட்டு, மாமன்னரின் அரண்மனைக்கு அழைத்து வரப்பட, அந்த அரண்மனைக்குள் நுழைந்த சங்கை, நந்திவர்மனின் புகழ் கண்டு, பெருமை கண்டு, வீரம் கண்டு வியந்தாள்.

'சர்வன்' என்று சிறப்புப் பெயர் பெற்ற இவள் தந்தையால் நந்திவர்மனை வெல்ல

முடியவில்லை. வலிமை மிகுந்தவன் வீரம் மிகுந்தவன்.. யானைப் படைத் துணையுடன் குருக்கோட்டிலே போர் நிகழ்த்தி வென்ற கோமான் தோற்ற அரசன் இவள் தந்தையால் தரப்பட்ட பரிசுதான் இவள்.! "தேவி என்ன யோசனை?" நந்திவர்மன் சங்கையின் மென்தோள்களைத் தொட, சங்கை வெட்கித் தலைகுனிந்தாள். அங்கு வைக்கப்பட்டிருந்த அந்தப் பளிங்குச் சிலை ஜீவரக்ஷ சிலை அவர்களைப் பாசத்துடன் பார்க்கிறது.

சங்கை யோசனையில் ஆழ்ந்திருந்தாள். ஐம்பெருங்குழுவும், எண் பேராயமும் அமைத்து திறம்பட அரசு செலுத்தும் நந்திவர்மனுக்கு எதிரிகள் அதிகம்தான். வானம் பொய்யாது, வளம்பிழைப்பு அறியாது நாடு செழிக்கிறது சந்தேகமில்லை. "உரைசால் பத்தினியை உயர்ந்தோரும் வணங்குவர்" _ என்று நந்திவர்மன் அடிக்கடி கூறுவான். இந்த உரைசால் பத்தினி? சங்கை யோசித்தாள். மெல்லிய துணியால் மூடப்பட்ட அந்த ஜீவரக்ஷக சிலையின் அருகே போய்ப் பார்த்தாள்.

துணியை விலக்கினாள். சிற்பம் அற்புதமாக இருந்தது. நந்திவர்மன் தற்சமயம் நாட்டில் இல்லை. பாண்டியன் ஸ்ரீமாறனையும், அவனுக்கு உயிர்த்துணையாகச் செயல்படும் தன் தம்பி விக்கிரமனையும் எதிர்த்துப் போராட தொள்ளாற்றுக்குப் போயிருக்கிறான் நந்திவர்மன். (தெள்ளாற்று) சங்கத் தமிழ் வளர்த்து மங்காப் புகழ் உடைய கூடல் மாநகராம் மதுரையிலிருந்து பல்லவனுக்கு உட்பட்டிருந்த சோழவள நாட்டின் சில பகுதிகளைக் கவர்ந்துவிட்டான் பாண்டியன் ஸ்ரீமாறன். பெண்ணை ஆறுவரை அவன் கையில்தான் இருந்தது.

பறிக்கப்பட்ட பகுதிகளை மீட்கப் புறப்பட்டு விட்டான் மன்னன். பாண்டியனுக்கும், விக்கிரமனுக்கும் புத்தி புகட்டத்தான் நந்திவர்மன் தெள்ளாற்றுப் போர் புரியப் புறப்பட்டிருக்கிறான்.

சங்கை ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். தெள்ளாற்றுப் போர் மிகக் கொடூரமான போர். பிற்காலத்தில் சிவபக்தனாக மாறப்போகும் நந்திவர்மன் நிகழ்த்திய கொடுமையான போர்.'குவலய மார்த்தாண்டன்' என்று போற்றப்பட்ட பேரரசன், போரில் தன்னிடம் தோற்று ஓடிவிட்ட பாண்டியனின் மகள் மாறன் பாவையை வேறு வழியின்றி மனைவியாக ஏற்றுக்கொண்டு அரசவைக்கு வெற்றியுடன், அத்துடன் வீரத் திருமகளுடன் அடி எடுத்து வைத்த அந்த நேரம் சங்கை நொறுங்கிப்போனாள்.

பகையின்றி பார் காக்கும் வேந்தன் கடைசியில் தன்னை வசித்துவிட்டானே என்று மனம்பொருமினாள். வீரத்தில் சிறந்த மன்னன் பெண் மனத்தைப் புரிந்துகொள்ளாத கயவனாகி

விட்டதை எண்ணிவருந்தினாள். போருக்குப் போனால் வெற்றித் திருமகளுடன் பகைவரின் மகளையும் துணைசேர்க்கவேண்டுமா? பாண்டியன் மகள் மாறன் பாவையை அந்தப்புரத்துக்கு அழைத்து வந்த அரசன், சங்கையைப் பார்த்தான்.

"சங்கை என்னை மன்னித்துவிடு இது காலத்தின் கட்டாயம். ஆனால் என்றும் என் பட்ட மகிஷிநீதான். இவள் இவள் பாண்டியன் மகள் மாறன் பாவை. இவள் என் மனைவி மட்டுமல்ல உன்சகோதரி அன்புடன் ஏற்றுக்கொள்"சங்கை கண்ணீர் துடைத்து பாவையின் கைப்பற்றி தன்னிருப்பிடம் கூட்டிச் சென்றாள். அந்தப் பளிங்குச் சிலை ஜீவரக்ஷசி பார்த்துக் கொண்டிருந்தாள். தன் ஒற்றன் கூறியதைக் கேட்ட நந்திவர்மன் திகைப்புடன். சங்கையின் அந்தப்புரம் தேடிப் போனான். அங்கே மாறன் பாவை இருந்தாள் சங்கையின் அரண்மனையில்.

"மாறன் பாவை? சங்கை எங்கே?"

"அக்காவைத் தேடித்தான் நானும் இங்கே வந்தேன் பிரபு."

"நீ சொல்வது பொய்.. உனக்கு பட்டத்தரசியாக ஆசை.. ஒற்றர்கள் வந்து தகவல் சொன்னார்கள். இந்தத் திருமணத்தில் உனக்கு விருப்பமில்லையாமே பட்டமகிஷியாக இல்லாமல், என் இரண்டாவது மனைவியாக வாழ உனக்கு விருப்பமில்லையாமே. அதனால் என் சங்கையைக் கொல்லத் துணிந்துவிட்டாயாமே."

"சர்வேஸ்வரா இதென்ன கொடுமை." மாறன் பாவை அழுதாள்."ஆம் தேவி நான் சங்கையைச் சந்திக்க இந்த வசந்தமாளிகை தேடி வரும்போது, வரும் வழியில் இருக்கும் இந்த நந்தவனத்தில் பூத்திருக்கும் காஷ்மீர ரோஜாக்களைப் பறித்து சங்கைக்குத் தருவதுவழக்கம். இதை அறிந்த நீ, இங்கு மலர்ந்திருக்கும் அந்தப் பூக்களில் எல்லாம் பூ நாகங்களை படரச்செய்திருக்கிறாயாமே! நான் கொடுத்த மலர்களை முகர்ந்து பார்க்கும் சங்கை அந்தப் பூ நாகங்களால் தாக்கப்பட்டு, மூச்சு முட்டி மூக்கில் ரத்தம் வழிய இறக்கவேண்டும் என்பதுதானே உன் திட்டம்? வேண்டாம் தேவி இந்தப் பூக்களை சங்கை முகரவேண்டாம். நானே முகர்ந்து பார்க்கிறேன். யார்பட்ட மகிசி என்கிற போட்டி உங்களுக்குள் வேண்டாம்."பேசியபடி நந்திவர்மன் நந்தவனத்தில் நுழைந்து மலர் ஒன்றினைப் பறிக்க முற்பட்டபோது

"அரசே அரசே நில்லுங்கள்.." என்று கதறியபடி ஓடி வந்தாள் சங்கை! அவளின் பின்னே காவலர்களால் பிடித்து இழுத்து வரப்படும் விக்கிரமன் நந்திவர்மனின் தாயாதித்தம்பி."

"சங்கை! உனக்கு ஒன்றும் ஆகவில்லையே ஒற்றர்கள் தெரிவித்தது?"

"தவறான செய்தி மன்னா உண்மையில் குற்றவாளி விக்ரமன்தான். உங்களைக் கொன்று அந்தப்பழியை எங்கள் இருவர் மீதும் சுமர்த்தி நாடு குழப்பமடைந்திருக்கும் நேரத்தில் ஆட்சியைப் பிடிக்க நினைத்த நயவசகன். என் அந்தரங்கச் சேடி ஒருத்தி, விக்கிரமனின் பழைய காதலி. அவள் மூலம் விவரமறிந்து விக்கிரமனை நம் மெய்காப்பாளர்களுடன் சென்று சிறைப்பிடித்து வந்தேன் பிரபு.' நந்திவர்மன் மெய்சிலிர்த்தான்.

"தம்பி விக்கிரமா இதோ இவள் சங்கை. இராக்ஷடிரகூட அரசரின் மகள் இவள் மாறன்பாவை. என்விரோதி பாண்டியனின் மகள். இவர்கள் இருவரும் என் உயிரைக் காக்கத் தங்கள் உயிரைத் தரத்தயாராக இருக்கிறார்கள். ஆனால் உறவு என்ற பந்தமுள்ள நீயோ என்னைக் கொல்ல நினைக்கிறாய். உனக்கு என் உயிர்தானே வேண்டும் எடுத்துக்கொள்'' விக்கிரமன் தலைகுனிந்தான்.

ஒருவழியாக அரண்மனையிலிருந்து அகற்றப்பட்டு அந்த நந்தவனத்தின் நடுவில் அலங்காரமாக வீற்றிருந்த ஜீவரக்ஷகச் சிற்பம் இந்தக் காட்சியைக் கண்டவாறு நிற்கிறது. விக்கிரமன் தன் உடைவாளை எடுத்தான்."மன்னர் மன்னா நான் அரசன் என்ற பதத்திற்கு அருகதை அற்றவன். இந்த உடைவாள்எனக்கெதற்கு?"கூறியபடி விக்கிரமன் தன் உடைவாளை உருவ அது தற்செயலாக அங்கு அலங்காரச் சிற்பமாய் நின்றிருந்த ஜீவரக்ஷகச் சிலையின் மீதுபட அடுத்த நொடிப் பொழுதில் அந்தச் சிலை நீலநிறமாக மாறிவிட விஷம் தடவிய உடைவாள்! மாமன்னரின் உயிர் குடிக்க நினைத்த உடைவாள். ஒரு நொடிக்குள் உண்மையை உணர்ந்து கொண்ட அரசரின் மெய்க்காப்பாளர்கள் விக்கிரமனை அந்த இடத்திலேயே அவனது விஷஉடைவாளால் 'களப்பலி' தர மாறன் பாவை கண்களை மூடிக்கொள்கிறாள். சங்கை நந்திவர்மனின் தோளில் சாய்கிறாள்.

நந்திவர்மன் அந்தச் சிலையைப் பார்க்கிறான். உண்மையில் ஜீவரக்ஷசி இந்தச் சிலையா? இல்லைஇந்தப் பெண்களா? இவர்கள் பூ நாகங்கள் அல்ல பூவின் சுகந்தங்கள்.

பிரிவின் நீட்சி

புதுப் புது அவதரிப்புகளாக
ஒவ்வொரு பயணமும்
கையசைக்கத் தாமதித்து
கலங்கிய கண்களைத் திருட்டுத்தனமாகத்
துடைத்துக் கொண்டும்
சிரிக்க முடிகிறதே சில சமயங்களில்
அழுகையை அடிமனதில்
அடக்கிக்கொண்டு வார்த்தை வராமல்
முகம் கோணி தலையசைத்து
விடைபெறும்போது

விருட்டெனச் சிந்தும்
சில கண்ணீர்த் துளிகள்
கவலையில் முகம் சோர்ந்து
கவலைப்படாதே எனச் சொல்லும்
தோரணையில் ஒவ்வொன்றும்
உறவுக்குள்ளும் நட்புக்குள்ளும்
மனதை விட்டுவிட்டு
வாழ்வை கோபிக்க முடியா பட்சமாய்

தொலைவாய் சென்று
திரும்பிப் பார்க்கும் கணங்கள்
ஈரம் படாத இதழ்கள்
வறட்டுப் புன்னகையில்
கை குலுக்கி விடை கொடுத்த முகங்கள்

அதே இடத்தில் எல்லாம்
புள்ளியாய்க் கண்ணில் கரைய
விசும்பும் இதயத்தோடு
பயண நடுவில் இமை மூடி
தூங்கும் பாவனையில்
பின் நோக்கி உருளும் நினைவுகள்
எல்லாம் சிறு பிரிவாய் சமாதானம்

அறிவுநிதி

படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!

* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!

தொடர்புகளுக்கு

editor@ithamil.com

காஜல் அகர்வாலின் மெழுகுச்சிலை வரும் பிப்ரவரி சிங்கப்பூரில் மேடம் துசாட் மியூசியத்தில் திறப்பு விழா காண உள்ளது. இச்சிலையை காஜலே திறந்து வைக்கிறார். "மேடம் துசாட்ஸ் மியூசியத்தில் பிரபலங்களைக் கண்டு மகிழ்ந்த நானே, அங்கு சிலையாகப் போகிறேன் என்ற செய்தி கேட்டு, உண்மையிலேயே நான் சிலையாகத்தான் போய்விட்டேன்" என ஆனந்தத்தில் திளைக்கிறார். காஜல் அகர்வால் 'பாரிஸ் பாரிஸ்' படம் விரைவில் திரைக்கு வர உள்ளது. கமல்ஹாசன் ஜோடியாக இந்தியன்—2, இந்தி, தெலுங்கு படங்களும் கைவசம் வைத்துள்ளார்.

அட போங்கப்பா... இதெல்லாம் சிரமமாப்பா!

கலை கொடுத்தான் அவள் வண்ணக் கண்ணுக்கு...

எவ்வளவோ பண்ணிட்டீங்க! இதைப் பண்ண மாட்டீங்களா?!

சிலை வடித்தான் ஒரு சின்னப் பெண்ணுக்கு...

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் உருவாகியுள்ள படம் 'தர்பார்'. லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தில் நயன்தாரா, சுனில் ஷெட்டி, நிவேதா தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்ய, அனிருத் இசையமைத்துள்ள இப்படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழாவில், 'தர்பார்' படத்தில் நடிக்கக் கொஞ்சம் கஷ்டப்பட்டேன்' என்று ரஜினி தெரிவித்தார். "ஆதித்யா அருணாச்சலம் கதாபாத்திரம் வழக்கமான போலீஸ் இல்லை. அதற்குள் பெரிய சோகம் இருக்கிறது. இதில் நடிக்க நான் கொஞ்சம் கஷ்டப்பட்டேன். கதாபாத்திரத்துக்கு ஏற்றவாறு மனதுக்குள் பெரிய பாரத்தை வைத்துக் கொண்டு நடிப்பது கடினமாக இருந்தது." என்றார் ரஜினி.

கூட்டணி ஒன்று உருவாகிறது!

இயக்குநர் மித்ரன் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் சிவகார்த்திகேயனின் 'ஹீரோ' படம் பரவலான வெற்றியைப் பெற்று, அப்படத்தின் அனைத்துக் கலைஞர்களுக்கும் நல்ல பெயரைத் தந்திருக்கிறது. இதில், கல்யாணி பிரியதர்ஷன், இவானா, அர்ஜுன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். யுவன் ஷங்கர் ராஜா இசையில், ஜார்ஜ் சி.வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்தின் இதே கூட்டணி மீண்டும் ஒரு படத்தில் இணைவதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது. வெற்றிக் கூட்டணி உருவாக வேண்டும் என்பதே இவர்களது எண்ணமாம்!

தேர்தல் கூட்டணியாய் இல்லாமல் இருந்தால் சரி!

அடி, நீதானா பூங்குழலி!?

படகோட்டும் பட்டம்மா, பாட்டொண்ணு கட்டம்மா!...

அமரர் 'கல்கி'யின் பிரமாண்ட வரலாற்று நாவலான பொன்னியின் செல்வனை படமாக்கி வருகிறார் இயக்குனர் மணிரத்னம். தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாள மொழிகளில் உருவாகும் இப்படத்தில் விக்ரம், ஜெயம் ரவி, கார்த்தி, விக்ரம் பிரபு, மோகன் லால், த்ரிஷா, ஐஸ்வர்யா ராய் உட்பட பலர் நடிக்கின்றனர். லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிக்க, ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். தற்போது இதில், விஷாலுடன் 'ஆக்ஷன்' படத்தில் நடித்தவரான ஐஸ்வர்யா லட்சுமியும் இணைந்துள்ளார். மலையாளத்தில் முன்னணி ஹீரோக்களுடன் நடித்துள்ள இவர், 'பொன்னியின் செல்வன்' படத்தில், முக்கியமான கேரக்டரில் நடிக்கிறார். இதற்காக கேரளக் கடற்பகுதியில் படகு ஓட்டி பயிற்சிப் பெற்று, இப்போது தாய்லாந்து படப்பிடிப்பில் நடித்து வருகிறார்.

தாயுமானவர்

முதன்முறையாக திரு.எம்.ஜி.சி.இராமமூர்த்தி அவர்கள் மனம் திறக்கும் நினைவலைகள்...

10

கொற்றவன்

“சித்தப்பா செய்த சாதனைகளும் அற்புதங்களும் எத்தனையோ சொல்லலாம்! அவருடன் ஒரு சில நாட்களே பழகியவர்களானாலும்கூட, அவர்களிடத்திலும் அவர் நிகழ்த்திய மனிதநேயச் செயல்களும் கற்பனைக்கும் எட்டாத சாகசங்களும் இருக்கக்கூடும்! அதுதான் அவருடைய மகாசக்தி! இதை அவர் அருகில் இருந்த எவரும் ஏற்றுக்கொள்வார்கள்! காரணம், தனது வரலாற்றுப் பக்கங்கள் அத்தனையிலும் அப்படியான அற்புதங்களை நிகழ்த்தி விட்டுப்போன அவரைப் பற்றிச் சொல்வதற்கு எவ்வளவோ இருக்கின்றது!” தன்னைத் தோள்மீதும் மார்மீதும் சுமந்து வளர்த்த அந்த மகத்தான தாயுமானவரான மக்கள் திலகத்தின் நினைவுகள் அலைமோதக் கூறுகிறார் திரு ராமமூர்த்தி அவர்கள்.

அந்நேரத்தில்,

மக்கள்திலகத்தின் அற்புதங்கள் என்று திரு. ராமமூர்த்தி அவர்கள் கூறும்போது, மக்கள் திலகம் அளித்த அற்புதமான கோடை ஒன்று நினைவுக்கு வந்தது. அது என்னிடத்தில் பெட்டி வழங்கிய பொது, திரு. சங்கர் அவர்கள் கூறிய செய்தி!” என்றேன்.

“என்ன அது?” ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் கேட்கும், திரு. ராமமூர்த்தி அவர்கள் நாராக

அறிந்த செய்திதான் என்றாலும், திரு. சங்கர் அவர்கள் வழங்கிய பேட்டி அவரது வாய்மொழி வடிவத்தின்படியே சுவைக்குன்றாமல் இதோ:

'பல்லாண்டு வாழ் திரைப்படத்தைக் கர்நாடகாவில் உள்ள கலசபுராவில் படமாக்கிக் கொண்டிருந்தோம். சுமார் இரண்டு மாதங்கள் படப்பிடிப்பு! அங்கு எடுக்கப்பட்ட காட்சிகளின் மேட்ச்வொர்க்என்றுசொல்லக்கூடியகாட்சிகளைப் பின்னர் சத்யா ஸ்டூடியோவில் படமாக்கினோம்.

கலசபுராவில் இருந்தபோது ஒருநாள் மக்கள் திலகம் கேட்டார் "கொல்லூர் மூகாம்பிகைக் கோயில் எங்கிருக்கிறது?"

"சிலமணி நேரப் பயணம்தான்" என்றேன்.

"என் தாயார் மூகாம்பிகை பக்தை! அவர்கள் அங்கே இப்போதும் போயிருக்கிறார்கள். நாமும் ஒருமுறை அந்தக் கோயிலுக்குப் போய் வருவோமா? என அவர் கேட்டது எனக்கு ஆச்சரியமாகவும் அதைவிடவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

நிச்சயமாக அந்த கோயிலுக்குப் போய் வருவோம் என்று அவர் என்னையும் அந்த கோயிலுக்கு அழைத்துச் சென்றிருக்கலாம் என்று கேட்டால் "நிச்சயமாக போய் வருவோம். உங்களை அங்கே அழைத்துப் போவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி!" என்றேன்.

அதன்படி ஒருநாள் விடியற் காலையில் மூகாம்பிகைக் கோவிலுக்கு சென்றோம். அந்தக் கோயில் விதிப்படி ஆண்கள் மேலாடை அணியக்கூடாது. எனவே அவரும் சட்டை இல்லாமல் கோயிலுக்கு வந்தார். அவர் வந்ததை அறிந்ததும், 'எம்ஜிஆர் வந்திருக்கிறார்! எம்ஜிஆர் வந்திருக்கிறார்!' என்று கூட்டம் கூடிவிட்டது. நாங்கள் கோயிலுக்குள் நுழைந்த அடுத்த நொடி, அம்மனுக்கு அலங்காரம் செய்து, கதவைத் திறக்கிறார்கள். தீபாராதனை நடக்கிறது. ஏதோ இவர் வருவதற்காகவே காத்திருந்து போல இருந்தது அந்தக் காட்சி!

பின்னர் அங்கிருந்த சங்கர பீடம் என்ற இடத்துக்கு அழைத்துச் சென்றேன். அது ஆதிசங்கரர் அமர்ந்து தியானம் செய்த இடம்! அங்கே அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். சற்று நேரத்தில் குளிர்ச்சியான அந்த இடத்தில் அவருக்கு உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது.

வெகுநேரம் கழித்து கண் திறந்தவருக்கு மளமளவென்று கண்ணீர் வழிந்தது. என் கையைப் பிடித்துக்கொண்டு "இன்றைய நாளை என் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாது! அப்படிப்பட்ட வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறீர்கள்!" என்று மனமுருகச் சொன்னார்.

அப்படி அவருக்குள் என்ன மாற்றம் நிகழ்ந்தது? அவரது தியானத்தில் என்ன நிகழ்ந்தது என்பதெல்லாம் அவர் மட்டுமே அறிந்த ரகசியம்!

"அந்த மூகாம்பிகை வடிவில் என் தாயைக் காண்கிறேன்!" என்றவர், அன்றுமுதல் அவர் மூகாம்பிகை பக்தரானார். எந்த அளவுக்கு அவர் மூகாம்பிகை அன்னைக்கு தன் மனதில் இடம் கொடுத்திருந்தார் என்பதற்கு இன்னுமொரு உதாரணம் சொல்கிறேன்.

'நாடோடி மன்னன்' படத்தின் வெற்றிவிழாவில் அவருக்கு வழங்கப்பட்ட, இன்றைக்குப் பல இலட்சங்கள் மதிப்புள்ள தங்க வாளை மூகாம்பிகை கையில் கொண்டு போய் சேர்க்க வேண்டும் விரும்பினார். அவரது விருப்பப்படி அந்த வாளைக் கொண்டுபோய் மூகாம்பிகையிடம் சேர்ப்பித்தோம்!

முதன்முறையாகத் தேர்தலில் வெற்றிபெற்று முதல்வரான போது, திடீரென்று ஒருநாள் எனக்குத் தொலைபேசி அழைப்பு!

"உடனடியாக நீங்கள் மூகாம்பிகை கோவிலுக்குச் சென்று, அன்னையிடமிருந்து பிரசாதம் பெற்றுக்கொண்டு வந்து என்னிடம் தர வேண்டும்! அதன் பிறகுதான் நான் முதல்வர் நாற்காலியில் அமர்வேன்!" என்று திட்டவட்டமாகக் கூறினார். திடுதிப்பென்று இப்படிச் சொல்வார் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

உடனடியாக நான் கொல்லூர் செல்வதற்கு ஏற்பாடானது. இங்கிருந்து பெங்களூர், பின் மங்களூர் என விமானத்தில் பறந்து பறந்து கொல்லூர் மூகாம்பிகைக் கோயிலுக்குச் சென்று வந்தஎனது அனுபவம்,ஒரு பரபரப்பான கிளைமாக்ஸ் காட்சி போல இருந்தது.

அவரிடத்தில் கொல்லூர் மூகாம்பிகை அம்மனின் பிரசாதத்தை கையில் கொடுத்த பிறகுதான் அவர் முதல்வர் நாற்காலியில் அமர்ந்தார் என்பது அவரது அழுத்தமான மூகாம்பிகை பக்தியின் வெளிப்பாடு!"

இவ்வாறு இயக்குனர் திரு. கே. சங்கர் அவர்கள் தெரிவித்திருந்தார்.

"அவரைப் பேட்டி கண்டபோது அவர் தெரிவித்ததனை என்னிடமிருந்த ஒரு சிறிய காமிராவில் படம்பிடித்திருக்கிறேன்" என்றேன்.

இதைக்கேட்டதும், அருகிலிருந்த திருமதி விஜயலட்சுமி அம்மையார், தன் தந்தையார் பேசிய அந்த வீடியோ காட்சியை பார்க்கவேண்டும் என்றும், அவரது குரலைக் கேட்கவேண்டும் என்றும் பாசமிக்கதொரு குழந்தையின் அன்புடனும் ஆர்வத்துடனும் கேட்டுக் கொண்டார்.

நிச்சயமாக அடுத்த முறை வரும்போது அந்த காட்சிப் பதிவைக் காட்டுவதாக வாக்களித்துவிட்டு மீண்டும் திரு.ராமமூர்த்தி அவர்களின் உரையாடலைத் தொடர்ந்தோம்.

நீங்கள் சொன்னது போல, என் மாமனார் திரு.சங்கர் அவர்கள் கலசபுராவில் 'பல்லாண்டு வாழ்க' காட்சிகளைப் படமாக்கிக் கொண்டிருந்தபோது, ஒரு முறை சித்தப்பாவை காண்பதற்காக நாங்களும் அங்கு சென்றிருந்தோம். அப்போது அவர் அரசியலில் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டு நேரம்!

நான் தயாரிப்பாளராக வேண்டுமென்று சித்தப்பா விரும்பினார். அதற்காகத்தான் 'அரசகட்டளை' படத்தை எங்களுடைய பேனரில், என்னைத் தயாரிப்பாளராக்கி வெளியிட்டார். அதன் பிறகு சத்தியத்தாய் புரெடக்ஷன் என்ற பட நிறுவனத்தைத் துவங்கி எனக்கு ஒரு படம் செய்து கொடுப்பதற்கு முயற்சித்தார்.

அப்போது நாங்கள் 'சீமா' என்ற ஒரு இந்திப் படத்தைத் தமிழில் எடுக்க வேண்டும் என்று முயற்சித்தோம். அதற்காகப் புலவர் புலமைப்பித்தன் எழுதிய பாடல் வரிகள் என்னுடைய தயாரிப்பில் பாடல் பதிவாகியது. இந்தப் பாடல் வரிகள் இன்னமும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது!" என்றவர், சற்றே கண்களை மூடி அந்த வரிகளை மந்திரம் சொல்வது போலக் கூறுகிறார்.

'கருணை என்ற தீபம் ஒன்றை ஏற்றி வைக்கின்றேன்!
அது காலம் தோறும் அணைந்திடாமல் காத்து நிற்கின்றேன்!
இருளில் வாழும் உயிர்கள் கண்ணில் ஒளியைப் பார்க்கிறேன்!
அதன் இதயம் எங்கும் அமைதி தீபம் பரவக் காண்கிறேன்!'

—இதுதான் அந்தப் பாடலின் பல்லவி! அரசியல் நெருக்கடியான நேரத்தில் அந்தப் படம் உருவாகாமல் போயிற்று.

ஆனால் எனக்கென ஒரு படம் செய்துதர வேண்டுமென்று திரு. என்.டி.ராமாராவ் அவர்களுக்கு தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு, 'என் மகன் எடுக்கும் படத்தில் நீங்கள் நடிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அவரும், 'அண்ணயகாரு! நீங்கள் சொல்லிவிட்டால் நான் மறுப்பேனா" என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

இதற்கிடையில் சித்தப்பா முதல்வராகப் பொறுப்பேற்றதனால், எனக்கான படத்தை அவரால் நடித்துக் கொடுக்க முடியாமல் போயிற்று. ஆனால் திரு.என்.டி.ஆர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி ஒரு படம் அவர் நடித்துக் கொடுத்தார்.

'பல்லாண்டு வாழ்க' படக்குழுவினர்தான் அந்தப் படத்தை முடித்துக் கொடுத்தார்கள் திரு.கே. சங்கர் அவர்கள் இயக்க, லதா கதாநாயகியாக கே.வி.மகாதேவன் அவர்கள் இசையமைக்க திரு. என். டி ராமராவ் நடித்த அந்த 'சிருங்கார ராமுடு' என்ற படம் வெற்றிப் படமாக அமைந்தது. சத்தியத்தாய் தயாரிப்பில் வெளிவந்த படம்!

எனவே என்னுடைய திரைப்பயணம் என்பது சித்தப்பாவால் துவங்கப்பட்டு உறுதியான ஒரு இடத்துக்கு வந்தது என்று சொல்லலாம். எனக்கும் சித்தப்பா வழியில் படங்களைக் கொடுத்தேன் என்ற ஒரு பெரும் நிறைவு இருக்கிறது." எனத் தனது திரையுலக அனுபவங்களை ஒரு தயாரிப்பாளராக விளக்குகிறார்.

“சித்தப்பாவின் கடைசிப் படம் ‘மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்’ அந்தப் படத்தில் அவர் பம்பரமாகச் சுழன்று இரவுபகல் பாராது நடித்துக்கொண்டிருந்தார். திரு.கே.சங்கர் அவர்களும் அந்தப் படத்தின் இறுதி காட்சிகளில் பங்குபெற்று ராஜஸ்தானில் நடக்கும் காட்சிகளையெல்லாம் அற்புதமாகப் படமாக்கிக் கொடுத்தார். அந்தப் படத்தில் பத்மபிரியா கதாநாயகியாக அறிமுகமானார். அவர் ஏற்கனவே திரு.சிவாஜிகணேசன் அவர்களுடன் ஒரு படம் நடித்திருந்த போதும், ‘மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்’ வெளிவந்து அவருக்கு அறிமுகக் கதாநாயகி என்ற அந்தஸ்தைக் கொடுத்தது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், சித்தப்பா உருவாக்கிய நட்சத்திரங்கள் எவரும் சோடை போனதில்லை!

‘வாத்தியார் வீட்டுப் பிள்ளை மக்கு!’ என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் தாயுமான தந்தையான எங்கள் வாத்தியார் வழியில் நிற்பவர்கள் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். அதற்கு எத்தனையோ சாட்சிகள் உண்டு!” என அடக்கமாகச் சொல்லும் திரு.ராமமூர்த்தி அவர்களின் வார்த்தைகள், வார்த்தைக்கு வார்த்தை சத்தியம் நிறைந்தவை! சத்தியத்தாய் புரடக்சன் அதிபர் அல்லவா அதனால் அவர் வார்த்தையில் சத்தியம் இருக்கத்தானே செய்யும்!

மக்கள்திலகம் திரைத்துறையில் அறிமுகப்படுத்திய சரோஜாதேவி, மஞ்சுளா, லதா. பத்மபிரியா எனக் கதாநாயகிகளும் அவர் அறிமுகப்படுத்திய தயாரிப்பாளரான சின்னப்பா தேவர் போன்றவர்களும், மாபெரும் வளர்ச்சியைக் கண்டவர்கள்

அரசியலில் அவர் அறிமுகப்படுத்திய செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தியாவையே திரும்பிப் பார்க்கச் செய்த உயரத்துக்குச் சென்றவரல்லவா!

தொட்டதெல்லாம் துலங்கும் பொன்மனம் கொண்டவர் அல்லவா பொன்மனச்செம்மல்!..

(பயணிப்போம்!...)

அலமாரி

புத்தக விமர்சனம்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மறுபிறவி எடுத்த வரலாறு

விலை : ரூ. 300

வாழ்க்கை வரலாறு

நூல் ஆசிரியர்:

டாக்டர்.எச்.வி.ஹண்டே

வெளியீடு:

வசந்தா பதிப்பகம்,

ஆதம்பாக்கம்,

சென்னை –88

தமிழகத்தைப் பொருத்தளவில் என்றில்லாது, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடையே இன்றளவும் உச்சரிக்கப்படும் ஒரு மந்திரச் சொல்லாக நிலைத்து விட்டது 'எம்.ஜி.ஆர்.' என்ற மூன்றெழுத்து!

கடந்த கால வரலாற்றின் பக்கங்களில் மட்டுமின்றி, எதிர்காலத்துக்குமான சிந்தனைகளை விதைத்து விட்டுப் போயிருக்கும் அந்த மூன்றெழுத்து மந்திரச் சொல்லுக்கு உரியவரான மாமனிதர், தான் வாழும் காலத்தில் மூன்றுமுறை பிறவியெடுத்து வந்த சாதனையைச் செய்தவர்!அவரது மறுபிறவிக்கு ஒப்பான பரபரப்பான நாட்களில் நிகழ்ந்த சம்பவங்களை எல்லாம் நாள் வாரியாக, மணித்துளிகள் வாரியாக அருகிருந்து குறிப்பெடுத்து, ஒரு விறுவிறுப்பான புதினம் போல் தந்திருக்கிறார் நாடறிந்த மருத்துவரும், அரசியல் ஆளுமையுமான இந்நூலாசிரியர் திரு.ஹண்டே அவர்கள்.

படிக்கப் படிக்க திடீர்த் திருப்பங்களைக் கொண்டு, எம்.ஜி.ஆர் என்றவொரு ஒரு அசாத்திய மனிதர் எப்படி மரணதேவனைச் சந்தித்து மீண்டுவந்தார் என்பது அற்புதமான விதத்தில் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.இதுநாள் வரையில் விரிவாக சொல்லமுடியாமல் இருந்த செய்தி, தற்போது துல்லியமாகச் சொல்லப்பட்டுள்ளது. வாசிப்பவர்களை அந்தக் காலகட்டத்துக்கே அழைத்துச் செல்லும் அற்புத நடையில் வடிக்கப்பட்டுள்ள இந்நூல், மக்கள்திலகத்தின் ரசிகர்கள் கையில் மட்டுமல்லாது, மனிதத்தை நேசிக்கும் பலரின் கையிலும் இருக்க வேண்டிய மகத்துவம் மிக்கது!

அறிவோம் தமிழர்

பாட்டுக்கொரு புலவன்

'பாரத தேசத்து சங்கீதம் பூமியிலுள்ள எல்லா தேசத்து சங்கீதத்தைக் காட்டிலும் மேலானது. கவிதையைப் போலவே சங்கீதத்திலும் நவரஸங்களின் தொழில் இருக்க வேண்டும். இன்ன இன்ன ராகங்களிலே இன்ன இன்ன சமயங்களில் இன்ன இன்ன ரஸங்கள் தோன்றப் பாட வேண்டுமென்ற விதிகள் எல்லாம் பூர்வ காலத்து நூல்களிலே காணப்படுகின்றன' என்று மகாகவி பாரதி கூறியுள்ளார். இவ்வாறு இசை குறித்தும், அவை பாட்டோடு இயைந்தும் இரண்டறக் கலந்தும் இருக்க வேண்டியது குறித்தும் தன்னுடைய கட்டுரைகளிலும் கவிதைகளிலும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார் மகாகவி பாரதி.

நாமக்கல் கவிஞர் மகாகவி பாரதியைச் சந்திக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பியிருக்கிறார். நாமக்கல்லார் நல்ல ஓவியர். ஓவியம் வரைவதைத் தொழிலாக மேற்கொண்டவர். ஓவியத் தொழில் தொடர்பாக ஒருமுறை நாமக்கல் கவிஞர் காரைக்குடியில் இருந்துள்ளார். அச்சமயத்தில் பாரதி காரைக்குடிக்கு அருகிலுள்ள கானாடுகாத்தானில் தங்கியிருக்கிற செய்தி நாமக்கல்லாரை எட்டியது.

கானாடுகாத்தானுக்குச் சென்று நாமக்கல் கவிஞர் பாரதியைச் சந்தித்தது பற்றியான தனது அனுபவத்தைப் பதிவு செய்துள்ளார்.

பாரதியைச் சந்தித்த பரவசத்தில் பாரதியின் பாட்டொன்றை அவர் வாயாலேயே கேட்டுவிட வேண்டுமென்று ஆசைப்பட்டு தயங்கித் தயங்கி பாரதியைப் பாடச்சொல்லிக் கேட்டுள்ளார் நாமக்கல்லார். 'அப்படியா! என்னைப் பாடச் சொல்லுகிறீரா? பாட்டு 'ஆர்டருக்கு' வராது. பாடும் போது கேளும்' என்றாராம் மகாகவி பாரதி. மகாகவி பாரதி பலரிடம் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் அருகிலிருந்து பார்த்துவிட்டு இரவு நெடு நேரமான காரணத்தால் நாமக்கல்லாரும், மகாகவி பாரதியிடம் அறிமுகப்படுத்த, காரைக்குடியிலிருந்து அவரை அழைத்து வந்த மகாகவி பாரதியின் நண்பரான வெங்கடகிருஷ்ணய்யரும் மகாகவி பாரதி படுத்திருந்த இடத்திலேயே படுத்துக் கொண்டனராம். மகாகவி பாரதி விடிவதற்கு முன்பு கானாடுகாத்தனிலிருந்து புறப்பட்டு திருச்சிக்குச் சென்று அங்கிருந்து ரயிலில் சென்னை செல்ல வேண்டியவர். அதற்கான ஆயத்தங்களைச் செய்து விட்டுத்தான் படுத்துள்ளார் மகாகவி பாரதி.

'பாரதியார் தூங்கினாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. நான் மெய்மறந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது யாரோ என்னை ஓங்கி அடித்துத் தட்டி எழுப்புவதைப் போல உணர்ந்தேன். நல்ல தூக்கம். உடனே எழுந்திருக்கக்

த.ஸ்டாலின் குணசேகரன்

கூட இயலவில்லை. ஆனாலும், யாரோ என்னை ஓயாமல் எழுப்பிக் கொண்டிருந்ததை மட்டும் உணர முடிந்தது. வெகுநேரம் வரையில் புரண்டு புரண்டு எங்கே இருக்கிறோம்! என்ன சத்தம்! எழுப்புவது யார்! என்பனவற்றை அறியாமலேயே கண்ணைத் திறந்தேன். வெளிச்சமில்லை. யாரோ பாடுவதுபோல ஓர் ஓசை மட்டும் காதில் விழுந்தது. சிறுகச் சிறுக தூக்கத்தின் மப்புகள் விலகி 'மகாகவி பாரதியைப் பார்க்க கானாடுகாத்தானுக்கு வந்து படுத்திருக்கிறோம்' என்ற நினைப்பு வந்தது. கூடவே 'பிள்ளை! பிள்ளை! பாட்டுக் கேட்க வேண்டுமென்று ஆசைப்பட்டீரே! பாடப் போகிறேன் எழுந்திரும்' என்ற மகாகவி பாரதியாருடைய கம்பீரமான அழைப்பும் காதில் விழுந்தது. உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து, 'பாடுங்கள் பாடுங்கள் என் றேன்' என் று வாசிப்போர்

மனக்கண்ணில் அச்சூழலை உணர வைக்கும் விதத்தில் கட்டுரையொன்றில் எழுதி வைத்துள்ளார் நாமக்கல்லார்.

'பாடினாரே பாரதியார்! அடடா! அந்தப் பாட்டுகளின் பாணியையும் அவற்றைக் கேட்டு அப்போது எனக்குண்டான உணர்ச்சிகளையும் எழுத்தின் மூலமாக விளக்கிட முடியவே முடியாது. அவர் பாடினதைப் போல வேறு யாருடைய பாட்டும் என்னுடைய உணர்ச்சிகளைக் கிண்டிவிட்டு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவில்லை. பாரதியார் பாடுவதை நேரில் கேட்டுவிட்ட எவரும் அவருக்கு அடிமைப்பட்டு விடுவார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது' என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டதோடு நிறுத்திக்கொள்ளவில்லை நாமக்கல் கவிஞர்.

'சுமார் மூன்று மணி நேரம்

மூச்சுவிடாமல் பாடினார். வீட்டில் தூங்கினவர்கள் எல்லோரும் வந்து சூழ்ந்து கொண்டார்கள். அக்கம்பக்கம் வீட்டுக்காரர்களில் பலரும் வந்து கூடிக்கொண்டார்கள். 'வந்தவர்கள் யார்? கேட்பது யார்? எந்தப்பாட்டை விரும்புவார்கள்? எந்தப்பாட்டில் எவருக்கு இச்சை? என எதையும் சட்டை செய்யாமல் அவர் தனக்குத்தானே பாடிக் கொண்டார். விடியற்காலம் வந்தது. மகாகவி பாரதியார் பயணப்பட வேண்டிய நேரமும் நெருங்கிற்று. அவரை ஊருக்கு அனுப்பி வைக்க வேண்டிய நண்பர்கள் துடிக்கிறார்கள். அவரைத் திருமயத்துக்குக் கொண்டு போய்விட்டு வரவேண்டிய வண்டியிற் பூட்டப்பட்டு நிற்கும் வெகு விலையுயர்ந்த காளைகள் பாய்ச்சலுக்குத் தயாராகப் பதைத்துக் கொண்டிருக்கின்றன. மகாகவி பாரதியாரோ பாடிக்கொண்டேயிருந்தார். பாட்டை நிறுத்தச் சொல்ல யாருக்குத்தான் மனம் வரும்? அத்தோடு அவ்வளவு ஆவேசத்தோடு பாடும் அவரை அணுகி பாட்டை நிறுத்தச் சொல்லக்கூடிய தைரியம்தான் யாருக்கு வரும்?

பக்தியினாலும் பயத்தினாலும் இப்படி எல்லோரும் திகைத்துக் கொண்டிருக்கிற சமயத்தில் திடீரென்று பாரதியார் பாட்டை முடித்துவிட்டு எழுந்து 'போதுமா பாட்டு? இனிப் புறப்படுவோம்' என்று சொல்லிக் கொண்டே வாசலில் நின்ற வண்டிக்குச் சென்று விட்டார்' என்று மகாகவி பாரதி பாடிய விதம் குறித்து வியந்து வியந்து எழுதியுள்ளார் நாமக்கல் கவிஞர்.

தமிழறிஞர் எஸ்.வையாபுரிப்பிள்ளை தொடக்க காலத்தில் திருவனந்தபுரத்தில் சிறிது காலம் வழக்குரைஞராகப் பணியாற்றி வந்தார். 1918—ஆம் ஆண்டு வேறு வேலையாக திருவனந்தபுரம் சென்றிருந்த மகாகவி பாரதியை வையாபுரிப்பிள்ளை எதேச்சையாக சாலையில் சந்திக்க நேர்ந்தது. அங்கு அப்போது வேறு ஓர் அரங்கக் கூட்டத்துக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தவர்களில் வையாபுரிப் பிள்ளையும் ஒருவர். மகாகவி பாரதியை கூட்ட அரங்கத்திற்குள் அழைத்துச் சென்ற வையாபுரிப்பிள்ளை, அவரை நேரில் சந்திக்க வேண்டுமென்ற தனது நெடுநாள் ஆசை நிறைவேறிவிட்ட மகிழ்ச்சியில் திளைத்தார். சிறிதுநேர உரையாடலுக்குப் பின்னர் மகாகவி பாரதியின் ஊழிக்கூத்துப் பாடலை அவரே பாடக் கேட்க வேண்டுமென்ற தனது பெருவிருப்பத்தை மகாகவி பாரதியிடம் தெரிவித்து அந்தப் பாடலைப் பாட அவரிடம் வேண்டினார். மகாகவி பாரதியும் அவரது வேண்டுகோளுக்கு இணங்கிப் பாடினார்.

'நீண்ட நேரம் அவர் கண்கள் மூடியிருந்தன. முகத்திலே ஒரு துடிதுடிப்பு. சரீரம் முழுவதிலும் ஒரு வேகம். 'வெடிபடும் அண்டத்திடி பல தாளம் போட' என்ற சொற்கள் கம்பீரத்தோடு வெளிவந்தன. ஒவ்வொரு சொல்லும், ஒவ்வோர் அடியும், அவரது



ஆத்ம சக்தியினின்று பொருளும் ஆற்றலும் பெற்று, எங்கள் மனக்கண்முன் கூத்தாடின. உலகம் தகர்வது, ஊழிமுடிவது, ஒவ்வொன்றும் கண்முன் நிகழ்வது போலவே இருந்தது. பாட்டின் பொருளோடு ஒன்றுபட்டு லயித்து அவர்பாடும்போது , அவர் கண்கள் சுழன்றன. கருவிழிகள் மேலேறி மறையத் தொடங்கின. 'ஊழிக் கூத்தில் அகப்பட்டு விட்டோம்!' என்ற பீதி எங்களுக்கும் உண்டாயிற்று. சங்கீதத்தின் ஆற்றலை நான் அன்று உணர்ந்தது போல் ஒரு நாளும் உணர்ந்ததில்லை' என்று மகாகவி பாரதியின் பாடும் திறனைப் பதிவு செய்துள்ளார் வையாபுரிப்பிள்ளை.

'பாரதியின் உற்ற நண்பர் ஸ்ரீ.ஸ்ரீ.ஆச்சார்யா. இவரின் மகள் ரங்கநாயகி, தான் சிறுமியாக இருந்தபோது நடைபெற்ற மகாகவி பாரதி தொடர்பான நிகழ்வுகளை விரிவான கட்டுரையாக வடித்துள்ளார். அதில் 'ஸ்ரீமான் பாரதியார் எல்லோரையும் போல காகிதமும் பேனாவையும் வைத்துக் கொண்டு கவிதை எழுதிப் பாடமாட்டார்; எல்லோரும் கலந்து பேசிக் கொண்டிருக்கும்போதே, தற்செயலாக சந்தர்ப்பத்தையொட்டி நாம் பேசுவது போல் கவிதையைப் பாடிக் காட்டுவார். என் தந்தையிடம் வந்து பாடிவிட்டு உடனே தம் வீட்டில் போய் எழுத உட்கார்ந்து விடுவார்' என்று தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் ரங்கநாயகி.

மகாகவி பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' நூலுக்கு வ.வே.சு ஐயர் எழுதிய முன்னுரையில், 'கடற்கரையில் , சாந்திமயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோகவயப்படுத்தி நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனைகளைக் கற்பனாகர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் பாரதி தம்முடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந்த நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மகாகவி பாரதியார் புதுவைக்குச் சென்றது முதல் அவர் புதுவையை விட்டுப் புறப்படும் வரையிலும் ஏறத்தாழ பத்தாண்டுகள் கூடவே இருந்தவரும் மகாகவி பாரதியின் சொந்த ஊரைச் சேர்ந்தவருமான என். நாகசாமி, 'பாரதியார் கால்களை மண்டி போட்டு குதிகால்களின் மேல் உட்கார்ந்து, ஒரு கையால் தாளம் போட்டு அபிநயத்துடன் பாடும்பொழுது கேட்பவர்கள் மெய்மறந்து, மனம் பக்திப் பரவசமாகி, அதிலேயே லயித்துப் போய் விடுவார்கள்' என்று தனது நினைவுக் குறிப்பில் எழுதியுள்ளார்.

'மணி வெளுக்கச் சாணை உண்டு எங்கள் முத்துமாரி' என்று உரக்கப் பாடினால் நானெல்லாம் பயந்து விடுவேன். மீசை படபடக்கும். முகத்தில் ஓர் ஆவேச உணர்ச்சி தோன்றும். பாடும் தொனியோ சுமார் ஒரு மைல் தூரத்திற்குக் கேட்கும்' என்று மகாகவி பாரதியின் பாடலை நேரடியாகக் கேட்ட அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தைச் சேர்ந்த மு.நடராசன்.

'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்று பிரகடனம் செய்த மகாகவி பாரதி, சித்தர்களைப்போல, ஞானிகளைப்போல, சிந்தித்தது மட்டுமல்லாமல் 'சிந்துக்குத் தந்தை' என்ற பாவேந்தரின் கூற்றுக்கிணங்க பாடிப் பாடிப் பரவசப்பட்டவர் என்பதற்கும், பாட்டாலே பலரையும் பரவசப்படுத்தியவர் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

கவிதை

ஆசிரியர் போற்றுதும் !

அஞ்சில் எமைவளைத்து
அமுதனைய கல்வியினை
நெஞ்சில் நிறைக்கின்ற
நேர்த்தியெலாம் கற்றவரே!

பேசரிய மாண்பெல்லாம்
பிள்ளைகள் எமைச்சேர
ஆசிரிய பணிசெய்யும்
அன்பின் தெய்வங்காள்!

பொற்போடு எமைநடத்திப்
புகழ்மணக்கும் கல்வியினைக்
கற்போடு கற்பிக்கும்
கடமையிற் பெரியோரே!

குன்றளவு கொடுத்தாலும்
குறையாத செல்வத்தை
இன்றளவும் எமக்களித்து
இன்புறும் வள்ளல்காள்!

ஈன்றோரின் மேலாக
எம்நெஞ்சில் நிறைபவரே!
சான்றோராய் எமைமாற்றும்
சாதனைகள் புரிபவரே!

எச்செல்வம் அளித்தாலும்
எச்சமின்றித் தீர்வதுண்டு
மெச்சி நீங்கள் அளித்தசெல்வம்
விளிவின்றி வளருமன்றோ!

அன்னையே தெய்வமென்றும்
அன்பே தெய்வமென்றும்
கன்னின்றோர் தெய்வமென்றும்
கதைகள்பல உண்டெனினும்
பள்ளிக் கூடமெனும்
பண்பட்ட கோயிலின்
உள்ளே எழுந்தருளும்
உயர்தெய்வம் நீங்களன்றோ!

தாய்சொல்ல முதன்முதலிற்
சேய்பேசும் அம்மொழியே
தாய்மொழியாம் என்றெவரும்
சாற்றும் மொழியினையும்
சேய் நாங்கள் தப்பின்றிச்
செப்புதற்குக் கருத்துடனே
ஆய்ந்தறிந்து ஊட்டுகின்ற
அன்னையரும் நீங்களன்றோ!

தரிசை சீர்செய்து
தக்கபடி ஏர்நடத்தி
வரிசை பிடித்துவிதை
வார்த்திடுவர் வேளாளர்
அறிவு நீர்பாய்ச்சி
அகந்தைக் களையகற்றி
செறிவுடையோராய் எம்மைச்
செய் உழவர் நீங்களன்றோ!

சிலையின் இறுதிநிலை
சீர்மிகு கண்திறப்பாம்
விளையும் பயிரெமக்கோ
விழிதிறப்பே முதல்நிலையாம்...
எண்ணோடு எழுத்தென்னும்
இருகண்கள் திறக்கின்ற
திண்ணிய பணிசெய்யும்
சிற்பியரும் நீங்களன்றோ!

அன்றாடம் எமைநாடி
அறிவு புகட்டுமுமை
இன்றிந்நாள் எம்நெஞ்சில்
இருத்திப் புகழ்கின்றோம்!

வாழ்நாள் முழுவதையும்
மாணவர் எமக்களித்து
வீழ்நாள் இலாக்கல்வி
விளைக்கும்நீர் வாழியவே!

அகரம் அமுதா

VARSHA™

Wish you a very Happy New Year 2020

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

இரண்டாம் பாகம் : காசி முற்றுகை

”விடு படகை!” 39

கூட்டத்தில் எல்லாருக்கும் முன்னதாகத் தளபதி பரஞ்சோதி விரைந்து வந்து மாமல்லருக்கு வணக்கம் செலுத்தி, “பிரபு! இதென்ன இப்படி செய்து விட்டீர்களே! எங்களையெல்லாம் கதிகலங்க அடித்து விட்டீர்களே?” என்றார்.

மாமல்லர் பரஞ்சோதியை ஆர்வத்துடன் ஆலிங்கனம் செய்து கொண்டு, “உங்களுக்கெல்லாம் ரொம்பவும் கவலைதான் அளித்துவிட்டேன். அப்புறம் நீங்கள் என்ன செய்தீர்கள்? வெள்ளத்தினால் நமது படையில் சேதம் அதிகம் உண்டா?” என்று கேட்க, பரஞ்சோதி, “சூலபாணியின் அருளால் நல்ல சமயத்தில் எச்சரிக்கப்பட்டோ ம். அதனால் உயிர்ச்சேதம் ஒன்றுமில்லை, எத்தனையோ விஷயங்கள் சொல்ல வேண்டும், பேச வேண்டும். வாருங்கள் பிரபு! இந்தக் கோயிலுக்குள் சிறிது போய்ப் பேசலாம்!” என்று கூறினார். இருவரும் கைகோத்துக் கொண்டு உற்சாகமாக நடந்து சென்று முன் கோபுர வாசல் வழியாகக் கோயிலுக்குள் பிரவேசிக்க பின்னோடு கூட்டமாக வந்த கிராமவாசிகளைக் கோயிலுக்குள் செல்லாதபடி வீரர்கள் தடுத்து நின்றார்கள்.

மாமல்லரும் பரஞ்சோதியும் அவ்விதம் குதூகலமாகப் பேசிக் கொண்டு போனதையும், சற்றுப் பின்னால் மரத்தடியில் நின்ற தன்னை யாரும் கவனியாததையும் கண்ட சிவகாமிக்குப் பெரும் மனோவேதனை உண்டாயிற்று. ஆயனரும் அவரோடு ரதியும் சுகரும் மட்டும் சிவகாமி நிற்குமிடம் வந்தார்கள். “இனிமேல் நீங்கள்தான் என் உண்மையான சிநேகிதர்கள்!” என்று கூறுவது போல், ரதியையும் சுகரையும் சிவகாமி தடவிக் கொடுத்தாள். முன்னால் சென்ற கூட்டத்தின் ஆரவாரம் சற்று அடங்கியதும் இவர்கள் மடத்தை நோக்கிச் சென்றார்கள்.

வழியில் கோயில் வாசலை நெருங்கிச் சென்றபோது, அங்கே கூடியிருந்த கிராமவாசிகள் சிலர் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் சிவகாமியின் காதில் விழுந்தன.

“பல்லவ குமாரர் இப்படி நம்மை ஏமாற்றி விட்டாரே?”

“நான்தான் சொன்னேனே, முகத்தில் இராஜ களை வடிகிறதென்று? கேவலம் சிற்பியின் முகமா அது?”

“தகப்பனாரைப் போலவே புதல்வரும் வேஷம் போடுவதில் ரொம்ப சமர்த்தர் போலிருக்கிறது!”

“ஆயனர் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவே இந்த வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டாராமே?”

“என்னதான் அபிமானம் இருந்தாலும் அவ்வளவு தூரத்துக்குப் போயிருக்கக்கூடாது. ஏதாவது அபாயம் நேர்ந்திருந்தால் பல்லவ சாம்ராஜ்யத்தின் கதி என்ன ஆகிறது?”

“மாமல்லரைவிடப் பரஞ்சோதி பெரிய வீரராமே?”

“அதெல்லாம் இல்லை. இரண்டு பேரும் சமம்தான்!”

“யார் சொன்னது? மாமல்லருக்குச் சமமான வீரர் உலகத்திலேயே கிடையாது. பரஞ்சோதியை

போர்க்களத்திற்குச் சக்கரவர்த்தி அழைத்துப் போயிருந்தார். அதனால் அவருடைய வீரம் வெளியாயிற்று. மாமல்லர் முதன் முதலில் புள்ளலூர்ச் சண்டையில் தானே கலந்து கொண்டார்? அங்கே பரஞ்சோதி இருந்த இடம் தெரியாமல் போய்விடவில்லையா?"

"அவர்களுக்குள்ளே வித்தியாசமே கிடையாதாம். அவ்வளவு அந்நியோன்னிய நண்பர்களாம். நாம் ஏன் வித்தியாசப்படுத்திப் பேசவேண்டும்?"

"எது எப்படியாவது இருக்கட்டும். இரண்டு பேரும் நம் ஊரில் விருந்துண்ணாமல் திரும்பிப் போகக் கூடாது!"



இந்த மாதிரி பலவிதமான பேச்சுக்களையும் காதில் வாங்கிக் கொண்டு சிவகாமி மடத்துக்குப் போய்ச் சேர்ந்தாள். அவளுடைய உள்ளம் அளவில்லாத பெருமையையும் சொல்ல முடியாத வேதனையையும் மாறி மாறி அடைந்து கொண்டிருந்தது.

கிராமவாசிகளின் விருப்பத்தின்படியே மாமல்லரும் பரஞ்சோதியும் மற்ற வீரர்களும் கிராமவாசிகள் அவசரமாகப்



பக்குவம் செய்து அன்புடன் அளித்த விருந்தை உண்டார்கள். விருந்து முடியும்போது அர்த்த ராத்திரிக்கு மேலே ஆகிவிட்டது. பொழுது விடிந்த பிறகு போகலாம் என்று கிராமப் பெரியோர்கள் கேட்டுக்கொண்டது பயன்படவில்லை. இரவுக்கிரவே கிளம்ப வேண்டியது அவசியமாயிருந்தது.

புறப்படுகிற சமயம் வந்தபோது, ஆயனரிடமும் சிவகாமியிடமும் விடைபெற்றுக்கொள்ள மாமல்லர் மடத்துக்குள்ளே சென்றார். "ஆயனரே! உங்களிடம் விடைபெறுவது எனக்குச் சங்கடமாய்த்தானிருக்கிறது. ஆயினும் என்ன செய்யலாம்! புலிகேசியின் படைகள் காஞ்சியை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றனவாம். உடனே வரும்படி சக்கரவர்த்தி சொல்லியனுப்பியிருக்கிறார்" என்றார் மாமல்லர்.

மாமல்லரிடம் அளவில்லாத அன்பும் மரியாதையும் கொண்டவரான ஆயனர், "பிரபு! இவ்வளவு நாள் தாங்கள் இங்கிருந்தது நாங்கள் செய்த பாக்கியம். இதற்குமேல் நாங்கள் ஆசைப்படக்கூடாது போய் வாருங்கள். உங்களை வழி அனுப்ப நாங்களும் நதிக்கரை வரையில் வரலாமல்லவா?" என்றார்.

"அவ்வளவு தூரம் வருவது அவசியமில்லை. இஷ்டப்பட்டால் வாருங்கள்!" என்றார் மாமல்லர். மாமல்லர் சிவகாமியைநோக்கியபோது அவள் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த அபூர்வான காதலர்க்கு மத்தியில் திடீரென்று ஒரு திரை விழுந்துவிட்டது போலிருந்தது.

இரவு மூன்றாம் ஜாமம் முடியும் சமயத்தில், சந்திரன் மேற்கு வானவட்டத்தின் அடியில் பிரகாசித்துக் கொண்டிருந்தபோது, வராக நதியில் ஆயத்தமாக நின்ற படகுகளில் மாமல்லர், பரஞ்சோதி முதலியோர் ஏறிக் கொண்டார்கள்.

கரையிலே கிராமவாசிகளும் ஆயனரும் சிவகாமியும் நின்றார்கள். இத்தனை நேரமும் எங்கேயோ போய்விட்டு அப்போது தான் ஓட்ட ஓட்டமாய்த் திரும்பி வந்திருந்த குண்டோதரனும் பின்னால் நின்றான்.

நதிக்கரையிலும் மாமல்லர் சிவகாமியுடனும் பேசுவதற்கு வசதி கிடைக்கவில்லை! படகில் ஏறிக் கொண்டதும் அவர் கரையிலிருந்த சிவகாமியை உற்று நோக்கினார். சிவகாமியும் அவரை அப்போது ஆர்வத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள். ஏதாவது சொல்லவேண்டுமென்று மாமல்லருடைய உதடுகள் துடித்தன; ஆனால், வார்த்தை ஒன்றும் வரவில்லை.

தளபதி பரஞ்சோதி, "விடு படகை!" என்று கட்டளையிட்டார்.

படகு சென்றதும், சிவகாமிக்கு தன் வாழ்நாளில் இன்பத்தையெல்லாம் அந்தப் படகு கொண்டு போவது போல் தோன்றியது.

(சபதம் தொடரும்)

SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்

தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள்!!!

SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

உடல்பருமன் ஏழை நாடுகளையும் விட்டுவைக்கவில்லை – காரணம் என்ன?

உலகிலுள்ள மூன்றில் ஒரு பகுதி நாடுகள் அதிக உடல் பருமனையும், ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினைகளையும் கையாண்டு வருவதாக லான்செட் சசிகையில் வெளியான அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அதிக பதப்படுத்தப்பட்ட உணவுகள் உலக அளவில் எளிதில் கிடைப்பதாலும், உடற்பயிற்சி குறைந்துள்ளதாலும் இப்பிரச்சினை நிலவுவதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

மதிப்பிட்டுள்ள இந்த அறிக்கை, 150 மில்லியனுக்கு மேலான குழந்தைகள் குன்றிய வளர்ச்சியோடு இருப்பதாக குறிப்பிடுகிறது.

குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய பல நாடுகள் "ஊட்டச்சத்து குறைபாட்டின் இரட்டை சுமை" என்று அறியப்படும் உடல்பருமன், ஊட்டச்சத்து குறைவு என இரண்டு பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றன.

20% குழந்தைகள் அதிக எடையுடையதாகவும், நான்கு வயதுக்கு கீழுள்ள 30% குழந்தைகள் சரியான வளர்ச்சி இல்லாமலும், 20% பெண்கள் ஒல்லியாக இருப்பதாகவும் வகைப்படுத்தப்படுவதை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.



ஊட்டச்சத்து குறைபாட்டை பெற்றிருக்கும் இரண்டு வடிவங்களாலும் தனிநபர்கள் தங்கள் வாழ்வின் வேறுப்பட்ட நிலையில் பாதிக்கப்படுவதோடு, சமூகங்களும், குடும்பங்களும் பாதிக்கப்படும் என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

1990களில் 123 நாடுகளில் 45 நாடுகளும், 2010களில் 126 நாடுகளில் 48 நாடுகளும் இந்த பிரச்சினையால் பாதிக்கப்பட்டன என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது. 1990களில் இருந்து 2010ம் ஆண்டுக்குள் உலகில் குறைவான வருமானமுடைய 14 நாடுகளில் இந்த இரட்டை பிரச்சினை உருவாகியுள்ளது.

இதற்கு காரணமாக இருக்கின்ற நவீனகால உணவு அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென இந்த அறிக்கையை தயாரித்தவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இதனால் சகாரா பாலைவனத்தின் தெற்கிலுள்ள ஆப்ரிக்க நாடுகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன.

இந்த பூமியிலுள்ள சுமார் 2.3 பில்லியன் குழந்தைகளும், வயது வந்தோரும் அதிக எடையுடையவராக இருப்பதாக

மேசமான உணவு அமைப்பு முறை

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண அரசுகளும், ஐக்கிய நாடுகள் அவையும், கல்வியாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறும் இந்த அறிக்கையை தயாரித்தவர்கள், உணவு முறைகளில் மாற்றம் வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் சாப்பிடும், குடிக்கும் மற்றும் இயங்குகின்ற

வழிமுறைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. எண்ணிக்கையில் அதிகரித்து வரும் பெருவணிக சந்தைகள், ஊட்டச்சத்து இல்லாத உணவுகள் எளிதாக கிடைப்பது, உடல் ரீதியான செயல்பாடுகள் குறைவது ஆகியவை மக்களை அதிக எடையுடையவர்களாக மாற செய்கின்றன. இந்த மாற்றங்கள் எல்லாம் குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளையும், அதிக வருமானம் பெறுகின்ற நாடுகளையும் பாதிக்கின்றன.

குழந்தைகள் குன்றிய வளர்ச்சியுடையதாக வளர்வது பல நாடுகளிலும் அரிதாகிவிட்டாலும், அதிக பதப்பட்டுத்தப்பட்ட உணவுகளை குழந்தை பருவத்திலேயே சாப்பிடுவது மோசமான வளர்ச்சி ஏற்பட காரணமாகிறது.

இந்த அறிக்கையை தயாரித்த உலக சுகாதார நிறுவனத்தின் சுகாதாரம் மற்றும் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்து பிரிவின் இயக்குநரும், அறிக்கை தயாரித்த குழுவின் தலைவருமான டாக்டர் பிரான்செஸ்கோ பிரான்கா, "நாம் புதியதொரு ஊட்டச்சத்து நடைமுறையை எதிர்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

"குறைந்த வருமானமுடைய, ஊட்டச்சத்து பற்றாக்குறையுடைய, உயர் வருமானமுடைய நாடுகள் என்று இனிமேலும் நம்மால் வகைப்படுத்த முடியாது. உடல் பருமனை பற்றிதான் கவலைபட வேண்டியுள்ளது" என்று அவர் கூறியுள்ளார்.

குறைவான ஊட்டச்சத்துடைய வடிவங்கள் எல்லாமே, ஆரோக்கியமான, பாதுகாப்பான, மலிவான மற்றும் தொடர்ந்து வழங்கப்படும் உணவுகளை மக்கள் அனைவருக்கும் கொடுக்க முடியாத உணவு அமைப்பையே கொண்டுள்ளன. உற்பத்தி மற்றும் பதப்படுத்துதலில் இருந்து தொடங்கி, வணிகம் மற்றும் விநியோகம் மூலம் விலை நிர்ணயம், சந்தைப்படுத்துதல், வகைப்படுத்துதல் என நுகர்வு மற்றும் கழிவு வரை உணவு அமைப்பில் மாற்றங்கள் அவசியமாகிறது என்கிறார் பிரான்கா.

"இது தொடர்புடைய கொள்கைகள் மற்றும் முதலீடுகள் எல்லாம் தீவிரமாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்" என்று அவர் தெரிவிக்கிறார்.

உயர் தர உணவு என்பது என்ன?

இந்த அறிக்கையின்படி, உயர் தர உணவில் கீழ்கண்டவைகள் காணப்படும்.

அதிக அளவிலான பழங்கள், காய்கறிகள், தானியங்கள், நார்ச்சத்து. பருப்புகள் மற்றும் விதைகள்.

விலங்குகளிடம் இருந்து பெறப்படும் உணவுகளில் சுமாரான அளவு.

பதப்படுத்தப்பட்ட இறைச்சியில் குறைவான அளவு.

அதிக சக்தியை தரக்கூடிய, சக்கரை சேர்க்கப்பட்ட, அதிக மற்றும் குறைந்த கொழுப்புடைய இறைச்சி, உப்பு மிக குறைவான அளவு

உயர் தர உணவுகள் ஊட்டச்சத்து குறைவு ஏற்படும் ஆபத்தை அகற்றிவிடும். ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் வாழ்க்கை முழுவதும் உடலை நோய்கள் அணுகாமல் பாதுகாக்க இது உதவும்.



அப்பா

செய்யாது தீ.தா.நாராயணன்

வேலூரிலிருந்து பஸ் பிடித்து கோயம்பேடு வந்திறங்க மாலை மூன்று மணியாகிவிட்டது. எனக்கு அந்த தகவல் வரும்போது காலை பதினோறு மணி. சரண்யாவுக்கு தகவல் சொல்லி விட்டு ஆபீஸில் பதினைந்து நாட்கள் விடுப்பு கடிதம் கொடுத்துவிட்டு வர நேரமாகிவிட்டது. இதற்கே பள்ளிக்கு போகும் பிள்ளையை அவள் எப்படி தனியாய் பதினைந்து நாட்கள் சமாளிப்பாள்?. என்பதைப் பற்றியெல்லாம் நான் யோசிக்க அவகாசம் இல்லை. அதற்கான எவ்வித ஏற்பாட்டையும் செய்யவில்லை. ஏடிஎம் ல் பத்தாயிரம் ரூபாயை ட்ரா பண்ணிக் கொண்டு, அதில் ஒரு மூவாயிரம் ரூபாயை சரண்யாவிடம் குடும்ப மேஞ்செலவுக்கு கொடுத்து விட்டு கிளம்பினேன்.

இந்த மாசத்துக்கான மளிகை, அரிசி எல்லாவற்றையும் ஏற்கனவெ வாங்கி போட்டிருந்தேன். பாஸ் புக்ல இன்னும் பதினைந்தாயிரம் தான் இருப்பு இருக்கு. மொத்த இருப்பே அவ்வளவுதான். நல்ல வெய்யில் வெக்கை. ஆட்டோ பிடித்து ராஜீவ் காந்தி பொது மருத்துவ மனைக்கு விரைந்தேன். வழியெங்கும் மன உளைச்சல், மவுனமான அழுகை. அப்பாவுக்கு சீரியஸ் என்று சுதா போனில் அழுத போது அப்படியே திக்பிரமை பிடித்து நின்றுவிட்டேன். சுதாரித்து என்னவென்று கேட்க, ஹார்ட் அட்டாக் என்றாள். நினைவு இல்லையாம். கோமாவோ என்று அச்சப் படுகின்றார்களாம். ராஜீவ்காந்தி பொது மருத்துவ மனையில் சேர்த்து விட்டுத்தான் எனக்கு போன் செய்திருக்கிறாள்.

அய்யோ அப்பா! மனசு ஏற்க மறுக்கிறது. திடகாத்திரமான மனிதர். யோகாவெல்லாம் செய்வார். மாலையில் ஈஸ்வரன் கோயிலில் தவறாது தேவாரப் பதிகங்களை மனமுறுக பாடுவார். எவ்வித கெட்ட பழக்கங்களும் கிடையாது. கடுமையான உழைப்பாளி. இன்றைக்கும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்.

என் தங்கை சுதாவுக்கு இரண்டு வயசாக இருக்கும் போது எங்கள் அம்மாவை இழந்து விட்டோம். அவர் மறுமணம் செய்துக் கொள்ள வில்லை. எங்களை பாசத்துடன் வளர்த்தார். உண்பதற்கு, தின்பதற்கு செல்லம் மற்றதில் கண்டிப்பு என்று உருவாக்கினார். எங்கள் மேல் அப்பாவுக்கு பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. நல்லா படிக்க வெச்சி பெரிய வேலைக்கு அனுப்பணும். ஆனால் வருத்தமான விஷயம் எங்க இரண்டு பேருக்கும் படிப்பு ஏறவில்லை. பத்தாம் வகுப்பு தாண்டுவதற்கே இரண்டு பேரும் திணறி விட்டோம். இன்றைக்கு நான் வேலூர் அரசு மேநிலைப் பள்ளியில் பியூனாக இருக்கிறேன்.. சுதா எழும்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவு



அமைப்பாளர். அவள் கணவர் ரவி டூவீலர் மெக்கானிக். எக்மோர் பாந்தியன் சாலையில் கடை வைத்து தொழில் செய்கிறார். எங்கள் வீடு எழும்பூர் வீராசாமி தெருவில் இருக்கிறது.. சொந்த வீடுதான். அப்பாவுடன் சுதாவின் குடும்பம் ஒன்றாக எங்கள் வீட்டில் வசிக்க, நான் என் குடும்பத்துடன் வேலூரில் இருக்கிறேன். நிறைய புக்ஸ் படிப்பேன். அப்பாவிடமிருந்து வந்த பழக்கம். கவிதைகள் கூட எழுதுவேன். சில கவிதைகள் வார, மாத இதழ்களில் பிரசுரமாகி இருக்கின்றன.

அப்பாவைப் பொறுத்தமட்டில் சற்று முரட்டு ஆள் என்றாலும் உணர்ச்சியான மனிதர். கோபம் வந்தால் எங்களை கண்ணு மண்ணு தெரியாமல் விளாசி விடுவார். அப்புறம் வருந்துவார். அவர் இன்றைக்கு ஆபத்தான கட்டத்தில் ஆஸ்பிட்டலில் கிடக்கிறார். இடையில் என்னுள் உறுத்திக் கொண்டிருக்கிற ஒரு விஷயம், என்றைக்காவது அவரைப் பார்த்து நான் கேட்கவேண்டிய கேள்வி ஒன்று பாக்கி இருக்கிறது. சின்ன வயசிலிருந்தே என்னை அரித்துக் கொண்டிருக்கிற கேள்வி அது. எப்பவோ கேட்டிருக்க வேண்டும். ஆனால் அப்போதெல்லாம் கிட்டே நெருங்கவே அவ்வளவு பயம். எப்படி ரியாக்ட் பண்ணுவார் என்று சொல்ல முடியாது. இப்போதாவது அவரை கேட்கணும்.

அது நடக்காமலே போய்விடுமோ?. கடவுளே!

தெப்பது மருத்துவமனை வாயிலில் காவலாளிக்கு கையூட்டு கொடுத்துவிட்டு உள்ளே சற்றேறக் குறைய ஓடினேன்.. பொது வார்டில் 32வது படுக்கை. முன்னதாக அரை நாள் ஐ.சி.யூ. ல் வைத்திருந்து மாற்றியிருக்கிறார்கள். அப்பா கண்மூடியபடி துவண்டு கிடக்கிறார். கை நரம்பில் குளுகோஸ் மாதிரி எதுவோ ஒன்று ஏறிக் கொண்டிருக்கிறது. சுதா தரையில் உட்கார்ந்து அவரை கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறாள். என்னைப் பார்த்ததும் ஓடி வந்து என்னை கட்டிக் கொண்டு அழுதாள். மாப்பிள்ளை பக்கத்தில் பெஞ்சில் உட்கார்ந்திருக்கிறார். பக்கத்தில் அவர்களுடைய பெண்கள் தரணியும், குழலியும் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். என்னால் முடியவில்லை அவர் காலை பிடித்துக் கொண்டு கதறி தீர்த்து விட்டேன். அந்த அளவுக்கு ஒழுக்க சீலராகவும், உழைப்பாளியாகவும் வாழ்ந்தவருக்கு எப்படி இந்த

பாதிப்பு ஏற்பட்டது?.

"இல்லண்ணா அவருக்கு பிரஷர் இருந்திருக்கிறது. நாமதான் கவனிக்க தவறி விட்டோம். இங்க செக் பண்ணிட்டாங்க. பிரஷர் 200/110"— "அதற்கான ஒரு அறிகுறியும் தெரியவில்லையே." நான் அருகில் உட்கார்ந்து அவரைத் தொட்டேன்ஞ் என்னைப் பர்த்ததும் கண்ணீர் கன்னங்களில் கோடாய் இறங்கியது. என்னாலும் அழுகையை அடக்க முடியவில்லை. "டாக்டர் என்ன சொல்றார்?." "இன்னும் ஆபத்தான கட்டத்தை தாண்டவில்லையாம். இரண்டு நாள் போனால்தான் சொல்ல முடியுமாம்." சொல்லும் போதே சுதாவும் கண்கலங்கினாள்..

மாலைக்குள் மூன்று நான்கு முறை டாக்டர்கள் வந்து செக் பண்ணி, பிரஷர் பார்த்து விட்டு சென்றார்கள். ஈஸிஜி எடுத்தார்கள். பிரஷர் மட்டும் குறையவே இல்லையாம். நாளைக்கு எக்கோ எடுத்து பார்ப்போம் ஹார்ட்டில் அடைப்பு இருக்கிறமாதிரி தெரியுது.. இப்போது இன்னொரு பிரச்சினையும் கிளம்பியிருக்கிறது. கிட்னியில் ப்ராப்ளம் இருக்கும் போல் தெரிகிறது.. என்று ஷாக் கொடுத்து விட்டு அகன்றார்கள். போகும்போது "என்ன இவ்வளவு பேருமா இங்க இருக்கப் போறீங்க?. ராத்திரியில ஒருத்தர்தான் அலவ்டு. சிஸ்டர்! பார்த்துக்கோங்க. சென்ட் தெம் அவுட் ."—என்று நர்ஸிடம் சொல்ல, அதைத் தொடர்ந்து நர்ஸ் எங்களையெல்லாம் கிளம்பச் சொல்லி நச்சரிக்க ஆரம்பித்தாள். "சுதா, நீயும் அவரும் கிளம்புங்கள் இனிமேல் நான் பார்த்துக்கறேன். எல்லாரும் கூட்டமாய் எதற்கு இங்கே."அவர்களை வற்புறுத்தி அனுப்பி வைத்தேன்.

மறுநாள் என் மனைவி பிள்ளை பிரசாத்துடன் வந்து விட்டாள். சனி ஞாயிறு லீவு திங்கட்கிழமை ஒரு நாள் சிறுவிடுப்பு போட்டுவிட்டு மொத்தம் மூன்று நாள் உடனிருக்க வந்திருக்கிறாள். அது முதல் நானும் சரண்யாவும் மாற்றி மாற்றி காவல் இருந்தோம். சுதா வீட்டில் சமையலை பார்த்துக் கொண்டாள். என் பிள்ளை பிரசாத்தை தங்கச்சி வீட்டில் விட்டுவிட்டோம். பாவம் சுதாவுக்குத்தான் கஷ்டம். எங்க எல்லாருக்கும் சமைக்கணும். சித்தப்பா, சின்ன சித்தப்பா, சித்திகள், ரெண்டு மாமாக்கள், மாமிகள், என்று அது ஒரு கும்பல் வந்துக் கொண்டும் போய்க்கொண்டும். சமாளிக்க முடியாமல் சுதா பத்து நாள் லிவு போட்டு விட்டாள்.

காலையில் எழுந்ததும் நான் ப்ரஷ் பண்ணிட்டு அப்பாவுக்கு காலை கடனுக்கு ஹெல்ப் பண்ணிட்டு அவருக்கு சுடுதண்ணீரில் டவல் வாஷ் கொடுப்பேன். அப்புறம் கிளம்பி வீட்டுக்கு போயி நான் குளித்து சாப்பிட்டு அப்பாவுக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்து அவருக்கு ஊட்டணும். கால் உப்பு போட்ட உணவுதான். அதுபோல மதியமும் இரவும் வீட்டிற்கு போய் வரணும்.. ஃப்ரீயாக இருக்கும் போது மாப்பிள்ளை சாப்பாடு கொண்டு வருவார். இதுதான் என்னுடைய ரொட்டீன் என்றாகி விட்டது. இப்படியே பதினைந்து நாட்கள் ஓடிவிட்டன. அப்பாவின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமுமில்லை. இருதய ரத்தக்குழாயில் அடைப்பு இருக்காம்.

சர்ஜரி இல்லாமல் ட்ரீட் பண்ண முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். உபரியாக கால்களிலும், முகத்திலும் லேசாக உப்பலும் மினுமினுப்பும் சேர்ந்து விட்டிருந்தன. கிட்னி பிரச்சினைக்கும் வைத்தியம் நடக்கிறது. அப்பாவை ஆளாளுக்கு துடிக்க துடிக்க குத்தி குத்தி எடுக்கிறார்கள். எனக்கு அழுகையே வந்துவிட்டது. நாங்கள் பார்த்து அவர் ஒரு நாள் உடம்பு சரியில்லை என்று தரையில் படுத்ததில்லை. ஒல்லியான தேகம். வலி தாங்க முடியாமல் சில சமயம் என்னைப் பார்த்து அழுகிறார். செய்வதறியாமல் கண்ணீருடன் அவரை தட்டிக் குடுக்கிறேன்.

ஒரு கட்டத்தில் வந்து போன உறவுகளெல்லாம் கடமை முடிந்து விலக, நிச்சலமான அமைதி. நான் மேலும் ஒரு பதினைந்து நாள் விடுப்பு போட்டிருந்தேன். மாலை சரண்யா போன் பண்ணாள்.

"ஏங்க நீங்க எப்படி இருக்கீங்க?. பிரசாந்துக்கு மூன்று நாளாய் ஜுரம் அடிக்குதுங்க. வாந்தியெடுக்கிறான். ரெண்டு நாளா ஆஸ்பிட்டலுக்கு இட்டும் போய் வர்றேன். ஜுரம் குறையல. பயமா இருக்குதுங்க. இங்க எங்க பார்த்தாலும் டெங்கு ஜுரம் இருக்குது."போனில் அழுகிறாள். "அழாதேம்மா! ஆஸ்பிட்டல்ல ரத்தம் டெஸ்ட் பண்ணலியா?." "நாளைக்கு டெங்கு ஜுர டெஸ்ட் பண்றதா சொல்லியிருக்காங்க." "அழாத தைரியமா இரு. ரெண்டு நாள்ல இங்க மச்சானை பார்த்துக்கச் சொல்லி வுட்டுட்டு வர்றேன். தைரியத்த வுட்றாத."— கூழில் விழுந்த ஈ போல மனசு தத்தளிக்கிறது. அன்றைக்கு முழுக்க பிள்ளை நினைப்பில் தூங்க முடியவில்லை. என் ஒரே பையன். ரெண்டு நாளில் சுதாவை பார்த்துக்க சொல்லிட்டு ஊருக்கு போயே ஆகணும்.

இரண்டு நாளுக்கப்புறம் அன்று மறுநாள் காலை ஊருக்கு கிளம்ப இருந்தேன். சுதாவிடமும் லீவு போட சொல்லி விட்டேன். மாப்பிள்ளையும் ரெண்டு நாள் கடையை மூடிட்டு தான் பார்த்துக்கிறதாக சொல்லிட்டார். இரவு அப்பாவுக்கு பக்கத்தில் கீழே பெட்ஷீட் விரித்து படுத்தேன். படுக்கும் முன்பாக அப்பாவை ஒரு பார்வை பார்த்து விடுவது வழக்கம். நல்ல தூக்கத்தில் இருக்கின்றாரோ. கண்களை மூடியிருந்தார். வித்தியாசமாக திருகின மாதிரி படுத்திருந்தார்.

"அப்பாஞ்அப்பா.."பதிலில்லை. பதற்றம் வந்தது. தொட்டேன் மாலை மாலையாக வியர்வை. உடை தொப்பலாக நனைந்து விட்டிருந்தது. லேசாக ஹுங்கார சத்தம் வருகிறது. அப்பாவுக்கு என்னவோ ஆகிவிட்டது. ஓடி டாக்டரிடம் சொன்னேன். சாவகாசமாக கால் மணி நேரம் கழித்து வந்து பார்த்தவர் சிஸ்டர்.. சிஸ்டர் என்று கத்தினார். அடுத்த பத்து நிமிடங்களுக்குள் அவரை ஐஸியூ க்கு மாற்றினார்கள். ஒருமணி நேரம் நான் பதைபதைப்புடன் வெளியே நின்றேன். மறுநாள் காலையில்தான் அப்பாவை பொது வார்டுக்கு மாற்றினார்கள். ராத்திரி வந்தது இரண்டாவது அட்டாக் இந்த தடவை எப்படியோ காப்பாற்றி விட்டோம் என்றார்கள். மூன்றாவது அட்டாக் வந்தால் அவ்வளவுதான் காப்பாற்ற முடியாது. அவருக்கு டென்ஷன் வராம பார்த்துக்கோங்க என்றார்கள். சிலிர்ப்பாய் இருந்தது. அந்த நேரம் நான் கவனிக்காமல்

இருந்தால் இந்நேரம் அவர் வாழ்வு முடிந்து போயிருக்கும். அப்.பாஞ் அ.ப்.பாஞ் தகவலறிந்து சுதாவும், மாப்பிள்ளையும் ஓடி வந்தார்கள். இத்தனை நெருக்கடியில் ஓயாமல் என் பிள்ளையின் நினைப்பு வந்து வந்து போகிறது. அன்று இரவு சரண்யாவை போனில் கூப்பிட்டேன்.

"சரண்யா! என்னால இப்ப வரமுடியாதும்மா. நீயேதான் சமாளிக்கணும். இங்க ராத்திரி அப்பாவுக்கு செகண்ட் அட்டாக் வந்துவிட்டது. நான் என்ன பண்ணுவேன்?, எப்படி விட்டுட்டு வரமுடியும்? ஒண்ணுமே புரியலம்மா."

"கவலை படாதீங்க. பையனுக்கு ரத்தம் செக் பண்ணி டெங்கு ஜ்ரம் இல்லைன்னு சொல்லிட்டாங்க. சாதா ஜ்ரந்தானாம். ஊசி போட்டு மாத்திரைகளை குடுத்திருக்காங்க இன்னைக்கு ஜ்ரம் குறைஞ்சிருக்கு. எதுக்கும் கவுன்ஸிலர் ஆபீஸில இருந்து நிலவேம்பு கஷாயமும் வாங்கிக் குடுத்துட்டேன். "அப்பாடா என்று மனசு நிம்மதியாயிற்று.

மதியம் அப்பாவுக்கு சாப்பாடு கொடுத்தாச்சி. மதியம் சாப்பிட வேண்டிய மாத்திரைகளையும் கொடுத்தாச்சி. அப்பா கண் மூடி படுத்திருந்தார். இப்போது அவருக்கு கால் வீக்கமும் முக மினுமினுப்பும் சற்று கூடியிருந்தன. பாத வீக்கத்தை அழுத்தினால் பள்ளம் விழுகிறது. மணி மூன்று ஆகிவிட்டது இன்னும் நான் சாப்பிடவில்லை. எழுந்தேன் அப்பா என் கையை பிடித்துக் கொண்டார்.

"அப்பா என்னப்பா?." மெதுவாக பேசினார். "உங்க ரெண்டுபேருக்கும் நான் பாரமாயிட்டேன்."அழுதார். அவர் வாயை மூடினேன்.

"ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறீங்க?. எங்களுக்கு எந்த கஷ்டமும் இல்லை.உங்களுக்கு செய்றது எங்க கடமைப்பா. நீங்க எங்களை பாரமா நினைச்சீங்களா?. நாங்க மட்டும் எப்படி பாரம்னு நினைப்போம்?. தூங்குங்க."அவர் கையை இறுகப் பிடித்தேன்.

சிறு வயசிலிருந்தே அவரை கேட்க பயந்து கேட்காமல் போய் இன்னும் என்னை அரித்துக் கொண்டிருக்கும் அந்த கேள்வியை இன்றைக்கு அவரிடம் கேட்டுவிடப் போகிறேன்.

"என்னப்பா?"என்று கேட்டார். இதை விட்டால் வேறு சமயம் வாய்க்காது.. "உங்க கிட்ட ஒரு கேள்வி கேட்கணும்பா. சின்ன வயசிலிருந்தே அது என்னை அரிச்சிக்கிட்டு இருக்கு."

"கேளு."

" எங்க சின்ன வயசில இருந்தே எப்பவும் நீங்க சுதாவுக்கு குடுக்கிற முக்கியத்த எனக்கு குடுக்கிறதில்லை. ஏம்பா?. அப்பல்லாம் விடியற்காலை அஞ்சி மணிக்கெல்லாம் டீ கடைக்கு போவீங்க. போறப்ப அவகிட்ட ரகசியமா காதில சொல்லி எழுப்பி டீக்கடைக்கு கூட்டிப் போவீங்க. என்னை விட்ருவீங்க. ஏம்பா?. எத்தனையோ நாள்ஞ்எத்தனையோ நாள் உங்களை ரகசியமா பின்னாலியே வந்து ரெண்டு பேரும் ஓட்டலுக்குள் போய் டிபன் சாப்பிட்றதை பார்த்து அழுதிருக்கிறேன் தெரியுமாப்பா?. நான் உங்க பிள்ளை இல்லையாப்பா. ஏன் இந்த ஓரவஞ்சனை செஞ்சீங்க?."—இப்போது கூட எனக்கு லேசாய் கண்கலங்கியது. அப்பா அழுதார். என் கையை கெட்டியாகப் பற்றினார்.

"அப்படி இல்லப்பா. சின்ன குழந்தையில இருந்தே கண்டதையும் தின்னும் சுபாவம் உனக்கு. கூழா இருந்தாலும் வயிறு முட்ட இருக்கணும். எதுவும் தள்ளுபடி இல்லை உனக்கு. சுதா அப்படி இல்ல எதையும் சாப்பிடமாட்டா. சவலை குழந்தைடா அவ. உன்னையுந்தான் வாரம் ஒரு தடவையாவது ஓட்டலுக்கு கூட்டிப் போயிருக்கேனே.

என்ன மிச்சமா அவளை கூட்டிப் போயிருப்பேன். இன்னைக்கு கூட வயிறு முட்ட சாப்பிட்ற ஆளு நீ. அவ இன்னைக்கும் சோற்றை சீச்சி வைக்கிறவ. சவலை குழந்தைக்கு கொஞ்சம் மிச்சமா ஊட்டி விட்றது பெத்தவங்க குணம்தானாப்பா." நீ எனக்கு மனசு பளீரென்று அலம்பி விட்டது போல

இருந்தது. உள்ளே இதுவரையிலும் அழுத்திக் கொண்டிருந்த பாரம் விலகி லேசாகியது. உண்மைதான் இன்றைக்கும் சுதா ரெண்டு கை சோறு கூட சாப்பிட மாட்டாள். அவர் கைகளைப் பற்றி முத்தம் கொடுத்தேன். "சாரிப்பா."

அடுத்த வாரம் அப்பாவை டிஸ்சார்ஜ் பண்ணிவிட்டார்கள். வாராவாரம் ஆஸ்பிட்டலுக்கு வந்து மாத்திரைகளை வாங்கிக் கொள்ள வேண்டும். மாதத்திற்கு மூன்று முறை கிட்னி பிரச்சினைக்காக வேண்டி டயலாஸிஸ் பண்ணிக் கொள்ள வேண்டும். ஓபி சீட்டை புத்தகமாக போட்டு குடுத்து விட்டார்கள். இப்ப அப்பாவை யார் பார்த்துக்கிறது?.

டயாலிஸிஸ் பண்ண ஆரம்பிச்சதிலிருந்து அவருடைய நடமாட்டம் அடங்கி விட்டது. துக்கி நிற்க வைத்தால் தடுமாறி விழுகிறார். அது முதல் எல்லாம் படுக்கையிலேயே என்றாகி விட்டது. ட்ரீட்மெண்ட்டுக்கு, டயலாஸிஸுக்கு எல்லாம் சென்னைதான் பெஸ்ட். ஆனால் சுதாவும், மாப்பிள்ளையும் வேலைக்கு போறவங்க. என் வீட்டில சரண்யா வீட்டில இருக்கிறவதான். அப்பாவை வேறு வழியில்லாமல் வேலூருக்கு காரில் கொண்டு வந்துவிட்டேன்.

இங்கே கவர்மெண்ட் ஆஸ்பிட்டலில் ஓபி புக்கை காட்டி மாத்திரைகளை வாங்கிக் கொள்ள ஆரம்பித்தேன். டயலாஸிஸ்தான் பிரச்சினை. மாசம் மூன்று தடவை நானும், சரண்யாவும், மாற்றி மாற்றி சென்னைக்கு காரில் கூட்டிப் போய் வருகிறோம். கடன் இல்லாமல் செட்டாக வாழ்ந்த நான் இப்போதெல்லாம் அக்கம் பக்கம், நண்பர்களிடமெல்லாம் கடன் வாங்க ஆரம்பித்து விட்டேன் என்ன செய்ய?. அவ்வப்போது ஜிபிஎஃப் லோன் போட்டு கடன்களை நேர் செய்கிறேன். நல்லவேளையாக எங்கள் யாருக்கும் எதுவும் நோய் வரவில்லை. வந்தால் பட்ஜெட்டில் துண்டு விழுந்திருக்கும்.

இரண்டு மாதங்களாக நான் டியூட்டிக்கு போய்க் கொண்டிருக்கிறேன். காலையில் எழுந்ததும் அப்பாவின் காலைக் கடனை முடிக்க அவருக்கு ஹெல்ப்பண்ணி,படுக்கையில்மூத்திரத்தில்நனைந்து கிடக்கும் பெட்ஷீட்டை மாற்றி, குளிக்க வைத்து அவரை சாப்பிட வைத்து விட்டு அதற்கப்புறம் நான் ரெடியாகி டியூட்டிக்கு கிளம்புவேன். மாலையில் கண்டிப்பாய் ஒரு அரை மணி நேரம் அவருடன் பேசிக் கொண்டிருப்பேன். நான்தான் அவருக்கு மகன். என் மனைவிஞ்? எவ்வித ரத்த சம்பந்தமும் இல்லதவள். அவள்கூட கொஞ்சமும் கூச்சமில்லாமல் எல்லா பணிவிடைகளையும் செய்து வந்தாள். அப்பா இன்னமும் பாரமாய் இருக்கிறேன் பாரமாய் இருக்கிறேன் என்று சொல்லி அழுதுக் கொண்டிருக்கிறார்..

அன்றைக்கு ஸ்கூல் மதிய உணவு இடைவேளை விடுகிற நேரம் சரண்யாவிடமிருந்து மாமா சீரியஸா இருக்கார் என்று போன் செய்தி வந்தது. ஹெட்மாஸ்டரிடம் நிலைமையை சொல்லி ரெண்டு நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு விரைந்தேன். அப்பா நினைவில்லாமல் கிடந்தார்.மேல்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. தொட்டேன் நல்ல ஜுரம். சரண்யா! அப்பாவை கைசோர விட்ருவோம் போலிருக்கேம்மா கலக்கமாக இருந்தது.. ஏடிஎம் மில் பணம் எடுத்துக் கொண்டு காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஓடினேன். மறுபடியும் பொது மருத்துவமனை ஐஸியூவில் அட்மிஷன்.

இரவு முழுக்க நான் தூங்கவில்லை. டாக்டர்கள் போராடி காலையில் ஜுரம் கட்டுக்குள் வந்திருந்தது. சுதாவும் மாப்பிள்ளையும் ஓடி வந்தனர். எல்லோராலும் அழத்தான் முடிகிறது. அழுது விட்டு கிளம்பிவிட்டார்கள்.

மாப்பிள்ளை எங்களுக்கு இரவு சாப்பாட்டை எடுத்துக் கொண்டு எட்டு மணிபோல திரும்பவும் வந்தார். அப்பாவுக்கு இப்போது மேல்மூச்சு குறைந்திருந்தது. அப்பாவை எழுப்பி உட்கார வைத்து சாப்பாடு கொடுத்தேன். தண்ணீர் அளவாகத்தான் தரவேண்டும். ஒரு நாள் முழுவதுக்கும் ஒரு லிட்டர் தண்ணீர்தான் குடிக்க வேண்டும்.

நானும் சாப்பிட்டேன். களைப்பாக இருந்தது. உடல் முழுக்க அடித்துப் போட்டாற்போல வலி. படுத்தேன். தூக்கம் வர்ற நேரம். செல்போன் ஒலித்தது. என் மனைவிதான். செல்லை எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன். அப்பா தூக்கத்துக்கு போய்விட்டார்.

"ஏங்க அப்பாவை அம்மா சீரியஸ்ஸாக கொண்டு போனீங்களே. என்னாச்சின்னு எனக்கு சொல்லவேண்டாம்?."

" த்சு இல்லம்மா ஒரே அலைச்சல் களைப்பா இருந்திச்சி படுத்துட்டேன் சாரி."

"இப்பவாவது சொல்லுங்க என்னாச்சி?."

" த்சு இன்னும் ஒண்ணும் ஆவல."— சொல்லிவிட்டு அவசரமாக நாக்கைக் கடித்துக் கொண்டேன்.

வளமுடன் வாழ வழி உண்டு

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, இருப்பிடம், உடை, அடிப்படைக் கல்வி அறிவு முதலானவை மட்டுமே. இவற்றை தனது வசதிக்கு ஏற்ப ஏற்படுத்திக் கொண்டாலே எல்லா மனிதர்களும் நிம்மதியாக வாழலாம். தன் வரவுக்குள் வாழ்வதற்கு தேவையான

முயற்சியையும் பயிற்சியையும் தனி மனிதன் எடுத்துக்கொள்ள வேண்டும். வரவுக்குள் வாழ்வது வரமாகும்.

நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவு 4.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. முதல் காலாண்டில் 5 சதவீதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மிகவும் கவலை அளிப்பதாகக் கூறுகிறார் பிரபல பொருளாதார நிபுணரும் முன்னாள் பிரதருமான மன்மோகன் சிங். இதன் பாதிப்பு தனிமனித வாழ்க்கையையும் பாதிக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக சமூகத்தில் குற்றச் செயல்கள் தினமும் அதிகரித்து வருகின்றன. பொறியாளர்களும், பட்டதாரிகளும் தங்களது கல்வித் தகுதிக் குறைவான பணியிடங்களுக்குக்கூட போட்டி போடுவது கல்வியாளர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

காரணம், அன்றாட வாழ்க்கைக்குப் பணம் வேண்டும். நாம் அனைவரும் நமது நிதி நிர்வாகத்தை சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது கட்டாயம். தனி மனித வாழ்க்கை

தனிமை

–முனைவர்
என். பத்ரி

மிகவும் எளிமையானது. அதை சிக்கலாக்கிக் கொள்வது நாம்தான். பேராசைதான் அதற்குக் காரணம்.

சுலபத் தவணைகளில் தேவையில்லாத பொருள்களை வாங்குவது, அபரிமிதமான அளவில் கடன் வாங்குவது, ஊர் மெச்ச வாழ முயற்சி செய்வது முதலானவை அறிவார்ந்த செயல்கள் கிடையாது. பகட்டு வாழ்வு நமது மன நிம்மதியைக் கெடுக்கிறது.



அடிப்படையில் அன்றாடத் தேவையான தூக்கத்தைக் கெடுக்கிறது. சமூக உறவுகளில் விரிசலை ஏற்படுத்துகிறது.

சிக்கன வாழ்வின் பயன்கள் எண்ணிலடங்காது. எடுத்துக்கொண்ட பணியில் முழு ஈடுபாட்டைக் காட்ட முடியும். மேலும், கூடுதலான ஒரு வருமானத்துக்கான வழியை ஆக்கப்பூர்வமாகச் சிந்தித்து மனத் திடத்தைப் பெற முடியும். மனத்தின் ஒருமுகத்தன்மையில்



உயர்வு ஏற்படும். குடும்பத்திலும் சமூகத்திலும் மரியாதை கூடும். சிக்கனம் செலவைக் குறைக்கும். செலவு குறைவதால் சேமிப்பு அதிகரிக்கும்.

முன்மாதிரி மனிதனாக நம்மை சேமிப்பு அடையாளம் காட்டும். குழந்தைகளின் எதிர்கால வாழ்வை நிதிச் சுமையின்றி திட்டமிட வைக்கும்.

சிக்கன வாழ்க்கை மன உளைச்சல்களைக் குறைக்கும். உற்சாகம் காரணமாக ஆக்கப்பூர்வமான செயல்களில் மனம் ஈடுபடும். புதிய வருமானத்துக்கான வழிகள் பிறக்கும். நல்ல உறக்கத்தைப் பெறுவதால் செய்யும் பணியில் திறமை கூடும். பணியிடமேலதிகாரிகளின் ஆதரவு பெருகும். பொது வாழ்வில் நேர்மை பெருகும். தனி நபரின் பொருளாதாரப் பின்னணியை வளமானதாக சிக்கனம் மாற்றுவதால், சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருமானத்தைப் பெருக்கும் புதிய வழிகள் புலப்படலாம்.

சிக்கனத்தால் பொருளாதார வல்லமை பெற முடியும்; பொருளாதார வல்லமை ஒரு வரம் என்பதை நாம் நன்கு அறிவோம். கசத்தனம், சிக்கனம், ஆடம்பரம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை உணர்ந்து நமது அன்றாடச் செலவுகளை செய்ய வேண்டும். நடந்து செல்லக்கூடிய தொலைவுள்ள இடங்களுக்கு நடந்தோ, மிதிவண்டியிலோ செல்வதன் மூலம் பெட்ரோல் செலவைச் சேமிக்கலாம். உணவு விடுதி போன்ற வெளி இடங்களில் தேவையில்லாமல் உண்பதைத் தவிர்க்கலாம்.

திருமணம் போன்ற வீட்டின் சிறப்பு நிகழ்வுகளை செய்யும்போது சமயச் சடங்குகளை கோயில்களில் முடித்து விட்டு ஒரு வேளை விருந்து மட்டும் சுற்றங்களுக்கு வழங்கலாம். வீட்டில் உள்ள அனைவரும் ஒரே நேரத்தில் உணவு உண்டு மின் செலவைச் சிக்கனப்படுத்தலாம். அடிக்கடி குடும்பத்துடன் திரைப்படங்களுக்கு செல்வதைத் தவிர்த்து தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் குடும்பத்துடன் பார்க்கலாம்.

நகர்ப்புற வாழ்விடங்களை மறந்து கிராமப்புறங்களில் குறைந்த வாடகைக்கு குடியேறலாம். நல்ல காற்றையும் சுவாசிக்கலாம். பேருந்து பயணங்களைத் தவிர்த்து ரயிலில் மாதாந்திர பயணச் சீட்டைப் பயன்படுத்தி பயணச் செலவைக் குறைக்கலாம். உணவுப் பொருள்களை குடும்ப அட்டையைப் பயன்படுத்தி வாங்கி கணிசமாகச் சேமிக்கலாம்.

எளிய பருத்தி உடைகளை அணியலாம். பணம் மிச்சம். தினமும் நடைப் பயிற்சி சென்று வரும் வழியில் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கலாம். உடலுக்கும் மனதுக்கும் நல்லது.

சமூக ஊடகங்களை நாம் நல்ல முறையில்



பயன்படுத்திக் கொண்டால் நம்மிடையே உறவுகள் மேம்படும். நாம் அனைவரும் சேர்ந்து முன்னேறுவதற்கான ஆக்கப்பூர்வமான வழிகள் புலப்படும். சாத்தியமாகும் அனைத்து நிலைகளிலும் அரசின் நலத்திட்ட உதவிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அரசுப் பள்ளியில் குழந்தைகளைப் படிக்க வைத்து கணிசமான பணத்தைச் சேமிக்கலாம். உடல் நோய்வாய்ப்பட்டால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். படிக்கும் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை, இதர வாய்ப்புகளை முனைப்புடன் பெற்று வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளலாம்.

மொத்தத்தில் எளிய வாழ்க்கைக்கு தேவையான அனைத்துக் கூறுகளையும் ஆராய்ந்து நடைமுறைப்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். குளிர்சாதன அறையில் உறங்க முடியாமல் தவிக்கும் ஒருவருடைய வீட்டுவாசலில், கொசுக்கடியில் குளிரில் உட்கார்ந்து கொண்டே தூங்குகிறார் காவல்காரர். இதுதான் காலத்தின் கோலம்.



எது தேவை? நிம்மதியைக் கெடுக்கும் கடன் சேர்ந்த உல்லாச வாழ்க்கையா? நிம்மதியாக வாழவைக்கும் சிக்கனமான வாழ்க்கையா? கடன் பட்டார் நெசம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன். அந்த நிலை நமக்கு வேண்டாமே. எனவே, அனைவருக்கும் தற்போதைய தேவை வாழ்வில் சிக்கனம்தான்.

வானம் பாத்த மண்ணே....

வானம் பாத்த மண்ணே....
வாசங்காணா பூவே...

கரிசல் காடே...
கருவேல மரமே...

என் வருச நாடே
வறண்ட கூடே...

பாளமா உன்ன பிளந்தாலும்
பவுன மட்டும் தந்தவளே...

விதையது வீழ்ந்தாலும்
வீணா போகாதே...

நீ வாழ வச்ச சனம்
உன்ன வேரறுத்தாலும்...

ஆங்கார ஆகாசமோ
ஆழி அலையோ
அடங்கா நெருப்போ
கோரக் காத்தோ

நாளை நாயம் கேக்கும்
கண்ண கசக்கி நிக்காதே...

சி. பிரபாகரன்

happy new year
2020
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

ஜனவரி

2019

பிப்ரவரி

அய் தமிழ் இந்த இதழோடு தன் ஆறாவது அகவையை நிறைவு செய்கிறது!

2019

மார்ச்

2019



2019

ஏப்ரல்

2019

மே

ஜூன் 2019

2019



ஜூலை

ஆகஸ்ட்

2019



2019 செப்டம்பர்



அக்டோபர் 2019



2019

நவம்பர்



டிசம்பர்

2019

December 2019
தமிழ்
10 ஆண்டில்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
season's greetings

தமிழ் 2019

நற்றமிழரின் நாடித்துடிப்பு

January

February

March

April

May

June

July

August

September

October

December

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

Email: editor@ithamil.com

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा